Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් ஜூன் 04-10, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 359

# நெருக்கடிக்குள் இந்தியா

## எடுக்கப்போகும் முடிவு என்ன?



சிம்ரான் இறங்குறார்

## கிரிக்கெட் சூதாட்டத்தில் கவுண்டமணி-செந்தில்

# முரசம்

## இந்தியாவின் பங்கு?

***அன்புள்ள உங்களுக்கு,***
***வணக்கம்.***

நோர்வே அரசாங்கம்
இலங்கை இனப்பிரச்சனையின்
அரசியல் தீர்வுக்கான
பேச்சுவார்த்தை முயற்சியில்
மீண்டும் இறங்கியுள்ளது.

இந்தியாவுடனும் இலங்கையுடனும்
விடுதலைப்புலிகளுடனும்
முன்னோட்டப் பேச்சுவார்த்தைகளை
நடத்த ஆரம்பித்துள்ளது.

பேச்சுவார்த்தைகளில்
இந்தியாவும் ஒரு
பிரதான பங்கு
வகிக்கவேண்டுமென்ற
சர்வதேச அக்கறை
பெருகி வருகிறது.

உள்நாட்டிலிருந்தும்
பல்வேறு சக்திகள்–
முன்னர் இந்தியாவை
தீவிரமாக எதிர்த்தவர்கள் கூட–
இந்தியா ஏதாவது
பிரயோசனமாகச் செய்யவேண்டுமென
ஆதங்கப் படுகின்றார்கள்.
தமிழ்க்கட்சிகளும்
இந்தியாவின் பங்களிப்பைக்கோரி
அறிக்கை விட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின்
வெளிநாட்டமைச்சர்
லக்ஷ்மன் கதிர்காமர்
இந்தியாவில் வழங்கிய
அண்மைப் பேட்டியில்,
"நிகழ்வுகள் இந்தியாவைத்
தலையிட நிர்ப்பந்திக்கும்"
எனக் கூறியுள்ளார்.

இதேவேளை
இலங்கை எதிர்க்கட்சித்தலைவர்
ரணில் விக்கிரமசிங்கவும்
இந்தியாவை இலங்கை
உதவிக்கு நாடவேண்டுமென
வலியுறுத்தி வருகிறார்.

இந்தியப்பங்களிப்புப்பற்றிய
அழுத்தங்கள் பெருகிவரும்
அதேவேளையில்
சர்வதேச ரீதியிலும்
இலங்கை இனப்பிரச்சனைக்கான
தீர்வின் அவசியம்
வெகுவாக உணரப்பட்டு
வருகிறது.

ஐக்கிய நாடுகள்சபை
பொதுச் செயலாளர்
கொபி அன்னான்,
இலங்கை நெருக்கடி குறித்து
மிகுந்த அக்கறையை
வெளியிட்டுள்ளார்.

இதே சமயம்
ஐ.நா சபைக்குள்ளும்
இலங்கைப் பிரச்சனை குறித்து
தீர்மானம் எடுப்பதற்கு
ஒரு சில முயற்சிகள்
நடந்து வருகின்றனவென
வெளிநாட்டமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு நிகழ்ந்து,
இலங்கைப் பிரச்சனை
சர்வதேச விடயமாவதைத்
தடுப்பதற்காக
இலங்கை அரசாங்கம்
சீனா மற்றும் ரஷ்யா ஆகிய
வீட்டோ அதிகாரம் கொண்ட
நாடுகளின் ஒத்துழைப்பைப்
பெற்றுள்ளதாகவும் அவர்
நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இன்று
இலங்கை நெருக்கடி
ஒரு தீவிரமான பிரச்சனையாக
சர்வதேச சமூகத்தால்
உணரப்பட்டு வருகிறது.

அமெரிக்காவும்,
ஐரோப்பிய ஒன்றியமும்
இவ்விடயத்தில்
கூடுதலான அளவில்
அக்கறை தெரிவித்துள்ளன.

இத்தகைய சூழ்நிலையில்
தற்போது எழுந்துள்ள
யுத்த நெருக்கடிக்கான
அவசரத் தீர்வுகள் மட்டும்
போதுமானவையல்ல.

அதிமுக்கியமான காரியமாக
இனப்பிரச்சனைக்கான
உருப்படியான அரசியல் தீர்வை
உடனடியாக எட்டவேண்டும்.

இதில் காலம் தாழ்த்துவது
ஆபத்தை இன்னும்
உச்சநிலைக்கே
உயர்த்திச் செல்லும்.

ஆனால் இங்கே
அக்கறைகாட்டும் உள்ளூர்சக்திகள் பல
யுத்தத்துக்கு மட்டுமே
பரிகாரம் காண நினைக்கின்றன.
இனப்பிரச்சனைக்கான
தீர்வின் அடிப்படையில்தான்
யுத்தம் கூடக்
கட்டுப்படுத்தப்பட முடியுமென்பதே
அடிப்படை உண்மை.
எனவே இன்று
ஏற்பட்டுள்ள
உள்ளூர், மற்றும்
சர்வதேச அக்கறைகளையும்
நோர்வே நாட்டின்
மத்தியஸ்த முயற்சிகளையும்
இந்தியாவின்
பங்களிப்புப்பற்றி
எழுந்துள்ள அழுத்தங்களையும்
செவ்வனே பயன்படுத்தி
இனப்பிரச்சனைக்கான ஒரு
உறுதியான
அரசியல் தீர்வைக்
கண்டுகொண்டு
அதனடிப்படையில்
யுத்தத்துக்குப் பரிகாரம் காண்பதே
சரியான வழிமுறை.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

# ஆன்மீகம்

## "சத்துருக்களை சிநேகியுங்கள்!"



இயேசு சொன்னார்; "உங்களைச் சிநேகிப்பவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன?" (மத் 5:46)

"நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன், உங்கள் சத்துருக்களை நேசியுங்கள். உங்களை சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள். உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால், நீங்கள் பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள்" (மத் 5:44:45)

நமது சுபாவத்திற்கு மாறான ஒரு காரியத்தை இயேசு நம்மிடம் எதிர்பார்ப்பது போலத் தோன்றினாலும், இதுவே 'தேவ சுபாவம்' என்று நாம் விளங்கிக் கொள்ளலாம். ஏனென்றால் அவர் சொல்லுகிறார்:

"அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப் பண்ணுகிறார். நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்.

இதே சுபாவத்தை நம்மிடமும் எதிர்பார்க்கிறார், "ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்!".

எமது சுபாவங்களில் மாறுதல் இராவிட்டால் நாம் வெளிப்படையாக எதைச் செய்தாலும் அதில் பிரயோசனமில்லை. எங்கள் சுபாவங்கள் இயேசுவின் சுபாவங்களுக்கு ஒப்பாக மாறி விட்டதா என்பதே கேள்வி?

திரு.வேதமாணிக்கம் – கொழும்பு 05.

## இறைதூதரின் உறுதி மொழி

ஒரு முறை அண்ணல் நபி(ஸல்) அவர்கள் ஆயிஷா பிராட்டியாரிடம் கூறினார்கள்: "அதிக செல்வங்களைக் குவித்து வைத்திருக்கும் ஹஸரத் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்பு மௌத்துக்குப்பின் தலை கவிழ்ந்தவாறு சுவர்க்கத்தில் புகுவதாக அல்லாஹ்வால் எனக்கு காண்பிக்கப் பட்டது!" என்றார்கள்.

இச்செய்தியை ஆயிஷா பிராட்டி மூலம் கேள்வியுற்ற அப்துர் ரஹ்மான் துடிதுடித்தார். உடலிலே ஒரு பரபரப்பும் உள்ளத்திலே ஒரு கொந்தளிப்பும் ஏற்பட்டது.

"இவ்வளவு செல்வமும் என்னிடம் இருந்ததால்தானே இச்சுமை என் தலையைத் தாழ்த்தி விட்டது. இதனால் தானே நான் தலை கவிழ்ந்தவாறு சுவர்க்கம் செல்வதாக வள்ளல் நபி அவர்கள் சொன்னார்கள்.

நான் நாளை மறுமையில் தலை நிமிர்ந்தபடி சுவர்க்கம் செல்ல வேண்டும்!" என்று கூறி தன்னிடமிருந்த செல்வங்கள் அனைத்தையும் ஏழைகளுக்கு தர்மம் செய்துவிட்டார் ஹஸரத் அப்துர் ரஹ்மான்.

நிச்சயமாக தான தர்மத்தின் மூலம் அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதோடு கெட்ட மரணத்திலிருந்தும் நாம் பாதுகாக்கப்படுவோம் என்பது இறை தூதரின் உறுதி மொழி.

எம்.சி.கலீல் – கல்முனை 05.

## பக்தியால் என்ன பயன்?


சிஷ்யன் ஒருவன் தன் குருவிடம், "எல்லாம் விதிப்படிதான் நடக்கும் எனில் பக்தியால் என்ன பயன்?" என வினாவினான். குரு அதற்கு பதில் கூறாமல், தனது இரண்டு வேட்டிகளை உடனே தோய்ந்து வருமாறு, சிஷ்யனிடம் கொடுத்தார். சிஷ்யன் அவற்றைத் தோய்ந்து எடுத்து வந்தான். குரு அவற்றுள் ஒன்றை, நல்ல வெளிச்சமான, நேராக வெயில்விழும் இடத்தில் உலர்த்தச் சொன்னார். மற்றொன்றை, இருட்டான காற்றோட்டம் சற்றுமில்லாத ஓர் அறையினுள் உலர்த்தச் சொன்னார். இரண்டையும் மறுநாள் மதியம் எடுத்துக் கொண்டு தன்னைப்பார்க்க வருமாறு சிஷ்யனைப்பணித்தார்.

சிஷ்யன் அவ்வாறேசெய்து, மறுநாள் இரண்டையும் குருவிடம் கொண்டு வந்தான். குரு "இரண்டு துணிகளிலும் என்ன வித்தியாசம் இருக்கிறது?" எனக் கேட்டார். சிஷ்யன் பவ்யமாக, "வெயிலில் உலர்ந்த துணி பளீரென்று, முடமுடப்பாக நன்றாகக் காய்ந்து உடனே உடுத்தும் வண்ணம் உள்ளது! நிழலில் இருட்டில் போட்ட துணியோ, இன்னும் முற்றும் காயவில்லை. அதுமட்டுமன்றி, முடை நாற்றம் அடிக்கிறது!" எனக்கூறினான்.

குரு புன்சிரிப்புடன், "இதுதான் பக்தி உள்ள மனத்திற்கும், பக்தி இல்லாத மனத்திற்கும் உள்ள வித்தியாசம்!" எனக் கூறினார்.

ரீ.குணவர்த்தன–களுவாஞ்சிக்குடி.

## கவிதைப் போட்டி இல.359



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 10.06.2000

கவிதைப் போட்டி இல.359
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.356

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**



### பரிசுக்குரிய கவிதை

### இல்லை நிம்மதி!

மனிதத்தை
மிதித்து வாழும்
மனிதா–நீ
மந்தியென்–நிம்
மதியையும்
மறுக்கிறியே!

றொமிஸ்டன்–கண்டி.

### விதி

உன்னை அடையாளம் காண
அவன் கேட்பது–உன்
அடையாள அட்டையை,
தொலைத்து விட்டாயோ?
உன் தலைவிதி!
சிக்கி விட்டாய்
சில நாட்கள்
சிறை வாசம் செய்!.

வெ.பிரதா–டிக்கோயா.

### சின்னம்

புதுக் கட்சி ஒன்றுக்கு
தலையில் கை வைத்து
கொடுக்கிறாரே குரங்கார்
கட்சி சின்னத்திற்காக
அழகான போஸ்ஒன்று.

கா.ரமேஸ்குமார் –
ஆரையம்பதி–02.

### ஏன் சண்டை?

"எம்மிலே மாற்றமில்லை;
இருந்தபடி இருக்கின்றோம்!
எம்மில் இருந்து வந்த நீரேன்
இனச்சண்டை செய்கின்றீர்?"

இ.தமிழரசி–கிண்ணியா.

நீ ஆட்டுவித்தால்
ஆடும் பம்பரம் நான்!
அகந்தை எனக்கில்லை
அடிபணிவதே எனதெல்லை!

ஆயிஷா பேகம்–ரிதித்தானை.

### வேற்றுமை

மன்னித்துவிடு!
உன்னை விடுவிக்க
மனித உரிமைக்குழு
வரப் போவதில்லை–அது
மனிதர்களுக்கு மட்டுமே!

கமலதாஸன்–பாண்டிருப்பு.

### வழித்தோன்றல்

நடுத்தெருவில்
நட்டநடு வெயிலில்
ஒதுங்க இடமில்லாமல்
உன்னைப் போல
கைதிகளாக சிலர்
அகதிகளாக பலர்
உன் வழித்தோன்றியவர்களில்!

மு.மாதவி–மன்னார்.

### பிழைப்பு

எம்மிலிருந்து பிறந்தவன்
இன்று என்னை
ஆட்டிப்பிழைக்கிறான்!

மூதூர் மனுமிக்கேல்.

### பெருமை கண்டேன்

மனிதனாய் பிறக்கவில்லை என்று
வேதனை அடைந்த நான்
கொடிய போர் கண்டு
குரங்காய் பிறந்ததே மேல் என்று
பிரமனை போற்றுகிறேன்.

எஸ்.கண்ணாளன்–மன்னார்.

### சுதந்திரம்

மானிட சுதந்திரம்
பறிக்கப் பட்டது.
இப்போது என்
சுதந்திரமும் ஒருவன்
கையில் திணிக்கப்பட்டது.

இ.கோமதி–யாழ்ப்பாணம்.

### திண்டாட்டம்

பூக்கள் என்றால் பூந்தோட்டம்;
பறவை என்றால் கொண்டாட்டம்;
மிருகம் என்றால் பந்தாட்டம்;
தமிழன் என்றால் திண்டாட்டம்!

கே.அன்ரனி–திருகோணமலை.

### இன்று!


பரிணாம வளர்ச்சியால்
பாழாய்ப் போனது
மனித உயிர்கள் தான்!

தெ.லோஜனா–கொழும்பு–15.

### சுதந்திரம் தேடி

ஏய் ராமா!
காட்டை விட்டு நாட்டைத் தேடி
கலங்கியே வந்தாயோ
சுதந்திரம் தேடி!
'இவைதானா? என் சுதந்திரம்?' என்று
கையை வைத்தாயோ–உன்
தலையில்!

ரி.யோகதாஸ்–கொழும்பு–15.



*தினமுரசே...*
தித்திக்கும் உன்னை வாரம் ஒரு முறைகாணா விட்டால் கண்கள் கூட தூங்க மறுக்கிறது.

எஸ்.அரவிந்தன்–
மட்டக்களப்பு.

# வாசக(ர்)சாலை

வளர்ந்து கொண்டும்
அனைவர் மனதில்
வாழ்ந்து கொண்டும்
இன்னும் வளர
வேண்டும் என்று
வாழ்த்தப்படும்
என் இனிய முரசே!
வாரம் ஒரு முறை
ஒலிக்கும் உன் முரசத்தை
கேளாத காதுகளும்
உண்டே?
நீ சுமந்து வரும்
அத்தனை அம்சங்களும்
முத்தான அறிவுதனை
வாசகரான எமக்கு வாரி
வழங்குகின்றது.
உன் கவிதைப்போட்டி
முகமான முரசுக்கு வாசகர்
முகத்தை சேர்க்கும்
இனிதான ஒன்று. நீ
இன்னும் வளர்ந்து வளம்
பெற்று வாழ நினைக்கும்
வாசகர்களில் நானும்
ஒருவன்.
வாசகர் இதயங்களை
விட்டு அகலாது ஆட்சி
புரிய என்றும் என்
வாழ்த்துக்கள்.

அஸ்ரீன் அனீபா–
மாளிகாவத்தை.

வாரம் தோறும் சுவையான அம்சங்களைத் தாங்கி வரும் தினமுரசே...

நீ வியாழன் தோறும் எம் கரங்களில் கிடைக்கும் வரை வழி மேல் விழிவைத்து காத்திருப்போம், உன்னைக் கண்டதும்தான் எங்கள் இதயங்கள் மலரும்

நரன் தரும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அதிரடி அய்யாத்துரை', 'தேன் கிண்ணம்', 'இலக்கிய நயம்' போன்ற அம்சங்கள் எம் மனங்களை என்றோ கவர்ந்து இன்றும் வீறு நடை போடுகின்றன.

ஈழத்தின் இணையற்ற எழுத்துச் சிற்பி.. எஸ்.டி.சிவநாயகம் பற்றி நாம் அறிந்திராத நல்ல தகவல்களைத் தரும் இரா.பத்மநாதனுக்கு நன்றி.

இத்தகைய நல்ல அம்சங்களை என்றும் தருவதில் முன்னோடி நீதான் என்று சொன்னால் அது மிகையாகாது எனலாம்.

என்.எல்.முஸம்மில்–புதிய காத்தான்குடி–06.

*அன்பின் தினமுரசே.......*

நீ அள்ளி வரும் அத்தனை அம்சங்களும் வெகு பிரமாதம். அதிலும் குறிப்பாக 'தேன் கிண்ணம்', 'சிந்தியா பதில்', இலக்கிய நயம்', 'சினிவிசிட்' பகுதிகள் என்னைக் கவர்ந்தவையாகும். இருப்பினும் என் அன்பு வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு கவிதை பிரியர்களுக்காக பிரபல கவிஞர்களின் கவிதை தொகுப்புக்களிலிருந்து ஒவ்வொரு பகுதியாக வாரா வாரம் வழங்கி எம்மை மகிழ்விப்பாயா? உன் பணி தொடர எனது குட்லக்.

ஆர்.நித்தியானந்தன்–நாவலப்பிட்டி.

*என் இனிய முரசே!*

வாரா வாரம் உன் இதழுக்காக ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து, உன் வரவுக்காக காத்திருக்கிறேன். நீ வந்த பிறகு உன்னை நான் அள்ளி அணைத்து என் கண்களில் ஒற்றியபின்தான் என் மனதுக்கு மகிழ்ச்சி. நீ இன்னும் நீண்டகாலம் வாழ்க! வளர்க என்று வாழ்த்துகிறேன்.

எஸ்.சித்திரா–குவைத்.

*மும்மடங்கு வணக்கத்துடன் முரசிற்கு!*

தமிழர் எண்ணம், பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் தனி மனித வாழ்விலும், சமூக வாழ்விலும் எவ்வளவு சிறந்தவை என இப்பத்திரிகை எடுத்துக் காட்டுகிறது. சங்க காலப் புலவர்களின் கருத்தருவியும், புனலோடையும் வாழ்வினில் இணைந்து பிணைந்து மணந்து வளர வாழ்த்துக்கள். முரசின் வாழ்வு மேலும் சிறப்புப்பெற்று தழைத்து வளமுற உதவும் என்பது என் எண்ணம்.

தமிழர்கள் பயன்பெற்று மென்மேலும் சிறந்தோங்குக!

அ.சாம்பவி–திருகோணமலை.

*கசப்பாய் கிடந்த என் உள்ளத்துக்கு*
*இனிப்பூட்ட வந்த முரசே!*
உன் இனிய மொழிகள்
என்னை கவர்ந்துள்ளன.
உன் சுவாரசியமான வசனமும்
என் உள்ளத்தில் பதிந்து
உள்ளது.
நீ சுமந்து வரும்
அனைத்து அம்சங்களும்
என்னை மகிழ்ச்சிப் படுத்தியது.
உன் சேவை
என்றென்றும் தொடர
என்றும் என் வாழ்த்துக்கள்

மொஹம்மட் அனஸ்–சவுதி அரேபியா.

*தினமுரசே!*
நிம்மதியற்ற
இவ்வுலகினிலே
உயிர்ப்பித்து
வளர்ந்துவிட்ட
உனது உடல்
அங்கங்கள் ஒவ்வொன்றும்
எனக்குப் பிரியமானவையே!
உன் தோற்றம் காணத் தவறினால்
என்னால் ஒரு கனம் கூட ஜீரணிக்க முடியாது
நீ எந்நாளும் வாழ்க, வளர்க,

எம்.ஆர்.றஸீனா–நிக்கவெவ.

*அன்பின் தமிழ் முரசே!*

தமிழுக்கு நீ கொடுக்கும் முக்கியத்துவம் வரவேற்கத்தக்கது. என்னைப் போன்ற பற்பலரை உன்பால் ஈர்க்கச் செய்வதும் அதுவே. இன்னும் பல்லாண்டு காலம் தமிழுக்காக ஒலிக்க இருக்கும் முரசே! உட்கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்து தமிழ் என்ற அந்தப் பொன்னான பதத்திற்காக யார்யார் கஷ்டப்படுகிறார்களோ அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சர்வதேச மட்டத்திலும் தமிழுக்கான தலை சிறந்த ஒரு பத்திரிகை தினமுரசுதான் என்பதை யாவரும் உணர வைக்க வேண்டும். எனவே தமிழ்! தமிழ்! தமிழுக்கு முக்கியத்துவம் மேலும் மேலும் கொடுத்து ஒலிக்க வேண்டுமென்பதோடு பல்லாண்டு காலம் உன் பணி தொடர வாழ்த்துகிறேன்.

கு.சங்கர்–இலண்டன்.

**மடல்கள் மற்றும்**
**ஆக்கங்கள்– உட்பட சகல**
**தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:–1772, கொழும்பு.**
**தொலைபேசி: 074–514282**
**தொலை நகல் (Fax):– 074-513266**

### அறிவித்தல்

**உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்து விட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.**

*–நிர்வாகி.*

# உதவி வழங்க முன்வரும் நாடுகள் போர் நிறுத்தத்துக்கு வழிகோலலாகாதா?

## பொதுமகன் விடுக்கும் வினா இது!

**உக்கிரமடைந்துவரும் வடபுல போரின் கொடுமையை தணிக்கவும் இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வினை எட்டவும் உதவப் போவதாக பல நாடுகள் உதவிக்கரம் நீட்டுகின்றன. அந்நாடுகளின் இராஜதந்திரிகள் இங்கு வந்து தலைவர்களுடன் உரையாடிவிட்டுத் திரும்புகின்றனர். சில நாடுகள் போர்த் தளபாடங்களையும் இலங்கை இராணுவத்துக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளன. இத்தகைய வெளிநாட்டு சக்திகள் ஒன்றிணைந்து அவர்களுடைய செல்வாக்கை, இரு தரப்பினரிடமும் பிரயோகித்து, பேரழிவை விளைவித்துக் கொண்டிருக்கும் போரை நிறுத்துவதற்கு ஏன் முன்வரவில்லை. அன்றாடச் செய்திகளை நோட்டமிடும் இந்நாட்டின் அப்பாவிப் பொதுமகனின் கேள்வி இதுதான்!**

வடபுலப் போர் நாளுக்குநாள் உக்கிரமடைந்தே போய்க்கொண்டிருக்கிறது. இதன் உண்மையான தாக்கத்தை இந்நாட்டின் வேறு பகுதிகளில் வாழும் மக்கள் அறிந்து கொள்ள முடியாதவாறு செய்தித் தணிக்கை எனும் தடிப்பமான திரையைப் போட்டு அரசாங்கம் தடுத்து விட்டது. அரசாங்கம் வெளியிட்டு வரும் இராணுவச் செய்திகள் மட்டுமே ஊடகங்கள் மூலம் மக்களுக்கு எட்டுகின்றன.

இத்தணிக்கை காரணமாக இயல்பாகவே வதந்திகள் பெருகுவதை எவராலும் தடுக்க முடியாது.

### பேரழிவு

உண்மை எதுவாக இருந்த போதிலும் போரினால் பேரழிவு ஏற்பட்டு வருவதை எல்லோரும் உணராமலில்லை. உயிரிழப்புக்கள், உடமைகளுக்கான சேதங்கள் பற்றி மக்களின் ஊகங்கள் மலையளவு விரிவடைந்து வருகின்றன. இதனால் நாடு முழுவதிலுமே பதற்றநிலை உருவாகி வருகிறது.

வடபுலத்தில் தங்களுடைய சொந்தங்களுக்கும் பந்தங்களுக்கும் என்னதான் நடைபெற்றிருக்குமோ என்பதை அறியாமல் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்கள் கவலை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

மனவேதனை ஒருபுறமிருக்க, அடுத்து என்னதான் நடக்கப் போகிறது என்ற சிந்தனையும் மக்களை குழப்பமடையைவைத்த வண்ணமுள்ளன. இது இந்நாட்டில் வாழும் தமிழர்களை மட்டும் பாதிக்கும் நிலையல்ல. நாடு முழுவதிலுமுள்ள சகல இனத்தவர்களையும் சகல மதத்தவர்களையும் பெரிதும் பாதிக்கும் நிலைப்பாடாக இருக்கிறது.

### உதவ முன்வரும் நாடுகள்

இந்நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சனையை தீர்த்து வைக்கப் போவதாக பல நாடுகள் குரல் கொடுக்கின்றன. அயல் நாடான இந்தியா இராணுவ ரீதியிலல்லாமல் மனிதாபிமான உதவிகளைச் செய்யப் போவதாகக் கூறிவருகிறது.

நோர்வே நாடு கடந்த சில மாதங்களாக தனது உயர்நிலையிலான சமாதானத் தூதுவர்களை அனுப்பி வருகிறது. அவர்களும் இங்கு வந்து ஒருநாள் அல்லது இருநாட்கள் தங்கிவிட்டு, தலைவர்களுடன் சிலமணிநேரம் உரையாடிவிட்டு சென்றுவிடுகின்றனர்.

பிரிட்டனிலிருந்தும் இராஜதந்திரிகள் அடிக்கடி வருகின்றனர். நோர்வேயின் பாணியிலே தலைவர்களுடன் உரையாடிவிட்டு செல்கின்றனர். இப்போது அமெரிக்காவிலிருந்தும் பிரதி ராஜாங்க அமைச்சர் இலங்கைக்கு வந்து சிலமணி நேரம் மட்டும் தங்கி ஜனாதிபதி, வெளியுறவு அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைச் சந்தித்து உரையாடிவிட்டு திரும்பியுள்ளார்.

### அமெரிக்க போர்க் கப்பல்கள்

அமெரிக்காவின் யுத்தக் கப்பல்கள் வளைகுடாவிலிருந்து இலங்கைக்கு அருகே அரபுக் கடல் வழியாக வந்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன. இக்கப்பல்களில் விமானம் தாங்கிக் கப்பல் ஒன்று இருப்பதாகவும் அதிலிருந்து ஒரு போர் விமானம் இலங்கையின் வான் எல்லைக்குள் ஊடுருவி, யாழ்ப்பாணத்தீபகற்பத்தை நோட்டமிட்டுச் சென்றுள்ளதாகவும் பின்வந்த செய்திகள் கூறுகின்றன.

இஸ்ரேல் நாட்டிலிருந்து போர்விமானங்களும் வேறு தளபாடங்களும் கொண்டு வந்து குவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை சீனாவும் விமானங்கள், போர்த்தளபாடங்கள் முதலியவற்றுடன் போர்த்தளபாடங்களை இயக்கவல்ல தொழிநுட்பவியலாளர்களையும் வழங்கப் போவதாக அறிவித்துள்ளது.

இந்தியாவின் தென்மேற்குக் கரையிலுள்ள கேரள மாநிலத்தின்தலைநகரான திருவனந்தபுரத்தில் தனது விமானப்படை விமானங்கள் பலவற்றை கொண்டு வந்து குவித்து, ஆயத்த நிலையில் படைகளையும் வைத்திருப்பதாக அறிவித்துள்ளது. அத்துடன் தமிழ் நாட்டின் தென்கரையோரப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இத்தகைய செய்திகளை கவனித்துவரும் இந்நாட்டு மக்கள் பலதரப்பட்ட உணர்வுகளுக்குள்ளாகின்றனர்.

இத்தகைய நிலை தொடருமானால் அதன் முடிவு எங்கே போய் முடியப் போகிறதோ தெரியாது என்றே பெரும்பான்மையானவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

இத்தனைக்கும் இத்தனை நாடுகளும் ஒன்று சேர்ந்து ஒரே குரலில், மோதலில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகளையும், அரசாங்கத்தையும் ஒரு வழிக்குக் கொண்டு வர ஏன் முயற்சிக்கவில்லை, என்பதுதான் இந் நாட்டின் அப்பாவிப் பொதுமகனின் கேள்வியாகும்.

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வரும் இந்தப் போரினால் எண்ணற்ற உயிர்கள் வீணாக மாண்டு மறைந்து விட்டன. பல கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான உடமைகள் சீரழிந்து போய் விட்டன. நாட்டின் பொது இயற்கை வளங்கள் யாவும் வரண்டு அழிந்து வருகின்றன. நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்துக்குச் சென்று கொண்டிருக்கிறது. வீசப்படும் குண்டுகளாலும் எறிகணைகளினாலும் வெளிவரும் நச்சுக் காற்றும் புகையும் வேறு சேர்ந்து எஞ்சியுள்ள மக்களின் சுகாதாரத்துக்கே ஊறு விளைவிக்கின்றன. இதனால் எமது-இனிமேல் வரும் சந்ததிகளும் நிச்சயம் பாதிக்கப்படுவர்.

இக்கொடுமைகளிலிருந்து விடுபடுவதானால் ஒரே வழி உடன் போர் நிறுத்தமே. இலங்கையின் இன்றைய நிலைக்கு உதவ முன்வரும் வெளிநாட்டுச் சக்திகள் உடனடியான போர் நிறுத்தத்துக்கு ஆவன செய்வார்களா?

இதுதான் சாதாரண அப்பாவிப் பொதுமகன் இன்று விடுக்கும் வினா!

## அரசாங்க வைத்தியசாலையில் கட்டணம் அறவீடு

பொலன்னறுவை-வெலிக்கந்த அரசாங்க வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளிடம் கட்டணம் அறவிடப்படுவதாக அங்கு சிகிச்சை பெறச் செல்வோர் தெரிவிக்கிறார்கள்.

தொலை தூரப் பகுதியிலிருந்து இந்த வைத்தியசாலைக்கு வரும் கிராமப் புற ஏழை நோயாளிகளே கட்டணம் அறிவிடப் படுவதால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சிறியோர், முதியோர், கர்ப்பிணிகள், பெண்கள், பாடசாலை மாணவர்கள் என்று பல்வேறு தரப்பினரிடமும் பணம் அறவிடப் படுகிறதாம்.

ஒரு நாள் வாட்டில் தங்கிச் சிகிச்சை பெற நூறு ரூபா, சேலைன் பாய்ச்சுவதற்கு 400/- ரூபா, மகப்பேற்றுக்கு 2000/- ரூபா, விசர்நாய்க் கடி ஊசி போடுவதற்கு 1500/- ரூபா, கொலரா தடுப்பிற்கு 100/- ரூபா என்ற விதத்தில் பணம் பெறுவதாகக் பொது மக்கள் கூறுகிறார்கள்.

இந்த வைத்திய அதிகாரியின் நடவடிக்கையால் தமிழ் முஸ்லிம் கிராம மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறர்கள்.

"இங்கு மருந்து, குளிசை வசதி எதுமில்லை. அதனால் பொலன்னறுவைக்கு அல்லது குருநாகலைக்குத் தான் நோயாளிகளை எடுத்துச் செல்ல வேண்டும்!" என ஆரம்பத்தில் கூறி விட்டு, "என்றாலும் எனது முயற்சியில் மருத்துவ சிகிச்சையளிக்கிறேன். பணத்தைக் கட்டுங்கள்!" எனக் கூறுகிறாராம் அந்த வைத்தியர்.

பெரும்பான்மைச் சமூகத்தினர் செறிந்து வாழும் இப்பகுதியல் சிறுபான்மை மக்கள் வைத்திய சிகிச்சை நாடிச் செல்லும் ஒரு வைத்தியசாலை இதுவாகும்.

இந்த வைத்தியரின் சட்ட விரோதமான பண அறவீட்டின் காரணமாக வறிய மக்கள் மனமுடைந்து போயுள்ளதாகத் தெரிவிக்கிறார்கள். சுகாதார அமைச்சு பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்திலெடுப்பார்களா?

## வட-கிழக்கு தனி அரசை அமெரிக்கா ஆதரிக்காது

"வட-கிழக்கு பிரதேசத்தில் தனியான ஓர் அரசை உருவாக்கும் புலிகளின் எண்ணத்திற்கு அமெரிக்கா ஒரு போதும் ஆதரவளிக்கப் போவதில்லை!" என்று இலங்கைக்கு வந்திருந்த அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் தோமஸ் பிக்கரிங் இங்கு தெரிவித்தார்.

கடந்த 29ம் திகதி திங்கட்கிழமை இலங்கைக்கு வந்து சேர்ந்த திரு.பிக்கரிங் ஜனாதிபதி சந்திரிக்கா, வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரையும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களையும் சந்தித்து உரையாடினார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்ந்த திரு.பிக்கரிங், இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தாலும் அவற்றுக்கு அமெரிக்க அரசாங்கம் ஆதரவு வழங்கும் என்றும் கூறினார்.

திரு.பிக்கரிங்கும் குழுவினரும் இலங்கை வருவதற்கு முன்னர் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சென்றிருந்தனர். அந்நாட்டுத் தலைவர்களுடனும் திரு.பிக்கரிங் இலங்கை பிரச்சனை தொடர்பாக கலந்துரையாடினார் என்றும் கூறப்படுகிறது.

## கடத்தலுக்குப்பின் வாகனத் தடை!

மட்டக்களப்பிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் வாகனங்கள் தற்சமயம் கொழும்பு-மட்டக்களப்பு நெடுஞ்சாலையிலுள்ள பிள்ளையாரடியில் சில மணிநேரங்கள் தடுத்து வைக்கப்படுகின்றன.

காலை எட்டு மணிக்குப் பின்னரே வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. மட்டக்களப்பு,கொழும்பு பதுளை, கண்டி, திருமலை போன்ற தொலைதூரப் பகுதிகளுக்குச் செல்லும் பயணிகள் இந்த வித தடைகளால் பெரிதும் சிரமப்படுகிறார்கள்.

சமீப சில நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்பு-வந்தாறுமூலையில் பயணிகள் பஸ்வண்டியொன்றும், பிரதேச செயலாளரின் பிக்-அப் வாகனமொன்றும் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டிருந்தது. அதன் பின்னரே இப்பொழுது நேரகாலத்துடன் செல்லும் வாகனங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

## மன்னார் அபிவிருத்தித் திட்டங்கள் தாராபுரம் புறக்கணிப்பு!

(மன்னார் நிருபர்)

மன்னார் தீவிலுள்ள தாராபுரம் கிராமம் மன்னார் பிரதேச சபையின் அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து புறக்கணிக்கப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த பல தசாப்தங்களாக மன்னாரில் நிலவிவரும் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் இன்னும் எடுக்கப்படவில்லை.

மன்னாருக்கு குடிநீர் வினியோகம் மேற்கொள்ள முருங்கனில் தொடங்கியுள்ள நீர் ஆராய்ச்சித் திட்டம் கூட, ஆமைவேகத்திலும் நூறுமடங்கு மெதுவாகவே நடைபெறுகின்றது. இத்திட்டம் பூர்த்தியாக இன்னும் பல ஆண்டுகள் செல்லும்.

இந்த நிலமையிலும் மன்னாருக்கான குடிநீர் பிரச்சனையை ஓரளவுக்கேனும் தீர்க்கும் பொருட்டு கடந்த ஐந்து வருட காலமாக பல பவுசர்கள் மூலம் தாராபுரத்திலிருந்தே நீர் பெறப்படுகிறது.

இந்த நீர் மூலம் பெருமளவு பணம் சம்பாதித்துள்ள இந்த பிரதேச சபை, பவுசர் சென்ற பாதை படுமோசமாகி உள்ள போதிலும் அதனை சீரமைக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தர்ராபுரம்-தாழ்வுபாடு வீதியின் முன் பகுதி மற்றும் மீராண்யா ஜும்மாப் பள்ளிவீதி என்பன படுமோசமாக காட்சி தருகின்றன.

தாராபுரம்-தாழ்வுபாடு வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குரியது. ஆனால் இவ்வீதி தார் வாசனையை கடந்த 15 வருடங்களாக அறியவில்லை.

இதேவேளை தாராபுரத்திலிருந்து இவ்வளவு தண்ணீர் மன்னாருக்கு கொண்டு வரப்படுகின்ற போதிலும் மன்னார் புதிய பஸ்நிலையப் பகுதியில் உள்ள பொதுநீர்த் தாங்கிக்கு நீர் நிரப்புவதே இல்லை. தகிக்கும் வெயிலில் பொது மக்கள் படும் அவதியை குறைக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்காது என்றே பொதுமக்கள் கருதுகின்றனர்.

## சமுர்த்தி குடும்பங்களில் உணவு முத்திரைகள் பறிமுதல்?

(காரைதீவு நிருபர்)

கல்முனைப் பிரதேசத்திலுள்ள 14 ஆயிரம் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களது இருமாத உணவு முத்திரைகள், பொருட்கள் வழங்காமலே பலவந்தமாக பெறப்பட்டிருக்கிறது என தெரிகிறது. இந்த திடுக்கிடும் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி கூட்டுறவு அமைச்சர், வடகிழக்கு ஆளுநர் மாகாணகூட்டுறவு ஆணையாளர், கல்முனை பிரதேச செயலாளர் ஆகியோருக்கு அவசர 'தொலைநகல்' மகஜர்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

விபரம் தெரியவருவதாவது :

'கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 14 ஆயிரம் சமுர்த்தி பெறும் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

ஒவ்வொரு குடும்பமும் மாதமொன்றுக்கு ரூ 225/- பெறுமதியான உணவு முத்திரையைப் பெறும். அதைக் கொண்டு ப.நோ.கூ. சங்கக்கிளையில் உணவுப்பொருட்கள் பெற்றுவருவது வழக்கம்.

ஆனால் இந்த வருடத்தில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், மாதங்களுக்கான உணவு முத்திரை மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குரிய பொருட்களும் வழங்கப்பட்டன.

இதே வேளை ஏப்ரல், மே மாதங்களுக்கான உணவு முத்திரைக்கான உணவு பொருட்கள் இன்னும் வழங்கப்படவில்லை. மாறாக அவ்வுணவுமுத்திரைகளை உரிமையாளர்களின் விருப்பமின்றி பொருட்கள் வழங்காமல் பலவந்தமாக ப.நோ.கூ. சங்கத்தினர் பெற்று வருகிறார்கள்.

அது பலத்த அதிருப்தியையும், ஆத்திரத்தையும் உண்டுபண்ணியுள்ளது.

## ஏவுகணை எதிர்ப்புக் கருவிகள் தரையில் வீழ்ந்தன

கட்டுநாயக்க விமானப்படை விமானத் தளத்திலிருந்து யாழ்ப்பர்ணத்திலுள்ள புலிகளின் தளங்கள் மீது குண்டு வீசுவதற்காக கடந்த திங்கட்கிழமையன்று புறப்பட்டுச் சென்ற விமானத்தில் இருந்த சில பொறிகள் தவறுதலாக தரையில் வீழ்ந்துள்ளன. சீதுவை பொலீஸ் பிரிவைச் சேர்ந்த மூக்களங்கமுவ என்ற பகுதியிலேயே இவை விழுந்துள்ளன.

ஏவுகணை தடுப்புக் கருவியின் சில பாகங்களே இவ்வாறு தரையில் வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இருப்பினும் இதனால் எவருக்கும் சேதமேற்படவில்லை என்று செய்தியொன்று கூறுகிறது.

## கோவில் கொள்ளை வழக்கில் குருக்கள் விடுதலை

(காரைதீவு நிருபர்)

பெரியகல்லாறு சர்வாத்த சித்தி விநாயகராலயத்தில் இடம்பெற்ற மர்மக் கொள்ளை தொடர்பான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி பொலிஸார் தொடுத்த வழக்கிலிருந்து எதுவித குற்றமுமின்றி தலைமைக்குரு. சிவஸ்ரீ.ச.நித்தியானந்த குருக்கள் உள்ளிட்ட நால்வரும் விடுதலையானார்கள்.

மேற்படி ஆலயத்தில 12.5.1999 இல் இடம் பெற்ற மர்மக் கொள்ளையில் 61 பவுண் சுத்தத் தங்கம் (3 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதி) கொள்ளையடிக்கப் பட்டது தெரிந்ததே.

பிழையான சாட்சியத்தின் அடிப்படையில் தொடுத்த வழக்கு கடந்த 10 மாதங்களாக மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தது.

பிரதமகுரு.ச.நித்தியானந்த குருக்கள் தலைமையிலான நால்வரும் சிறைச்சாலையில் வைக்கப்பட்டு தவணைக்கு சென்றனர். ஆனால் வழக்குத் தொடுத்தவர் சாட்சியமளிக்க முன்வரவில்லை. அத்துடன் சந்தேக தடயப் பொருட்கள் கைப்பற்றப்படவுமில்லை.

அதனையடுத்து இவ் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனவே ஆலய அர்ச்சகராக இருந்த ஒருவரால் செய்யப்பட்ட பழிவாங்கும் நோக்குடனான பொய்யான முறைப்பாட்டால் இவ்விபரீதமும் அவமானமும் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக துண்டுப் பிரசுரங்களும் வெளிவந்துள்ளது. சமூகத்தின் நன்மதிப்பு பெற்ற நித்தியானந்தக் குருக்கள் போன்றோரை அவமானப்படுத்தியது இந்து மதகுருமார் உலகில் வெட்கப்படவேண்டிய சம்பவம் எனக்குறிப்பிடப்பட்டது.

## மாணவியின் உரைக்குக் கிடைத்த பரிசு விஞ்ஞான ஆய்வுகூடம்!

(காரைதீவு நிருபர்)

மாணவியொருவரின் உருக்கமான உரையால் பாடசாலையொன்று 7 இலட்ச ரூபா பெறுமதியான விஞ்ஞான ஆய்வுகூடமொன்றைப் பெற்றுக் கொண்டது.

இச் சம்பவம் சம்மாந்துறை சென்ரல் சாஹிறாக் கல்லூரி மாணவி ஏ.எச்.ஆயிஷா பர்வின் என்பவரால் ஏற்பட்டது. வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூட நிகழ்ச்சி சம்மாந்துறை மத்திய கல்லூரியில் நடைபெற்ற வேளையில் அப்போதைய கல்விச் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவும் கலந்து கொண்டிருந்தார். நிறைவு நாள் வைபவத்தில் மாணவர்களின் கருத்துக்களுக்கு இடமளிக்கப்பட்டது. அவ்வேளை சென்ரல் சாஹிறாக் கல்லூரி மாணவி ஆயிஷா பர்வின் தமது பாடசாலை விஞ்ஞானப்பாட செய்முறைக்காக படும் கஷ்டத்தை மிகவும் உருக்கமாக எடுத்துக் கூறினார்.

"இதற்கு தக்க பரிகாரம் காணுவேன்," என்று செயலாளர் சுந்தரம் டிவகலாலா பதிலளித்தார். கூட்டமும் நிறைவுற்றது. அவர் திருமலை சென்றதும் மாணவியின் உரைக்கு மதிப்பளித்து விஞ்ஞான ஆய்வுகூட அமைப்பிற்காக 7 இலட்சத்து 13 ஆயிரத்து 300 ரூபாவை ஒதுக்கினார்.

அதற்குரிய வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

## விபுலாநந்தா கல்லூரியின் பொன்விழாவுக்கான ஆயத்தங்கள்

காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு கல்லூரியின் பழையமாணவர் சங்கம் பாரிய பங்களிப்பைச் செய்து வருகிறது.

பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும், தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அம்பாறைமாவட்ட முகாமையாளருமான கனகசபை பத்மநாதன் தலைமையில் இப்பங்களிப்பு நடவடிக்கைகள் கடந்த மாதம் 25ம் திகதி ஆரம்பமானது. பொன்விழாச் சின்னம் பொறிக்கப்பட்ட அழகான பீங்கான் நினைவுச்சுவடுகள் கிராமத்தில் விநியோகிக்கப்பட்டன. கூடவே நிதிச் சேகரிப்பும் இடம்பெற்றது.


இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற்றது. சங்க போஷகரான டாக்டர்.கே.பரமானந்தம் முதலாவது நினைவுப் பீங்கானை பெற்றுக் கொண்டார்.

மேலும், "பொன்விழாமலரை வெளியிடுவதற்கான பொறுப்பையும் எமது சங்கமே பொறுப்பேற்றுள்ளது" என்று சங்கச் செயலாளரும், ஐ.நா.வின் முன்னாள் அதிகாரியுமான கே.கிருபேந்திரா கூறினார்.

மே 15ம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழுவும் தெரிவானது. தலைவராக கே.பத்மநாதன், செயலாளராக கே.கிருபேந்திரா, பொருளாளராக ஆர்.திருச்செல்வம், உபதலைவராக என்.லோகராஜ், உபசெயலாளராக சே.சசிகரபவான் ஆகியோரும் நிருவாகசபை உறுப்பினர்களாக எண்மர் தெரிவானார்கள், போஷகர்களாக அதிபர்.சி.அருள்மொழி, டாக்டர் கே.பரமானந்தம் ஆகியோர் தெரிவாகினர்.

# பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி

## வழங்கிய சான்றிதழ்


Rajalingam Thenadhayalan
18-8-89
Hindu
P. Rajalingam
92/13, Arumuga Road, Dematagoda
Hindu College Colombo - 4
07-01-95
11781
19-5-2000
Parents Wish
Reading in gr. 6
According to Govt. syllabus
Good
PRINCIPAL
HINDU COLLEGE
19-5-2000

**ப**ம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் 6ம் ஆண்டில் படித்துவிட்டு, பெற்றோருடன் வெளிநாடு சென்று அங்கு தன் படிப்பைத் தொடர விருக்கும் ஒரு மாணவனுக்கு, இந்துக் கல்லூரி வழங்கியுள்ள சான்றிதழ் இதுதான். தமிழ் மாணவனுக்கு தமிழில் தான் சான்றிதழ் வழங்கா விட்டாலும் சான்றிதழுக்கான படிவமாவது ஆங்கிலத்தில் அமைந்திருக்க வேண்டாமா?

இலங்கையை விட்டு வெளியேறினால் எந்த நாட்டு கல்வி நிறுவனங்களிலும் சிங்கள மொழி ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இத்தகைய சான்றிதழை வெளிநாடொன்றுக்குக் கொண்டு போனால், அங்குள்ள இலங்கைத் தூதரகத்துக்கு கொண்டு சென்று, அதற்கான கட்டணம் வேறு செலுத்தி, மொழிபெயர்த்தெடுத்து அங்குள்ள அதிகாரியின் அங்கீகாரம் பெற வேண்டும்.

தமிழும் அரச கருமமொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. என்பது வெறும் ஏட்டுச்சுரக்காய் தான் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



## சகானா 29.05.2000

இலங்கையில் புத்தூர் வடக்கை சேர்ந்த தவராசா- இந்திரவதனா தம்பதியினரின் செல்வப் புதல்வி சகானா தனது முதலாவது பிறந்த நாளை. 29.05.2000 அன்று **Swiss Zurich** ல் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, இலங்கையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, சித்தப்பாமார், மாமாமார், சித்திமார், பெரியம்மா, பெரியப்பா, அக்காமார், அண்ணாமார், மாமா, அத்தை, மச்சான் மற்றும் **Swiss** ல் வசிக்கும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் தெல்லிப்பளை துர்க்கையம்மன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- வாசன் (கொழும்பு)


# மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஜூன் 20 முதல் 28 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 609388.

**கல்முனையில் ஜூன் 03, 04 திகதிகள்.**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஜூன் 10, 11 திகதிகள்.**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.





# மஹாசக்தி வசிய மருத்துவம்

(எல்லாப்புகழும் இறைவனுக்கே)

*மட்டக்களப்பு மலையாள மாந்திரீக கடல் கடந்த விஷேட வெற்றிகள்.*

பலதலைமுறை பரம்பரை தெய்வீக இராஜ வைத்தியம் குருசக்தி நிலையம் கல்லடி, மட்டக்களப்பு, இலங்கை.

GONT APPROVED CHARICABLE SERVICES CENTER Reg.No.HA14/BT/176

**மஹாசக்தி உபாசனா பூசகர்**

புரதன நவீன மருத்துவ மனோதத்துவ "(மந்திரயோகி)"
YOGI-DR.T.MYLVAGANAM (M.B.B.S.H. (இந்தியா)
R.H.M.P.DAe அக்குப்பஞ்சர் (இலங்கை)
MINISTRY OF HEALTH REGISTERED MEDICAL PRACTITIONER Ree.No.061

கர்மவினைகளினால் தீயசக்திகளினால் தீயவர்களினால், ஏற்பட்ட தீராத உடல்நோய், மனநோய், வேறு பிரச்சனைகளை தீர்த்து எத்துன்பங்களும் அணுகாமல் காவல்செய்து, காதல் திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத் தடைகளை நீக்கி சகல காரியங்களிலும் வெற்றிபெற்றுச் சந்தோஷமாக வாழ காதலர்கள் ஒன்று சேர கணவன்-மனைவி குடும்பப்பிரச்சனைகள் இன்றி பிரியாமல், இன்னபமாக இருக்க, பிரிந்தவர்கள் வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் வந்து உறவாக தகாத ஆண்-பெண் உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க வேறு நன்மையான காரியங்களுக்கு மஹா சக்தி மந்திர யந்திரவசியங்கள் செய்துகொள்ள-வரமுடியாத கடல் கடந்த, வெளி நாட்டவர்கள் தபால் பாக்ஸ் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு இறைபரிகாரப்பொருட்களை விஷேட தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கிறார்கள்.

(SEX) செக்ஸ்- ஆண்பெண்களின் சகலவிதமான பாலியல் பால் உறுப்பு பிரச்சனைகள், மலடு ஆண் பெண்மை வீரியக் குறைவு, குழந்தைகள் இல்லாக் குறைபாடுகள்.
ASTHMA (ஆஸ்த்மா) ஈனை, முச்சு, தொய்வு, இரைப்பு, இழுப்பு, இளைப்பு கடுமையான களைப்பு பலவீனம், சகலவிதமான கர்மநோய்கள் உட்பட இவைகளோடு சேர்ந்திருக்கும் வேறுநோய்களும், பைத்தியம் சகல விதமான மனநோய்கள், தீராத தலையிடி, கண்பார்வைக்குறைவு, தலைமுடி பழுத்தல், கொட்டுப்படல், வளர்ச்சியின்மை, ஞாபகசக்தி குறைவு உடல்மெலிவு இவைகளுக்கு விஷேட அனுபோக மருத்துவ மனோத்துவ யோகாசன தியான ஆண்மீக அறிவுரைகளையும் பெற்றுக் கொள்ளலாம். விரும்பிய குருதட்சணையை அளித்து நேரில் வந்து மாந்திரீக சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.


**நாடவேண்டிய விலாசம்**

INDI-YOGA-HOMOEOPATHY-S INDIAMEDICAL RESEARCH & SERVICES

GRUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
KALLADY-BATTICALOA (P.O.) (SRILANKA)
தொ.பே. 065/24872 பாக்ஸ்:- 065-23796
கொழும்பில் சந்திக்க முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.







S. Manjula
Vipulananda st
Akkaraipattu 02
2000 - 01 - 26

Dear Sir,
I am very happy to learn that I have joined your training Centre you gave me the best Advantage in the period Thank you so much.
I can easily understand this exercise and I improve my knowledge. Now I find a change in my Spoken English and writing also.
I would like to follow the Business English Course. Any way Thanks a lot for your interest in me. I will keep recommending this course to my relatives and Friends
Thankyou

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்தில் தபால் மூலமாக கற்றுத்தரப்படும்

எம்மிடம் கல்விகற்கும் மாணவ/ மாணவிகளின் கருத்தே எமது கல்வி நெறியின் சிறப்புத் தன்மையாகும்

*நீங்களும் பயமின்றி ஆங்கிலம் பேச வேண்டுமாயின் மேலதிக விபரங்களுக்கு 3.50 முத்திரையொட்டிய சுயவிலாச மிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க...*

BRIGHT BOOK CENTRE BRIGHT FUTURE IN YOUR HAND

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S-27, First Floor, P.O. BOX 162.
Colombo Central Super Market
Complex Colombo-11. T.P. 434770


# விளம்பரப் பகுதி




## மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்



நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக **P. K. SAAMY ASSOCIATE (PVT) LTD**ஐ உருவாக்கியது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தை பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

தீரும் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அந்தந்த ஆட்டருக்கு உரியவரிடம் பார்சல் போய் சென்றடைய உலகளாவிய ரீதியில் பிரதிநிதித்துவம் அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரீக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே! 33 மாந்திரிகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மனதார நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ, தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பீ. கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி இலக்கங்கள்: **466271, 466571, 431137, 470615, 342463, 342464, 344831, 344832** இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை நீங்கள் ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தூண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.

கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
**Dr. P. K. Samy (J.D.G.A.N) JP**

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail : drpksamy@sltnet.lk

இன்னும் எமது சேவைகளை அறிய எமது இன்டர்நெட் வெப் தளத்தை நாடவும்
Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami

**வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:**
வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.
வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.


# ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் ✻ 14 05 1942



ஆண்டவனடியில் ✻ 11 06 1999

## அமரர் திருமதி கணபதிப்பிள்ளை சந்திரமதி

[கண்டாவளை]

எம் அன்பு இதய தெய்வமே ஆண்டு ஒன்று மறைந்தாலும் உங்கள் அன்பு நினைவுகள் என்றும் மாறாது.

பாசத்தின் உறைவிடமே பண்பின் குலவிளக்கே அறிவுரைகள் பல சொல்லி எம்மை ஆளாக்கிய எமதருமைத் தாயே!

அகிலத்தில் எங்கேனும் உங்கள் அன்பை ஈடேற்ற வழியுண்டோ.

தந்தையில்லா வேளையிலும் தத்துவங்கள் சொல்லி நின்றாய் இன்னல் பெரிதெனினும் இன்முகம் காட்டி நின்றாய் இன்றெம்மை விட்டு இறைவனிடம் சேர்ந்து விட்டாய் நீயில்லா பொழுது எல்லாம் நீண்டெம்மை வாட்டுதம்மா. அம்மா மீண்டுமொரு முறை பெற்ற செல்வங்களிடம் வந்திடாயோ அம்மா.


வாய் விட்டு சொல்லியழ வார்த்தையின்றி தவிக்கிறோம். உங்கள் பிரிவைவிட்டுநித்தம் கலங்கி கண்ணீரால்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்

உங்கள் பிரிவால் துயருறும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தாய், சகோதரங்கள், மைத்துனிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்: க. முருகதாசன் (மகன்), கொழும்பு-10.

# நவசித்தர் மருத்துவம்

வாதம், நீரழிவு, பீனிசம், தீராததலைவலி, வெள்ளை படுதல், கிரந்திநோய், சுவாதம், முடியுதிர்தல் தாது நஷ்டம் இன்னும் அனேக நோய்களுக்கு வைத்தியம் செய்வதோடு, கிரகதோஷங்கள், ஆவிகளின் தொல்லை, எதிரிதொல்லை, விரும்பியவரை வசப்படுத்த, வேண்டாதவரை விலக்க, கல்வி, தொழில் முன்னேற்றமடைய, வீடு வளவு காவல் செய்ய, குடும்பப்பிரச்சனை தீர சக்திவாய்ந்த மூலிகைகளின் மூலம் பராசக்தியின் அருளால் மாந்திரீக மருத்துவமும் செய்யப்படும். மட்டக்களப்பு, சித்த, ஆயுள்வேத பரம்பரை மருத்துவர்.

T.M.PILLAI, "YOHANANTHA VAITHIYASALAI"
118/B, MAIN STREET, PANDIRUPPU - 01, KALMUNAI. SRI LANKA.



தங்களின் வாழ்க்கையின் கஸ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாண தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன் மனைவி கருத்துவேறுபாடு. ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும் பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

சந்திக்கும் நேரம் காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை

விலாசம் :
MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.
தொலைபேசி-0142552036



உலகப் புகழ்பெற்ற

# எக்ஸ் ஒயில்

TRADE MARK

- ✳ காய்ச்சல்
- ✳ தலைவலி
- ✳ தலைச்சுற்று
- ✳ தலைப்பாரம்
- ✳ ஜலதோஷம்
- ✳ இருமல்
- ✳ மூக்கடைப்பு
- ✳ பல்வலி
- ✳ காதுவலி
- ✳ வயிற்றுவலி
- ✳ வாதத்தால் வரும் வலிகள்
- ✳ உணர்ச்சியற்ற பாகங்கள்
- ✳ சுளுக்கு
- ✳ தசை வலிகள்
- ✳ பூச்சிக் கடிகள்
- ✳ பிரயாணக் களைப்பு
- ✳ மதுவால் ஏற்படும் பிரச்சினை




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி.**

ஏக விநியோகஸ்தர் :

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya,
Tel : 888214 Fax : 682984

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நெருக்கடிக்குள் இந்தியா

## எடுக்கப்போகும் முடிவு என்ன?

இந்தியா என்ன செய்யப்போகிறது? பலருக்கு இது இன்றைய கேள்வி. பலருக்கு இது இன்றைய பரபரப்பு.

பலருக்கு இது இன்றைய எதிர்பார்ப்பு.
பலருக்கு இது இன்றைய சர்ச்சை.
பலருக்கு இது இன்றைய சங்கடம்.
பலருக்கு இது இன்றைய அச்சம்.
சிலருக்கு இது இன்றைய விசனம்!

இந்தியா வந்து விடுமா என்று அஞ்சுபவர்கள் தொடக்கம் இந்தியா வரமாட்டாதா என்று ஏங்குபவர்கள் வரை இன்று இந்தியா அதி அக்கறைக்குரிய ஒரு பாத்திரத்தை ஏற்றுள்ளது. ஆனால் அந்தப் பாத்திரத்தைப் பெறுவதற்காக அது இன்று செய்த காரியம் வேறொன்றுமல்ல. வெறுமனே இலங்கைக்கு அருகே பாரிய நாடாக வீற்றிருந்ததுதான்! மற்றதெல்லாம் இலங்கையில் நிகழ்ந்து வரும் போராட்டத்தின் உக்கிரத் தன்மையால் அதற்குத் தானாகக் கிடைத்த மவுசே!

இந்தியா இலங்கைக்கு அயல்நாடாக அமைந்துவிட்டதும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு வல்லரசாகத் தன்னை நிலைநிறுத்தக்கூடிய சக்திவாய்ந்த நாடாகத் திகழ்வதும் விரும்பியோ விரும்பாமலோ இலங்கைக்கு சில அரசியல் எல்லைகளை வீழ்ந்தால் என்ன ஆகுமென்ற பயம் அதற்கு உள்ளூர உண்டு. யாழ்ப்பாணத்துக்கான யுத்தத்தில் அகதிகள் பலர் இந்தியாவுக்கு வந்து சேருவர் என்ற விடயம் ஒருபுறமிருக்க, யாழ்ப்பாணம் முதல் வவுனியா வரையிலான பெரும் நிலப்பரப்பு புலிகளின் கீழ் வரும். அவ்வாறு வந்தால் புலிகள் இந்தியாவின் கையை மீறிய ஆட்சியதிகாரமொன்றைக் கைப்பற்றியவர்களாகி விடுவார்கள். அதன் பின் அவர்களை இந்தியா விரும்பும் ஒரு அரசியல் தீர்வுக்கு இணங்க வைப்பது கடினம். ஏற்கெனவே இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்குப் புலிகள் தலைவர் பிரபாகரனை, யாழ்ப்பாணத்திலிருந்து ஹெலிகொப்டரில் அழைத்துச் சென்று இணங்கவைத்த முயற்சி சிதறுண்ட அனுபவம் இந்தியாவுக்கு உண்டு. எனவே இன்றுள்ள நிலையில் புலிகளிடம் அது சாத்தியப்படுமென இந்தியா எதிர்பார்க்க முடியாது.

அத்தோடு, துறைமுகம், விமான நிலையம் உட்பட இப்பாரிய பிரதேசம் புலிகளின் சுதந்திரமான கட்டுப்பாட்டுக்குள் வீழ்ந்தால் புலிகளின் பல்வேறு பாரிய நடவடிக்கைகள் அங்கு மேற்கொள்ளப் படலாம். பல கப்பல்களைத் தருவிக்கவும், விமானங்களை வாங்கவும், அல்லது இலங்கைக்கு நெருக்கடி ஏற்படுத்தவேயன்றி பிரிவினைக்கு உகந்ததாக அவ்வுதவிகளின் அளவும் தரமும் இருக்கவில்லை. இதன் நோக்கம் இவ்வாயுதக் குழுக்கள் வாயிலாக இலங்கையை நெருக்குதலுக்குள்ளாக்கி தன்னிடம் பணியவைக்கும் உதவியாகவே அமைந்திருந்தது.

அத்துடன் தனக்கு அருகில் நிகழும் ஓர் ஆயுதப் போராட்டத்தில் தனது கட்டுப்பாட்டை வைத்திருப்பது அவசியம் என்பதாலும் விடுதலை இயக்கங்களைத் தன்னில் தங்கியிருக்கும் வண்ணம் பார்த்துக் கொள்ள இவ்வுதவிகளை அது செய்தது.

ஆனால் ஏனைய இயக்கங்கள் போலல்லாமல் புலிகள் இந்தியாவின் பிடி தம்மீது இறுகி விடாதிருக்கும் எச்சரிக்கையுடனேயே ஆரம்பம் முதல் இருந்து வந்துள்ளனர். அவர்கள் இந்திய உதவிகளுக்குப் புறம்பாக, தாமே தமது தனிப்பட்ட முயற்சிகளால் தமது காலில் தங்கி நிற்கக்கூடியளவு தம்மை வளர்த்துக் கொள்வதற்குப் பெருமுயற்சியெடுத்தனர்.

அதனால் இந்தியாவின் எண்ணத்தின்பால் புலிகளைச் செலுத்த முடியவில்லை. இதன் உச்சக்கட்டமாக அவர்கள் இந்தியப் படைகளை எதிர்த்துப் போராடவும் பின்னிற்கவில்லை.

தில் உதவ முன்வரும் நாடுகள் இந்தியாவின் விருப்பு வெறுப்புகளுக்கு மாறாக இலங்கைப் பிரச்சனையில் சில பிடிகளைப் பற்றிக்கொள்வதும் தவிர்க்க முடியாததாகிப் போய்விடும்.

அதேவேளை இந்தியாவால் ஏன் உடனடியாக உதவ முடியவில்லையென்பதற்கும் பல காரணங்கள் இருக்கின்றன. முதலாவது காரணம் கடந்த கால அனுபவம். இந்தியா இலங்கை உடன்பாட்டையடுத்து ஏற்படுத்தப்பட்ட மாகாணசபைத் தீர்வை அமுலாக்க வந்த இந்தியா, புலிகளால் தாக்கப்பட்டதோடல்லாமல் அப்போதைய இலங்கை அரசாங்கத்தாலேயே அவமானகரமான முறையில் திரும்ப அனுப்பப்பட்ட விடயம் எல்லோருக்கும் தெரிந்ததே.

அதனால் விரலைச் சுட்டுக்கொண்ட இந்தியா மீண்டும் அத்தகைய வழியில் இறங்கத் தயங்குவது புரியக்கூடிய ஒன்றே.

இதேவேளை அப்போது இந் நடவடிக்கைகளை மேற்கொண்ட ராஜீவின் காங்கிரஸ் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்த பி.ஜே.பி. அதையேதனது ஆட்சியில் செய்ய விளைவதை தன்மானத்துக்கும் இழுக்கானதான ஒன்றாக உணரும் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

காங்கிரஸ் ஆட்சிக்கு எதிர்மறையாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் பி.ஜே.பி. அரசாங்கம் இலங்கைப் பிரச்சனையில் தலையிடாக் கொள்கையையே எடுத்துவந்தது.

ஆனால் அது அதிகூடிய ஒரு பின்வாங்கலாக இப்போது அதன் சில அரசியல் விமர்சகர்கள் விமர்சிக்கிறார்கள்.

இத் தலையிடாக் கொள்கை காரணமாக பங்காற்ற இறங்கிவிட்ட நோர்வேயைப் பின் தள்ளி இந்தியாவை முன்னிறுத்துவது சங்கடமென்றும், இந்தியா நோர்வேக்கு உதவும் வகையில் பங்காற்றலாமெனவும், புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதற்கு தனது செல்வாக்கைப் பயன்படுத்தலாமெனவும் இலங்கை கூறுகிறது.

அத்தோடு இப் பிரச்சனையில் ஆர்வம் காட்டும் அமெரிக்காவும் கூட இந்தியாவுக்கு இப் பிரச்சனையில் பிரதான பங்கு இருப்பதாகக் கூறிக்கொண்டாலும் இந்தியாவை நோர்வேக்கு அனுகூலமாகச் செயற்படவே ஆலோசனை கூறுகிறது. நோர்வேயையே அமெரிக்கா பேச்சுவார்த்தையை நடத்தத் தகுதியான நடுவராக தற்போதும்மெச்சி வருகிறது.

இன்னும் இந்த நடவடிக்கைகளில் அமெரிக்கா தானும் தனது செல்வாக்கைப் பிரயோகிக்கும் வகையிலான அரசியல் பேச்சுவார்த்தைகளில் நேரடியாக இறங்கி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் தனது பிரதிநிதியாக ராஜாங்க அமைச்சர் பிக்கரிங்கை நேரடியாக அனுப்பிவைத்துள்ளது.

இந்நிலையில் இந்திய ராஜதந்திரத்துக்கு சவால் ஏற்பட்டுள்ளது. தான் பின்னிற்கும் ஒவ்வொரு கணமும் இப்பிரச்சனை தனது கையைவிட்டு விலகிச் செல்லக்கூடியதாகவும் இதில் வெளிச் சக்திகளின் செயற்பாட்டுக்கான இடைவெளிகள் பெருகிச் செல்வதையும் அது ஒருபுறம் உணரத் தலைப்பட்டுள்ளது.

இதனாலேயே சில அவசர ராஜதந்திர முயற்சிகளை இந்தியா மேற்கொண்டுள்ளது.

தனது படைகளை உஷார்நிலையில் வைத்

விதிக்கவே செய்கின்றன. பிராந்திய அரசியல் முதல், இலங்கைக்குள் குணாம்சரீதியான மாற்றங்களுக்கு வழிவகுக்க முனையும் அரசியல் நெருக்கடிகள்வரை இந்தியாவின் அக்கறைக்குட்பட்டதாயிருப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

பிராந்திய அரசியலில் இந்தியாவின் கொள்கையையும், பாதுகாப்பையும் மீறுகின்ற எந்த நிலைமைக்கும் இந்தியா இடம் கொடுக்கப் போவதில்லை. அதற்கு அந்நியருக்கு களமமைத்துக் கொடுக்கக்கூடிய எந்தவொரு வாய்ப்பையும் அது வழங்கவிடப் போவதில்லை. அப்படியொரு நிலை ஏற்பட்டால் அதற்குப் பரிகாரம் காணத் தன்னை முன்னிலைப்படுத்துமேயன்றி, வேறு எவருக்கும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

அதேபோல் இலங்கையின் உள்நாட்டு நெருக்கடிகளிலும் கூட தனது தேசிய நலனைப் பாதிக்கும் சூழ்நிலைகள் தோற்றம் பெற்றால் அதனைக் கையாள விளைவது அதன் இயல்பான, உள்ளுணர்வின்பாற்பட்ட செயற்பாடாகிவிடும்.

இவை இந்தியாவில் ஆட்சியேறும் அரசாங்கத்தைப் பொறுத்த விடயமல்ல; இந்திய ராஜீய யந்திரம் செயற்படும் விதம் இது.

அதனால்தான் இலங்கையில் யாழ்ப்பாணத்தைத் தக்கவைக்க ஒரு புறமும் கைப்பற்ற மறுபுறமுமாக மிக இக்கட்டான நிலைக்கு வந்துவிட்ட உக்கிர மோதல்களில் இந்தியாவால் வெறும் பார்வையாளனாக இருக்க முடியவில்லை.

இந்த மோதல்களில் ஏற்படக்கூடிய முடிவுகளையும், விளைவுகளையும் குறித்து இந்தியா உள்ளூரப் பெரும் கவலை கொண்டிருக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை தற்போதைய நிலையில் சில விடயங்கள் பிரதானமானவை. ஒன்று, இலங்கைப் பிரச்சனையில் தன்னை விடுத்து வேறொருநாடு தலையிடுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. ஆனால் படிப்படியாக பல்வேறு நாடுகளதும் ஈடுபாடு இங்கு அதிகரித்து வருவதைத் தடுத்து, தனக்குக் கீழ்படுத்துவது எப்படி என்பது அதற்கு எழுந்துள்ள ஒரு அவசர நிலமை.

அதேவேளை இலங்கைக்கு, தான் இராணுவ ரீதியில் உதவப் போவதில்லையெனத் தெரிவித்து, மனிதாபிமான உதவிகளை மட்டுமே செய்யத் தயாரெனக் கூறியுள்ள இந்தியா, இந்த இடைவெளியைப் பயன்படுத்தி வேறெந்த நாட்டினரும் தன்னை மீறிய ஒரு இராணுவத் தலையீட்டுக்கு வழியேற்பட்டுவிடாதுப் பார்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக, பாகிஸ்தான், சீனா, போன்ற தனது எதிரி நாடுகள் நுழைந்துவிடாதிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமென்பது அதற்குப் பிரதானமானது.

மறுபுறம் புலிகள் குறித்தும் அதற்குக் கவலைகள் உள்ளன. ஒன்று, புலிகளை தனது விருப்பத்திற்கேற்பக் கட்டுப் படுத்த முடியாது என்பது இந்தியாவுக்குத் தெரியும். இலங்கையைக் கூட இந்தியாவால் கட்டுப்படுத்த முடிந்தாலும் புலிகளை அப்படித் தன் வழிக்குக் கொண்டுவர அதனால் முடியாது.

அடுத்து யாழ்ப்பாணம் புலிகளின்கையில் தயாரிக்கவும், பல்வேறு வெடிபொருட்களை உற்பத்தி செய்யவும் முடியும். இத்தகைய நடவடிக்கைகளுக்கு உலகின் பல்வேறு சக்திகளிடமிருந்து உதவி பெறவும் முடியும். இவற்றை இந்தியா விரும்பப்போவதில்லை. தனது கைகளை மீறி அருகிலிருக்கும் ஒரு பிரதேசத்தில் பாரதூரமான தயாரிப்புகள் இனம்தெரியாத சக்திகளின் ஒத்துழைப்பில் நிகழ்வதை இந்தியா ஓர் ஆபத்துச் சமிக்ஞையாகவே கருதும்.

இதேவேளை இந்தியாவிலிருந்தும் புலிகளின் நடவடிக்கைகளுக்கான தொடர்புகளும், செயற்பாடுகளும் கணிசமான அளவு அதிகரிக்கும். குறிப்பாக பெற்றோல், டீசல், உணவுப் பண்டங்கள் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான கடத்தல் நடவடிக்கைகள் கட்டுப்பாடின்றிப் பெருகும்.

அத்தோடு இந்தியாவுக்குள்ளும்-குறிப்பாகத் தென்னிந்தியாவுக்குள்ளும் புலிகளின் நடமாட்டங்களும் நடவடிக்கைகளும் பெருகும். இத்தகைய விடயங்கள் இந்தியாவுக்கு மகிழ்ச்சிதராது.

இதைவிட அடுத்தகட்டமாக பிரிவினை என்பது சாத்தியமாகிவிட்டால், அல்லது அந்த எண்ணக்கரு இந்தியாவிலும் நம்பிக்கையைத் தோற்றுவித்து விட்டால் தனது ஒருமைப்பாட்டுக்கும் தேசிய நலனுக்கும் ஆபத்து ஏற்பட்டுவிடுமென்ற அச்சம் இந்தியாவுக்கு உண்டு. ஏற்கெனவே, இந்தியா பிரிவினையை ஆதரிக்காதென பல தடவைகள் கூறியுள்ளது. இந்தியாவுக்குள்ளும் காஷ்மீர், அஸாம், சீக்கியப் போராட்டங்கள் நிகழ்ந்தவண்ணமுள்ளன. தமிழ்நாடுகூட பிரிவினைக்காக ஒரு காலத்தில் போராடிய மாநிலமே. அங்கு இன்னும் தீவிரப்போக்குடையவர்கள் இருக்கவே செய்கிறார்கள். இவர்கள் உந்தப்பட்டால் இந்தியாவுக்கு மீண்டும் உள்நாட்டுத் தலையிடிகள் பெருக ஆரம்பித்துவிடும். இதற்கு அடிகோலக்கூடிய இலங்கைப் பிரிவினையை அது ஆதரிக்கப் போவதில்லை.

இந்தியா இத்தகைய நிலைப்பாட்டில்தான் செயற்படுமென்பது புலிகளுக்கும் தெரியும். அதனால்தான் இந்தியாவை தமது போராட்டத்துக்கான உதவுகர சக்தியாக புலிகள் நம்பவில்லை. அவர்கள் இந்தியாவின் அமைவிடம், மற்றும் அங்கிருக்கக்கூடிய பல்வேறு சாதகமான அம்சங்களைத் தமக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்ள விளைந்தார்களேயன்றி, தாம் இந்தியாவினால் கட்டுப்படுத்தப்படாதவாறு இருப்பதில் விழிப்பாக இருந்தார்கள். ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் இந்தியா ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவளித்து வந்தது உண்மை. இதனை தற்போதும் கூட ஜனாதிபதி சந்திரிக்கா சுட்டிக் காட்டியுள்ளார். இத்தகைய ஆதரவு வழங்கிய காரணத்தால் அதனால் விளைந்த இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இந்தியா ஒத்துழைக்க வேண்டிய கடப்பாடு அதற்கு உண்டென அவர் தனது அண்மைய பேட்டியென்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு விடுதலை இயக்கங்களுக்கு இடம், பயிற்சி, ஆயுதம், வெடிமருந்துகள், பணம் போன்றவை இந்தியாவால் வழங்கப்பட்டிருந்தாலும் அவையாவும் ஒரு குறிப்பிட்ட அளவே வழங்கப்பட்டன. அதாவது,



எனவே இந்தியாவுக்கு புலிகள் பற்றி அதிக எச்சரிக்கை உணர்வு இருக்கவே செய்யும். இந்த நெருக்கடியான யுத்த நிலைமையின்போதும் இந்தியா புலிகள் மீதான தனது தடையை மீண்டும் நீடித்துள்ளது. இது அதற்கு புலிகள் பற்றியுள்ள அபிப்பிராயத்தைத் தெளிவுபடுத்துகிறது. அதேவேளை இலங்கை அரசாங்கத்துக்கு தன்மீது எந்த சந்தேகக் கண்ணும் விழுந்துவிடக் கூடாதென்பதற்காகக் காண்பிக்கும் ஒரு சமிக்ஞையாகவும் இது அமைந்துள்ளது.

இந்தியா இத்தகைய கருத்துக்கள் நிலைப்பாடுகள், எச்சரிக்கைகள், அனுபவங்களைக் கொண்டிருந்தாலும் தற்போது எழுந்துள்ள நெருக்கடியில் என்ன செய்யப் போகிறது என்பதே பிரதானமான கேள்வி.

அல்லது இன்னொருபுறமாகக் கூறுவதானால் தற்போதைய இலங்கை நெருக்கடியில் தனது எண்ணக்கருக்களை எவ்வாறு செயல்வடிவம் கொடுக்கப் போகிறது என்பதே அதற்குள்ள சவால்!

இதனை ஆராயும் போது தற்போதய நெருக்கடியின் தார்ப்பரியத்தையும் சிறிது உற்றுநோக்க வேண்டும். புலிகளின் வசம் ஆனையிறவு முகாம் வீழ்ந்ததும் யாழ்ப்பாணத்தை வீழ்த்தும் கடும் யுத்தத்தில் அவர்கள் இறங்கியிருப்பதும் இலங்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாக எழுந்ததையடுத்து இலங்கை அவசர முயற்சிகளில் இறங்க நேரிட்டது. இத்தகைய ஒரு அந்தராபத்தான நிலையில் இலங்கை போன்ற ஒரு நாடு தன்னைக் காத்துக் கொள்ள எடுக்கும் அவசர ராஜதந்திர நடவடிக்கைகளைத் தடுக்க முடியாத நிலைமை இந்தியாவுக்கு உண்டு. இவ்வாபத்துக்கு உடனடி உதவியாக இந்தியாவை இலங்கை நாடிய சமயம் இந்தியா உதவ முன்வரவில்லை. அப்படி அதனால் உதவ முடியாத பட்சத்தில் இலங்கை ஏனைய நாடுகளிடம் உதவி கேட்டுச் செல்வதைத் தடுக்கும் தார்மீக உரிமையும் இந்தியாவுக்கு இருக்கப்போவதில்லை.

இவ்வாறு இந்தியா பின்னடிக்கும் சமயத் இலங்கைப் பிரச்சனைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியம் என்ற கோரிக்கை வலுப்பெற்ற போதும்அதைத் தன் பங்காற்றலுக்கான சாதகமான களமாக்கத் தவறிவிட்டது. இதே புலிகள்கூட பேச்சுவார்த்தைகளுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வலியுறுத்திய போதும் அம் மத்தியஸ்தராக இந்தியாவை வாய்மொழியாது தவிர்த்தே வந்தது.

இருந்தும் தான் நீண்டகாலமாக விலகியிருப்பதால் தனது நிலைக்கு ஆபத்தேதும் ஏற்பட்டுவிடப் போவதில்லையெனவே அது நம்பியிருந்தது.

**— நரன் —**

பேச்சுவார்த்தைகளின் மூன்றாம்தரப்பு மத்தியஸ்தராக நோர்வே நாடு முன்வந்த போது அதையிட்டு இந்தியா அலட்டிக் கொள்ளவில்லை. நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கான அங்கீகாரம் புலிகள், தமிழ் கட்சிகள், இலங்கை அரசாங்கம், எதிர்க் கட்சிகள் என்ற பலதரப்பாலும் மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் வலுப்பெற்றுவந்த போது இந்தியா மறைமுகமாக உதாசீனப் படுத்தப்படுவதை பாரதூரமான ஒன்றாக அது உணரவில்லை.

ஆனால் திடுதிடுப்பென ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடி இந்தியாவின் விலகிநிற்கும் கொள்கையை ஒரு ராஜதந்திரத் தோல்வியாக பல்வேறு மட்டங்களில் கருத வைத்துள்ளது.

இப்போது இந்தியா பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்கத் தயாரெனக் கூறிவருகின்ற போதிலும், அதற்கு இருபகுதியுமே அழைப்பு விடுக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளது. ஆனால் அப்படி எவரும் இன்னும் கோர முன்வரவில்லை. இலங்கையோ இந்தியா தன்னிடம் அவ்வாறு உத்தியோகபூர்வமாகக் கோரவில்லையெனக் கூறுகிறது. ஆனால் இந்தியா இலங்கை தன்னிடம் உத்தியோகபூர்வமாகக் கோரவேண்டுமென எதிர்பார்க்கிறது. இந்நிலையில் ஏற்கெனவே

திருப்பதன் மூலமும், அவற்றைத் தென்னிந்தியக் கரைகளுக்கு நகர்த்துவதன் மூலமும் வெளிநாடுகளுக்கு ஒரு எச்சரிக்கை சமிக்ஞையைக் காட்டுகின்ற அதே நேரம் தான் தலையிடுவதற்கான மார்க்கத்தையும் அது தனது கையில் வைத்திருக்கும் ராஜதந்திர வியூகங்களையும் அமைத்து வருகிறது.

அதற்கான ஒரு வழியாகவே 'மனிதாபிமானத் தலையீடுக்கு' தான் தயார் என அது கூறிவருகிறது. முன்னர் 1987ல் இந்தியா தலையிட்டபோதும் 'மனிதாபிமானத் தலையீடு' என்ற வாயிலினூடாகத்தான் உணவுப் பொட்டலங்களை விமானம் மூலம் போட்டுக் கொண்டு தனது தலையீட்டை நிகழ்த்தியது. ஆனால் உணவுப் பொட்டலத்தில் தொடங்கி எங்கு முடிந்தது என்பது யாவருக்கும் தெரியும். இப்போது அதே 'மனிதாபிமான' சுலோகத்தைத்தான் அது உச்சரித்துக்கொண்டிருக்கிறது.

அதேவேளை மிகத் துரிதமாகவே இந்தியாவுக்குள், குறிப்பாகத் தமிழ்நாட்டில் கூட இலங்கை விடயத்தில் தனது எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிர்ப்பில்லாத சூழ்நிலையை உருவாக்கி விட்டது. அத்துடன் இலங்கையிலும், இந்தியாவின் பரம எதிர்ப்பாளர்களாக இருந்த பலதரப்பினரும்இப்போது இந்தியாவின் தலையீட்டை தாமாகவே கோருமளவுக்கு நிலைமை மாற்றம் கண்டுள்ளது.

எனவே இலங்கையில் ஏதாவதொரு முக்கியமான அரசியல், இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் தருணத்தில் இந்தியா தன்னை அங்கு முன்னிலைப் படுத்தத் தவறப் போவதில்லை என்பதை எதிர்பார்க்கலாம். அதற்கான சூழ்நிலைகள் திரண்டுவருகின்றன.

"சம்பவங்கள் இந்தியாவை நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கும்" என அண்மையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியதுபோல் இந்தியாவில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தியப் பிரதமரின் பேச்சிலும் இப்போது பிடிகொடுக்காத சூசகத்தனம் தெரிகிறது. முன்னர் இலங்கையில் இராணுவத் தலையீடு என்ற பேச்சுக்கே இடமில்லையென மறுத்து வந்தவர் அண்மைக் காலங்களில் இந்தியா எந்த நடவடிக்கைக்கும் தயாராகவே உள்ளது எனக் கூறத் தலைப்பட்டுள்ளார். 'எந்த நடவடிக்கை' என்று குறிப்பாகக் கூறாத பட்சத்திலும்அது பல்வேறு அர்த்தங்களைத் தொனிப்பதாய் உள்ளது.

இதேவேளை இந்தியா தான் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை மிகச் சாமர்த்தியமாகவும், யாரும் குறை கூறா வண்ணமும் நகர்த்தவே முனைகிறது. அதாவது அடம் பிடிக்கும் குழந்தையை நேரடியாக அடிக்க முனையாது, இறுக்கக் கட்டியணைத்து அன்பாக அடக்குவது போல! ஆனால் வெளியாருக்குப் புரியாவிட்டாலும் குழந்தைக்குப் புரியும்தானே, அவ்வணைப்பில் கொடுக்கப்படும் அழுத்தம்! ■

## செய்திச் சிதறல்

★ **வி**ளைகுடாக் கடலில் நிலைகொண்டிருந்த அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த போர்க்கப்பல்கள் தெற்கே பயணமாகக் தொடங்கியிருப்பதாக இரு வாரங்களுக்கு முன்னர் தகவல்கள் எழுந்தன. புலிகளுடன் மோதிக் கொண்டிருக்கும் இலங்கை இராணுவத்துக்கு தார்மீக ஆதரவு வழங்குவதற்காகவே இந்நகர்வு என்றும் செய்திகள் வெளியாயின. ஆனால் அமெரிக்க ராஜாங்க பிரதி அமைச்சர் தோமஸ் பிக்கரிங் இலங்கைக்கு வருவதையொட்டியே மேற்படி போர்க்கப்பல்கள் இந்து சமுத்திரப் பிரதேசத்துக்கு விரைவதாக மற்றுமொரு செய்தி கூறுகிறது. எவ்வாறிருப்பினும் இலங்கையில் தற்போதுள்ள நிலையில் அமெரிக்கப் போர்க்கப்பல்களின் நகர்வு, பல வகையான சந்தேகங்கள் எழ வாய்ப்பினை ஏற்படுத்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

★ **ஓ**ய்வு பெற்ற முப்படை மற்றும் பொலிஸ் படையைச் சேர்ந்தவர்களை மீண்டும் சேவையிலீடுபடுமாறும் அரசாங்கம் கோரிக்கை விடுத்திருக்கிறது. இவ்வாறு அழைக்கப்படுபவர்கள் இராணுவ முன்னரங்க நிலைகளுக்கோ போர் முனைகளுக்கோ அனுப்பப்படமாட்டார்கள் என்றும் ஏனைய பிரதேசங்களில் பணியாற்றவே அழைக்கப்படுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ **ஆ**ளும் பொதுஜன முன்னணியைச் சோர்ந்த 30 பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்த 40 பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து ஒரு கூட்டமைப்பினை ஏற்படுத்தியுள்ளனர். தனிப்பட்ட இலாபங்களையோ தாம் சார்ந்துள்ள அரசியற் கட்சியின் இலாபம் கருதியோ செயற்படாமல், நாட்டில் இன்று எழுந்துள்ள நெருக்கடியை மனதில் கொண்டு மக்களை ஒன்று படுத்துவதற்காகவே இக் கூட்டமைப்பினை ஏற்படுத்துவதே தமது நோக்கம் என்று இதன் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். தமது நோக்கங்களை விரைவில் நாட்டு மக்களுக்கு அறிவிக்கப் போவதாக கூறியுள்ளனர்.

★ **இ**ராணுவத்திலிருந்து வெளியேறியவர்கள் மீண்டும் இராணுவத்தில் இணைந்து கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டிருந்த காலக்கெடு ஜுன் மாதம் 10ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ **வி**டுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழ்ப் பிரதேசத்தின் முதலமைச்சராகலாம். ஆனால் இவர் தனது பயங்கரவாதக் கொள்கையை விட்டு தேசிய நீரோட்டத்தில் இணைய வேண்டும், என்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். இந்தியத் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியின் போதே ஜனாதிபதி இக்கருத்தைக் கூறினார். புதிய அரசியல் யாப்பின் அடிப்படையில் உருவாக்கப்படவிருக்கும் அலகு ஒன்றுக்கு பிரபாகரனே தலைமை ஏற்று பரிபாலனம் செய்ய வாய்ப்பிருக்கிறது என்றும் அவர் மேலும் சொன்னார். ■

# அண்டை மண்டலத்தில்....

# ஈழப்பிரச்சனையும் தமிழ்நாட்டுத் தமிழரும்


யாழ் குடா நாட்டில் உக்கிரமான போர் நடக்கிறது, தமிழ் நாட்டில் மக்கள் எந்த அளவு அக்கறையுடன் இருக்கிறார்கள்? அவனவன் சன் டி.வி. பார்த்துக் கொண்டு காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறான். பொதுமக்கள் அளவில் இலங்கைத் தீவில் நடக்கும் மோதல்கள் பெரிய அளவில் பாதிப்பு எதையும் ஏற்படுத்தவில்லை.

காங்கிரசும், த.மா.கா.வும் இணைந்து முல்லைப் பெரியார் பிரச்சனை குறித்து போராட்டம் நடத்தவிருக்கிறார்கள். ஜெயலலிதாவும், தினகரனும் கோவில், கோவிலாகப் போய், சிறப்பு நீதி மன்றங்கள் இன்னும் இடிகளைத் தராமலிருக்க வேண்டுமே என்று இறைவனை வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். கலைஞரின் 77வது பிறந்த நாளைக் கொண்டாடுவதில் தி.மு.க. முனைப்பாக இருக்கிறது, வை.கோ.வும், ராமராசும் அவ்வப்போது விடுதலைப் புலிகளின் வீரத்தைப்பற்றி முழங்குகிறார்கள்.

இப்போது புதிய தமிழகம் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமியும் இந்தப் பட்டியலில் சேர்ந்திருக்கிறார். ஆனாலும் அவர் நேரடியாக புலிகள் பற்றி ஏதும் பேசுவதில்லை. பழ.நெடுமாறன், நெடுநாள் பிரபாகரன் விசுவாசி; அரங்குக் கூட்டங்களில் தன் மனத்திற்குத் தோன்றியதையெல்லாம் கூறி வருகிறார்;

அரசியல் கட்சிகள் கண்டும் காணாமல் இருப்பதே உசிதம் என்று நினைக்கின்றன. மற்றபடி பொது மக்களோ 'நரி வலம் போனால் என்ன, இடம் போனால் என்ன மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி' என்ற ரீதியில்தான் இலங்கைப் பிரச்சனையினை அணுகுகிறார்கள்.

சமீபத்தில் நான் கொழும்பு வந்திருந்த போது பலர் என்னைக் கேட்டார்கள்-"தமிழ் நாட்டில் ஈழத்தமிழர் பிரச்சனைக்கு ஆதரவில்லையா? ஏன் இப்படி ஊடகங்களெல்லாம் அமைதி காக்கின்றன அல்லது ஈழப்போராட்டத்திற்கு எதிராக இருப்பது போலவே தோற்றமளிக்கின்றன, எல்லாமே பார்ப்பனர்ச் சதியா?"



தமிழ்நாட்டில் பார்ப்பனர்களின் சக்தி அல்லது தாக்கம் ஒரு புறமிருக்க, விடுதலைப் புலிகளின் போராட்டத்தை நசுக்கப்படும் தமிழர்களின் போராட்டமாக தமிழ்நாடு மக்கள் ஏன் எற்க மறுக்கிறார்கள் என்ற புலி ஆதரவாளர்களின் மனத்தாங்கலுக்கு ஒரே விடைதான்-கடந்த காலத்தில் புலிகள் செய்த தவறுகள், குறிப்பாக ராஜீவ் படுகொலை.


முன்பு இலங்கையில் நடந்த கலவரங்களுக்குப் பின்னர், குறிப்பாக 83ம் ஆண்டு கொடுமைகளுக்குப் பின்னர், தமிழகத்தில் இருந்த ஆதரவும், அனுதாபமும் இப்போது மாயமாக மறைந்துவிட்டாற் போலவே படுகிறது.

அப்போது எல்லாக் கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு கடையடைப்புகள் நடத்தியபோது பொதுமக்கள் யாரும் குறையே சொல்லவில்லை. "தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது, இந்தியா தலையிட வேண்டும், நாமும் ஏதாவது செய்யவேண்டும்" என்ற உணர்வுகளே அப்போது மேலோங்கியிருந்தன.

பிரபாகரனும் உமாமகேஸ்வரனும் பாண்டி பஜாரில் துப்பாக்கிச் சண்டையிட்டது தொடங்கி, சூளைமேட்டில் டக்ளஸ் தேவானந்தாவின் துப்பாக்கிச்சூடு இப்படியெல்லாம் நடந்தும் ஓரளவு தமிழகத்தில் ஈழப்பிரச்சனை குறித்து அனுதாபமும் அக்கறையும் இருந்துதான் வந்தது.

ஐ.பி.கே.எஃப்.ஐத் திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கைக்குக்கூட குறிப்பிடத்தக்க ஆதரவு இருந்தது. தி.மு.க.வே முன்னின்று பல்வேறு போராட்டங்களை நடத்தியது. ஆனால் 1990ல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டது தமிழகத்தை உலுக்கியது. அந்த நேரத்திலும் விடுதலைப் புலிகளை ஆதரித்து வந்த ஜெயலலிதாவே, ஒரு சில மாதங்களுக்குள் தன் நிலைப் பாட்டை தலைகீழாய் மாற்றிக் கொண்டார்.

காங்கிரஸ்-அ.இ.தி.மு.க. கூட்டணி, பொதுவாக புலிகளுக்கெதிரானவர்களாகவே தங்களைக் காட்டிக் கொண்டும் கூட பொது மக்களின் அமோக ஆதரவு அவர்களுக்குத் தான் இருந்தது. பத்மனாபாவைக் கொலை செய்தவர்களை வேண்டுமென்றே அன்றைய கருணாநிதி அரசு தப்பிக்கவிட்டது, புலிகளை வளர்த்து விட்டது என்ற பிரச்சாரம் முடுக்கி விடப்பட்டது. புலிகளை ஆதரித்து இந்தியாவிற்கு துரோகம் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவரது அரசு கலைக்கப் படக்கூடிய சூழல் உருவாக, அப்பாவி அகதிகள் பலரை தமிழக போலீசார் புலிகள் என்று அடையாளம் காட்டி, சிறப்பு முகாம்களில்



வைத்துக் கொடுமைப்படுத்தியபோது மக்கள் எவரும் கண்டுகொள்ளவேயில்லை. மாறாக கருணாநிதி ஏமாற்றுகிறார், உண்மையான புலிகள் பிடிபடவில்லை என்றுதான் நினைத்தார்கள். இறுதியாக மே 21ம் திகதி பெரும்புதூரில் ராஜீவ் காந்தியும் இன்னும் 17 பேரும் தனுவின் குண்டுகளுக்கு இரையாக, கொஞ்ச நஞ்சமிருந்த அனுதாபமும் காற்றில் கரைந்தது.

1992லிருந்து தொடர்ந்து புலிகள் மீது தடை நீடிக்கப்பட்டு வந்திருக்கிறது. என்ன எதிர்ப்பு வந்து விட்டது? கேட்டால் வை.கோ. சொல்கிறார்-"நான் தடையினை எதிர்க்கிறேன், ஆனால் வாஜ்பேயி அரசிற்கு தர்ம சங்கடத்தை உருவாக்க விரும்பவில்லை!" ஆரம்ப கட்டத்தில் புலிகளை கடுமையாக எதிர்க்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடன் கைகோர்த்தவர் தானே வை.கோ., ராமதாசும் தேர்தல் மேடைகளில் இலங்கைப் பிரச்சனையினை முன்னிறுத்துவது கிடையாது. திராவிடக் கழகத் தலைவர் வீரமணி அவ்வப்போது அறிக்கைகள் விட்டு தனது விசுவாசத்தைக் காட்டிக் கொள்வார். அத்தோடு சரி.

"தம்பி பிரபாகரா, தமிழகம் உன் பின்னால் நிற்கும்!" என்று 1987ல் கூறிய கருணாநிதி, இரண்டாண்டுகள் கழித்து தேர்தலின் போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவு வேண்டி தேர்தல் மேடைகளில் இலங்கைப் பிரச்சனை பற்றி பேசமாட்டேன் என்று வாக்குறுதி கொடுத்ததையும் மறக்கலாகாது.

முன்னர் குறிப்பிட்டது போல 1990வரை கூட புலிகளை ஆதரித்த ஜெயலலிதா பின்னர் அவரது ஆட்சியில் கண்ணில் தென்பட்ட எந்த இலங்கைத் தமிழரும் வெடிகுண்டு வைத்திருப்போராகக் கருதப்பட்டனர். இன்று சற்று இறுக்கம் தளர்ந்திருக்கிறது. இலங்கையின் இறையாண்மைக்கு ஊறு நேரா வண்ணம் தமிழர் பிரச்சனை தீர்க்கப் படவேண்டும் என்கிறார்.


தமிழகத்தில் பிராமணர்கள் ஆதிக்கம் இன்னமும் வலிமையாக இருக்கிறது, குறைந்த பட்சம் பத்திரிகைத் துறையில். தமிழின எதிரிகளான பிராமணர்களே தான் புலிகளுக்கெதிராக பிரச்சாரம் செய்கிறார்கள், இப்படியும் ஒரு கணிப்பு.

பிராமணரல்லாதோரால் நடத்தப்படும் பத்திரிகைகளும் புலிகளுக்கு ஆதரவாக, ஏன் பொதுவாக ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக ஏதும் பெரிதாக பிரச்சாரம் செய்வதில்லை. புலிகள் மீதான தடையினை எதிர்த்து எவரும் தலையங்கமே எழுதவில்லை. தவிரவும் சோ ராமசாமியும் இந்து பத்திரிகையும் தான் தமிழ் மக்களின் மன நிலையை உருவாக்குவதாக நம்புவது மடமை.

மிகப் பெரும்பான்மையினராக இருக்கும் பிராமணரல்லாத தமிழ் மக்களுக்கு உண்மையிலேயே ஈழத்தமிழர்கள் மீது கிஞ்சிற்றேனும் அன்பும் அபிமானமும் இருக்குமானால் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நாடு அனுமதித்திருக்குமா? முகாம்களில் வேண்டுமென்றே வசதிகள் குறைக்கப்பட்டன. சிறப்பு முகாம்களிலோ பல்வேறு அடக்குமுறைகள். ஆயிரக்கணக்கில் அகதிகள் வலுக்கட்டாயமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். ஒரு கட்டத்தில் அவர்கள் வழிப்பறிக் கொள்ளைக்காராகள் என்றுகூட குற்றஞ்சாட்டினார் ஜெயலலிதா. யாரும் கண்டு கொள்ளில்லை, ஜெயலலிதாவை சமூகநீதி காத்த வீராங்கனை என்று புகழ்ந்த திராவிடக் கழகத்தலைவர் வீரமணி உட்பட.

அதுமட்டுமல்ல 1990லேயே அகதிகள் குறித்த அரசின் அணுகுமுறை மாறியிருந்தது. 1985ல் வந்தோரையெல்லாம் இருகரம் கூப்பி வரவேற்ற தமிழக அரசு அதிகாரிகள், ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அகதிகள் வந்த படகுகளைப் பறிமுதல் செய்யத்துவங்கினர். அந்தப் படகுகள் உரிமையாளர்களிடம் நான்கைந்து ஆண்டுகள் கழிந்தும் திருப்பிக் கொடுக்கப்படவேயில்லை.

அப்போது குறைந்த பட்சம் அகதிகளாவது ஓரளவேனும் கௌரவமாக நடத்தப் பட்டார்கள். ராஜீவ் கொலைக்குப் பின்பு இன்று வரை வரும் அகதிகளெல்லாம் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். எந்தப் போராளிக் குழுக்களையாவது சார்ந்தவர்களா என்பதைக் கண்டறிய கேள்வி மேல்



கேள்வி கேட்டு துளைத்து எடுக்கிறார்கள். அதிலும் புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்று தெரிந்தால் அவர்களுக்குச் சிறைதான். அகதி முகாமில் இடமில்லை.

படகுகள் தொடர்ந்து பறிமுதல் செய்யப் படுகின்றன. இதைத்தெரிந்து கொண்ட படகோட்டிகள் ராமேஸ்வரம் வரை அகதிகளைக் கொண்டு வருவதில்லை. ஐந்தாம் திட்டு எனப்படும் இந்திய எல்லையில் அமைந்துள்ள ஒரு தீவு பேன்ற பகுதியில் வன்னியிலிருந்து வருவோரை இறக்கிவிட்டு விடுகிறார்கள்.

பல மணி நேரம் தவித்து, பிறகு அவர்கள் மினவர்களைப் பிடித்தோ அல்லது கரையோரக் காவற்படையினரின் உதவியுடனோ ராமேஸ்வரம் வந்து சேர்கிறார்கள். அப்படி வந்து சேர்ந்தவுடன் தான் அவர்கள் சோதனையிடப் படுகிறார்கள்.

மலையகத்திலிருந்து இந்தியப் பிராஜாவுரிமையுடன் திரும்பி வந்த தமிழர்களை விரட்டிக்கொண்டு, கேவலமாக நடத்திக் கொண்டிருந்த மண்டபம் முகாம் அதிகாரிகள் எப்படி 1985ல் யாழ்ப்பாண அகதிகளை மிகவும் மரியாதையாக, நிரம்ப அக்கறையுடன், அனுதாபத்துடன் நடந்துகிறார்கள் என்று நான் அந்த நேரத்தில் கட்டுரையே எழுதியிருந்தேன். காலந்தான் எப்படியெல்லாம் மாறுகிறது.

தற்போது தமிழகத்தில் உள்ள 130



முகாம்களில் ஏறத்தாழ 65,000 அகதிகள் இருக்கிறார்கள். கருணாநிதி அரசில் சற்று நல்லபடியாக அவர்கள் நடத்தப்படுகிறார்கள் அதிகத் தொந்தரவில்லை. ஆனாலும் அவர்களை கவனித்தக் கொள்ள முகாம்களுக்குள் நுழைய அரசு சாரா நிறுவனங்களுக்கு அனுமதியில்லை. மண்டபம் போன்ற இடங்களில் பத்திரிகையாளர்கள் நுழையமுடிவதில்லை. ஒரு கட்டத்தில் அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள், டி.வி. பார்க்கிறார்கள் என்று சொல்லி மின் வழங்கலே நிறுத்தபப்பட்டது மண்டபத்தில். கேட்க நாதியில்லை.

இந்தச் சூழலில் ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டும். ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு சில கலவரங்கள் நடந்தன. அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தி.மு.க.வினர்தான், அதில் அ.இ.அ.தி.மு.க.கைவரிசை இருந்ததாகவே கருதப்படுகிறது. தி.மு.க.வினர் தான் புலிகளை வளர்த்துவிட்டார்கள் என்று பலர் நினைத்ததால் அந்த நேரம் பெரிய அளவில் அந்தக் கலவரங்களுக்காக யாரும் வருந்தவில்லை.

அதே நேரம் எந்த அகதிகள் முகாமும் பாதிக்கப்படவில்லை, எந்த அகதியும் தாக்கப்படவில்லை. ராஜீவ் கொலைக்கு விடுதலைப் புலிகள்தான் காரணமாய் இருந்திருப்பார்கள் என்ற செய்திகள் வந்த போதும் கூட, தமிழ்நாட்டு மக்களுக்கு ஈழத் தமிழர்களையும் விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்திப் பார்க்கக்கூடிய ஒரு புரிதல் இருந்தது. இன்றும் கூட இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக, அவர்கள் அவதிப்பட்டால் நமக்கென்ன என்ற எண்ணம் மக்களிடம் இருப்பதாகக் கூற முடியாது. ஆனால் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் தாம் சண்டையை வளர்க்கிறார்கள் என்ற எண்ணம் நடுத்தர மக்கள் மத்தியில் நிச்சயமிருக்கிறது.

இதில் துரதிர்ஷ்டம் என்னவெனில் இன்றும் தொடரும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை குறித்து மக்கள் அதிகமாக அறிந்திருக்கவில்லை. நெடுமாறன் போன்றார் அதைப்பற்றி அதிகம் பேசுகிறர்கள் என்பது உண்மைதான். ஆயினும் அவர்கள் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்பதால் அவர்கள் கூறுவது அதிகம் எடுபடுவதில்லை. அவர்களைத் தவிர்த்த மற்ற குழுக்களோ அல்லது வேறு அமைப்புக்களோ இலங்கைத் தமிழர்களைப் பற்றி பேசாததன் விளைவு இன்று பொதுமக்களின் பார்வையில் விடுதலைப் புலிப் பிரச்சனையும் இலங்கைத் தமிழர் பிரச்சனையும் ஒன்றாகவே படுகிறது. விடுதலைப் புலிகளைப் பற்றிய அச்ச உணர்வு அல்லது வெறுப்பு அல்லது அவர்கள் மீது அக்கறையின்மை காரணமாக, இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பதெற்கென்று யாருமில்லை. தமிழன உணர்வுக் குழுக்களைச் சார்ந்த சில ஆயிரம் பேர் கூடிப் பேசிக் கலைந்து விடுகிறர்கள், அவ்வப்போது ஏதோ சில போராட்டங்களையும் நடத்துகிறார்கள், அவற்றால் தாக்கமேதும் இல்லை.

இந்நிலைக்காக யாரை நொந்து கொள்ளலாம்? திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியின் விளைவாகத்தான், இன்று பெரும்பான்யையான பிராமணரல்லாத மக்களும் அரசியல் கட்சிகள் மீது நம்பிக்கை இழந்திருக்கிறார்கள். தமிழின உணர்வு என்பது வெற்றுக்கூச்சல் என்று அவர்கள் நினைக்கும் அளவு நிலைமை மோசமாகியிருக்கிறது. அவனவன் பிழைத்தால் போதும் என்பதே இன்றைய மனநிலை.

பாரதீய ஜனதாவினரை திரிசூலம் ஏந்தும் காட்டுமிராண்டிக்கும்பல் என்று ஏசிக் கொண்டிருந்த திராவிடக் கட்சிகள் இன்று வாஜ்பேயியை வானளாவப் புகழும் போது

**கானகன்**

அவற்றின் மீது, அவை ஒரு காலத்தில் பறைசாற்றி வந்த கொள்கைகள் மீது, எந்த பிராமணரல்லாத தமிழருக்கு நம்பிக்கை வரும்?

உலகமயமாதலும் தாராளமயமாதலும் மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதாரத்தை எப்படியெல்லாமோ சீர் குலைத்து விடும் என்று பல்வேறு தரப்புகளின்லிருந்தும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞரின் மனச்சாட்சி முரசொலி மாறன், இந்தியாவின் தொழிலமைச்சர், தாராளமயமாதலே தனது தாரக மந்திரமென்கிறார்.

அவரது மகன் கலாநிதி மாறன் சன் டி.வி.யில் அர்த்தமற்ற குப்பை நாடகங்களையும் இளைஞர்களைக் கெடுக்கும் பல்வேறு விதமான தரங்கெட்ட நிகழ்ச்சிகளையும் அயராமல் ஒளிபரப்பி, பொருள் குவிக்கிறார். யாரய்யா கவலைப்படப் போகிறார்கள் ஈழத்தைப் பற்றி!



## கலாபூஷண விருது பெற்றனர்

தினமுரசு வாரமலரின் முன்னாள் கௌரவ ஆசிரியர் திரு.இரா.பத்மநாதன் அவர்களுக்கு 2000மாம் ஆண்டுக்கான காலாபூஷண விருது, கலாசார அமைச்சினால் வழங்கப்பட்டது. அவர் கடந்த 55 வருடங்களுக்கு மேலாக ஆற்றிய இலக்கியப் பணிக்காகவும் நாடகத்துறையுடன் இணைந்து செயற்பட்டமைக்காகவும் இவ்வுயர் விருது வழங்கப்பட்டது. இந்து சமயப் பண்பாட்டுத் திணைக்களம் இவருக்கு கலைமணி விருது வழங்கி கௌரவித்தது.

திரு.பத்மநாதனின் இடது புறம் இருப்பவர் வைத்திய கலாநிதி கலைஞர் குமார் அவர்கள். திரு.மாரிமுத்து கந்தையா என்ற இயற்பெயர் கொண்ட இவர், மட்டக்களப்பு சிற்றாண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக ஓவியக் கலைஞராக விளங்கியவர். சென்னை பாலு பிரதேர்ஸ் கலைக்கூடத்திலும் பயன்றவர். ஆனால் சித்த வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த இவர், இவருடைய தந்தையாரின் மறைவைத் தொடர்ந்து தற்போது வைத்தியத் துறையைச் சார்ந்து விட்டார். இருப்பினும் அவர் பல ஆண்டுகளுக்கு முன்னர் வரைந்த ஓவியங்கள் இன்றும் சிறப்பாகத்துலங்குகின்றன. மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண ஆசிரம மண்டபத்தில் சுவாமி விவேகானந்தரின் ஓவியம், ஆயித்தியமலை சகாயமாதா கோவில் முகப்புப் படம் ஆகியவை இன்றும் கலைஞர் குமாரின் கைவண்ணத்தைப் பிரதிபலிக்கின்றன. சகாயமாதா படம் வரையப்பட்டு கிட்டத்தட்ட 40 வருடங்களாகின்றன.

## அலசுவது - இராஜதந்திரி

# இலங்கை விவகாரத்தில் அதிகரிக்கும் வெளி உலகக்கரிசனை

இலங்கையின் இன்றைய பிரச்சனையில் என்றுமில்லாதவாறு சர்வதேச சமூகத்தின் கவனம் அதிகரித்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

சில நாடுகள் இலங்கைக்கு இராணுவ ரீதியான உதவிகளை வழங்குவதற்கு முன்வந்திருந்தன. வேறு சில நாடுகள் இலங்கைப் பிரச்சனைக்கு அரசியல் ரீதியான தீர்வை வலியுறுத்துபவையாக இருக்கின்றன.

அமெரிக்க கிளின்ரன் நிர்வாகத்தின் இராஜாங்க அமைச்சைச் சேர்ந்தவர்களான கார்ல் இன்டர் போர்த், மற்றும் தோமஸ் பிக்கரிங் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக இலங்கை விவகாரம் குறித்து தமது நாட்டின் நிலைப்பாடுகளை வெளியிட்டிருந்தனர்.

அப்போது அவர்களிருவரும் பிராந்திய ரீதியாகவோ அல்லது சர்வதேச ரீதியாகவோ இலங்கைப்பிரச்சனை சிக்கலடைந்து விடலாகாது என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே தமது அபிப்பிராயங்களைக் கூறியிருந்தனர்.

அத்துடன் இலங்கைக்கு அமெரிக்கா இராணுவ ரீதியான உதவிகளை வழங்குகின்ற போதிலும் திரு.கார்ல் இன்டர் போர்த், திரு. தோமஸ் பிக்கரிங் ஆகியோர் இலங்கைப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றின் அவசியத்தையே வலியுறுத்தியிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

சர்வதேச அரசியல் நிலபரங்களை இன்று எடுத்து நோக்கும் போது பாரியளவிலான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதையே காண முடியும்.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் பனிப்போர் (Cold war) என்ற கெடுபிடி அமெரிக்காவுக்கும், அன்றைய சோவியத் யூனியனுக்குமிடையே நிலவியது.

அச்சமயம் எந்தவொரு பிராந்திய ரீதியான அரசியல் பிரச்சனையிலும் அமெரிக்கா சோவியத் யூனியன் ஆகியவற்றின் தலையீடுகள் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ இருந்து வந்தன.

வியட்நாம் நெருக்கடி, கொரியப் பிரச்சனை, ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய கிழக்குப் பிரச்சனை, மத்திய அமெரிக்க சர்ச்சைகள், எனப் பல்வேறு விதமான பிராந்திய ரீதியான விவகாரங்களிலும் அமெரிக்கா மற்றும் அன்றைய சோவியத் யூனியன் ஆகியவற்றின் தலையீடுகள் ஏட்டிக்குப் போட்டியாகவே இருந்தன.

ஆனால் இன்று அனைத்துமே மாற்றங்கண்டுள்ளன. சோவியத் யூனியன் பல்வேறு பாகங்களாக உடைந்து போயுள்ளதுடன், அதனோடு அணிசேர்ந்திருந்த நாடுகள் பலவும் தமது அரசியல் எல்லைகளை மாற்றியமைத்தும் புதிய அரசியல் பரிமாணங்களைப் பெற்றவையாகவுமிருக்கின்றன.

எனவே அமெரிக்கா தொடர்ந்து சர்வதேச அரசியலில் ஒரு பலம் மிக்க வல்லரசாகவே இருந்து வருவதுடன், புதிய நட்புக்களையும் அரசியல் ரீதியாக வலுப்படுத்துவதில் ஆர்வங்காட்டிவருகின்றது.

சோவியத் யூனியன் பல மடைந்திருந்தவேளை ஆசியாவில் இந்தியாவே அதன் முக்கிய நண்பனாக விளங்கியிருந்தது.

இதன் காரணமாக அமெரிக்கா இந்தியாவைச் சீண்டும் விதத்தில் பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகியவற்றுடனும் நட்புக் கொண்டிருந்தது.

ஆனால் தற்போது சோவியத் யூனியன் என்ற பலம் மிக்க அமைப்பு உடைந்து போனநிலையில் கைத்தொழில், பொருளாதார ரீதியான கொள்கைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு இந்தியா பல்வேறு விதத்திலும் தென்னாசியாவில் முக்கியத்துவம் மிக்கதோர் நாடாகவே விளங்குகின்றது.

இந்தியாவின் முக்கியத்துவம் எத்தகையதென்பதற்கு 1998ம் ஆண்டில் அந்நாடு மேற்கொண்ட அணுகுண்டுப் பரிசோதனை ஒரு நல்ல உதாரணமாக விளங்கியிருந்தது.

இந்தியா 1998ம் ஆண்டு அணுகுண்டுப் பரிசோதனை மேற்கொண்டபோது, பாகிஸ்தானும் இந்தியாவை எச்சரிக்க அணுகுண்டுச் சோதனை நடத்தியது.

அப்போது அமெரிக்கா இந்தியாவையும், பாகிஸ்தானையும் எச்சரித்ததோடு அவற்றின் மீது பொருளாதாரத் தடைகளையும் கொண்டு வந்திருந்தது.

ஆனால் மறுபுறத்தே அப்பொருளாதாரத் தடையே தென்னாசியாவில் இந்தியாவினதும் பாகிஸ்தானினதும் அரசியல் பொருளாதார பலம் மற்றும் பலவீனங்களை அறிந்து கொள்வதற்கான அளவு கோலாகவும் விளங்கியிருந்தது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றைக் கண்டித்து பொருளாதாரத் தடைகளை விதித்த அமெரிக்கா, அந்நாடுகள் அத்தடையை எவ்வாறு தாக்குப் பிடிக்கின்றன என்று அவதானித்தது.

இந்தியா எவ்விதத்திலும் அத்தடையினால் பாதிக்கப்படவுமில்லை. அத்துடன் அதுகுறித்து அமெரிக்காவிடம் மண்டியிடவுமில்லை.

பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றது முதல் இந்தியாவின் கைத்தொழில், பொருளாதரக் கொள்கைகள் என்பவை காத்திரமாகவே இருந்து வருகின்றன.

இந்தியாவின் வளர்ச்சிக்கு அந்நாட்டின் சனத்தொகை ஒரு சவாலாக இருக்கலாம். ஆயினும் அதன் கைத்தொழில், பொருளாதாரத்திட்டங்கள் காலமாற்றங்களுக்கேற்றவகையில் வளர்ச்சி கண்டு வந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

எனவே அமெரிக்கா அறிவித்த பொருளாதாரத்தடை இந்தியாவை எவ்விதத்திலும் பாதித்திருக்கவில்லை.

மறுபுறத்தே பாகிஸ்தான் அமெரிக்கா விதித்த தடையினால் மிகவும் இக்கட்டான நிலைக்குள்ளாகியது.

அச்சமயம் பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப் அரசாங்கமே பதவியிலிருந்தது. பல்வேறு விதத்திலும் வெளிநாட்டு உதவிகளையே நம்பியிருந்த பாகிஸ்தான் பலத்த பொருளாதார நெருக்கடிகளை அத்தடை காரணமாக அனுபவிக்கலாயிற்று.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் உத்தியோக பூர்வ வாசஸ்தலம் கூட விற்பனைக்கு விடப்பட்டுள்ளதென விளம்பரங்கள் வெளியாகுமளவுக்கு அந்நாட்டில் நிலைமை மோசமடைந்திருந்தது.

இந்நிலையில் இந்தியா இருவருடங்களுக்கு முன்னர் மேற்கொண்ட அணுகுண்டுப் பரிசோதனை என்பது அந்நாட்டின் விஞ்ஞான வளர்ச்சி, இராணுவ பலம் என்பவற்றை மட்டுமல்லன; அதன் பொருளாதாரவளர்ச்சியைக்கூட நிரூபிப்பதாகவே இருந்தது.

இவைதவிர இந்தியாவின் ஜனநாயக அரசியல் கூட அந்நாட்டில் மாநிலவாரியான அதிகாரப் பரவலாக்கத்தைக் கொண்டதாகப் பலம் மிக்கதாகவே இருக்கின்றது.

எனவே இந்தியா மீதான பொருளாதாரத் தடை என்பது ஒரு தப்புக் கணக்கென்பதையே அமெரிக்கா உணர்ந்து கொண்டது.



தோமஸ் பிக்கரிங்

இதன் விளைவாகவே அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் இந்தியாவுக்கு அண்மையில் ஒரு நீண்ட விஜயத்தை மேற்கொண்டு அந்நாட்டுடன் தனது நாட்டின் நட்புறவைப் பலப்படுத்திக் கொண்டார்.

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனது இந்திய விஜயத்துக்கு முன்பதாக ஒரிரு வருடங்களுக்கு முன்னர், கம்பியூட்டர் துறையின் ஜாம்பவானும் உலகின் மிகப்பெரும் செல்வந்தருமான பில்கேட்ஸ் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார். அச்சமயம் இந்தியாவில் கம்பியூட்டர் துறையின் வளர்ச்சியைக் கண்டு அவர் பிரமித்துப் போயிருந்தார்.

அமெரிக்காவின் கம்பியூட்டர் தொழில் நுட்பப் பிரதேசமான சிலிக்கன் பகுதிக்கு அடுத்தபடியாக இந்தியாவில் தான் கண்ட கம்பியூட்டர்துறைவளர்ச்சி காணப்படுவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவற்றுடன் அமெரிக்காவில் குடியேறி பந்நெடுங்காலமாக வாழ்ந்துவருகின்ற இந்தியர்கள் அங்கே மருத்துவ, விஞ்ஞான, தொழில்நுட்பத்துறைகளில் அபரிமிதமான பங்களிப்பையே வழங்கிவருகின்றனர்.

இவ்வாறு இந்தியா பல்வேறு துறைகளிலும் முன்னேற்றங்கண்டு தென்னாசியாவில் ஒரு வல்லரசு ஸ்தானத்தில் இருக்கின்ற காரணத்தினால் இப் பிராந்தியத்தில் தோன்றும் பிரச்சனைகளைப் பொறுத்தவரை இந்தியாவை வேறுபடுத்திப் பார்க்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

இலங்கை வந்திருந்த அரசியல் நடவடிக்கைகளுக்கான அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் தோமஸ் பிக்கரிங், இந்தியா சென்று அங்கே இந்தியத் தலைவர்களைச் சந்தித்து இலங்கை விவகாரம் பற்றி ஆராய்ந்த பின்னரே கொழும்பு வந்திருந்தார்.

பத்துவருடங்களுக்கு முன்னர் இந்தியா இலங்கை விடயத்தில் அரசியல், இராணுவரீதியாகத் தலையிட்டபோது, அன்றைய இலங்கை ஆட்சியாளர்கள் இந்தியாவை தவறான முறையில் கையாண்டிருந்தனர் என்று இன்றைய ஆட்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அன்றைய இலங்கையின் ஆட்சியாளர்கள் இந்தியாவை தவறாகக் கையாண்டது ஒரு புறமிருக்க, இந்தியாகூட அவசரப்பட்டு இலங்கை விடயத்தில் தவறான முடிவுகளை எடுத்திருந்ததென்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்தியா மீண்டும் இலங்கை விடயத்தில் கூடுதல் கவனஞ்செலுத்த வேண்டும்மென்ற நிலைப்பாடே இலங்கை அரசியல் வட்டாரங்களில் பலமடைந்துள்ளன.

கடந்தவாரம் இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் விஜயமொன்றை மேற்கொண்ட இலங்கையின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான திரு. மஹிந்த இராஜபக்ஷ இந்தியாவின் ஒத்துழைப்பை இலங்கை எதிர்பார்ப்பதாகக் கூறியிருந்தார். அதேசமயம் இலங்கையில் இந்திய அமைதிப்படையின் பிரதான அதிகாரியாக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் கல்கட், இந்தியா அரசியல் ரீதியாகவே இலங்கை விவகாரத்தை அணுகவேண்டுமென 'புரொன்ட்லைன்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

இலங்கை ஏற்கனவே இராணுவ ரீதியான நடவடிக்கைகள் காரணமாக பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றது. இந்நிலையில் இலங்கையின் நலன் விரும்பிகள் என்றிருக்கும் நாடுகள் எவ்வகையிலும் இராணுவ ரீதியாகத் தலையிடுவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டா. அவ்வாறு இராணுவ ரீதியாக ஈடுபடும் நிர்ப்பந்தங்கள் எதுவும் ஏற்பட்டால் கூட, மனிதாபிமான அடிப்படையிலேயே இலங்கையில் தமது இராணுவத்தை ஈடுபடுத்த எந்தவொரு வெளிநாடும் முன்வருமென்றே கருதலாம்.

இந்தியா கூட தென்னிந்திய கரையோரப்பகுதிகளில் தனது விமான மற்றும் கடற்படைகளை பூரண உஷார் நிலையில் வைத்துக்கொண்டிருக்கின்றது.

அத்துடன் இலங்கையிடமிருந்து உதவி கோரப்படும் பட்சத்தில் உடனடியாகவே மனிதாபிமான அடிப்படையில் தனது இராணுவத்தை நகர்த்துவதற்குத் தயாராக இருப்பதாகவும் இந்தியா கூறியுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் அரசியலாளர்களே மிகுந்த விழிப்புணர்வுடனும் அரசியல் சாணக்கியத்துடன் நடந்து கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.


இலங்கை விவகாரத்தில் வெளிநாடுகளின் கரிசனை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ள நிலையில், இலங்கையின் ஆட்சியாளர்கள் உள்நாட்டில் தமது நடவடிக்கைகளை அரசியல் ரீதியாகக் காத்திரப்படுத்த வேண்டியவர்களாகின்றனர்.

இராணுவ மற்றும் அரசியல் ரீதியாகப் பலம்மிக்க நாடுகள் ஒரு பிரச்சனையில் தலையிடும்போது அவை தமது சொந்த நலன்களையும் பாதுகாத்துக் கொள்ளும் விதத்திலும் நடந்து கொள்ள முற்படலாம்.

இந்தியா கூட அதற்கு விதி விலக்கல்ல.

எனவே இலங்கையின் அரசியலாளர்கள் எந்தவொரு கட்சியையும், அல்லது எந்தவொரு அமைப்பையும் சேர்ந்தவர்களாயினும் 'குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரை' கொடுக்காத வகையிலேயே நடந்து கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.

## அதிரடி அய்யாத்துரை



**சென்னை இந்துப்** பத்திரிகையின் இலங்கைச் செய்தியாளரே நிருபமா சுப்பிரமணியன். ஜனாதிபதி சந்திரிக்காவை பேட்டி கண்டிருந்த நிருபமா, ஒரு தமிழ்ப் பெண். தமிழக அரசியல் சினிமாத்துறையில் கூட இவருக்கு மிக நெருக்கமான உறவுகள் உண்டு. 'துக்ளக்' ஆசிரியரும் அரசியல் விமர்சகருமான சோ ராமசாமி அவர்களின் சகோதரி மகளே நிருபமா. அதுமட்டுமல்ல, படையப்பா படத்தில் சக்கை போடுபோட்ட ரம்யா கிருஷ்ணனும் நிருபமாவின் நெருங்கிய உறவுக்காரி. ஜனாதிபதியை பேட்டிகாண்பதில் இலங்கைத்தமிழ் பத்திரிகையாளருக்குக் கிடைக்காத வாய்ப்பு தமிழகப் பெண் நிருபமாவுக்குக் கிடைச்சிருக்குது!

**அண்மையில் பாதாள உலகக்** கேடிகள் சிலர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தக் கேடிகள் பல்வேறு கொலைகள், கொள்ளைகளைப் புரிந்தவர்கள். பொலிஸாரால் வேட்டையாடப்பட்ட இப்பயங்கரப் பேர்வழிகளின் மறைவுக்கும் 'கண்ணீர் அஞ்சலிச்' சுவரொட்டிகள் கொழும்பில் ஆங்காங்கே ஒட்டப்பட்டிருந்தன. பாதாள உலகின் ஆழ, அகலத்தை இச்சுவரொட்டிகள் வெளிப்படுத்தியிருந்தன.

**இலவசக் கல்வி,** இலவசப் புத்தகம், இலவச சீருடை இப்படியெல்லாம் இலவசமாக இருந்தென்ன; பாடசாலைகள் நாட்டின் பலபாகங்களில் கால்நடைகள் தங்கும் கட்டிடங்களாகியுள்ளன. கல்வியில் எல்லாமே இலவசமாக இருந்தும் கல்வி வளர்ச்சி குன்றிக்குறுகிப் போகிறது. பெறுமதியானதை இலவசமாகக் கொடுக்க முற்பட்டு, இறுதியில் அதன் மதிப்பையும் இழக்கச் செய்து பயன் எதனையும் பெறமுடியாத நிலையே ஏற்பட்டுள்ளது.

**இலங்கையில் தமிழ்** சினிமாத்துறையில் ஈடுபடுவாரும் இல்லை. அத்துறையை ஊக்குவிப்பாரும் இல்லை. ஆனால் சிங்களத்தில் தயாரான சரோஜா என்ற திரைப்படத்தில் நித்தியவாணி கந்தசாமி என்ற தமிழ்ச்சிறுமி சக்கைபோடுபோடுகிறார். இனக்கலவரத்தை மையமாகக் கொண்டு தயாரான இத்திரைப்படத்தில் சரோஜா என்ற வேடத்தில் வரும் இச்சிறுமியின் நடிப்பு பலரையும் நெகிழ வைத்துள்ளது. சர்வதேச விருதுகள் சிலவற்றையும் இப்படம் வென்றுள்ளது. தனி ஒரு சிறுமியாக சினிமாவில் இலங்கை தமிழருக்கு பெருமை சேர்க்கிறார் நித்தியவாணி.

**இலங்கையில் இருந்தால்** சங்கடம் என்று புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் நம்மவர் புகலிடம் தேடியுள்ளனர். ஆனால் புலம்பெயர்ந்து வாழும் இடங்களில் சண்டித்தனங்கள், சச்சரவுகளில் நம்ம ஆட்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகினம். எந்தவொரு வைபவமும் வெளிநாடுகளில் இச்சண்டித்தனக்காரரின் கலாட்டாவுடனேயே முடிவடையுதாம். வெளிநாட்டவர் நம்மீது காட்டிவரும் இரக்கம் கூட இதனால் குறைந்துவிடுமோ என ஏங்க வேண்டியுள்ளது.

# இருவாரத் தொடர்

விக்டோரியா, உற்சாகத்துடன் சென்று, பலரைச் சந்தித்து விபரங்களைச் சேகரிக்கிறாள். அவற்றை அனுப்புகிறாள். பின்னர் ஸ்பெயின் மன்னர் வருகையைப் பற்றி எழுத அவரது பயணக்குழுவுடன் தொடர்கிறாள். ஒரு மாதா கோயிலில் மன்னர் கடத்தப்பட்ட செய்தி வருகிறது. உடனேயே அமெரிக்காவில் இருக்கும் தன் பத்திரிகைக்கு மிகச் சிரமத்தின் பேரில் செய்தியை அனுப்புகிறாள். ஆனால் அவள் கூறும்முன்பே 'நியூயார்க் ரிகார்ட்' பத்திரிகையில் 'மார்க் பிராட்ஷா' என்பவரின் பெயரில் செய்தி வெளியாகிவிடுகிறது. வழக்கம் போல், மற்ற பத்திரிகைகளில் வரும்முன் 'ரிகார்ட்' பத்திரிகை வெளியிட்டுப் புகழைத் தட்டிக் கொண்டு போகிறது.

ஆர்ம்ஸ்டட்டின் பெருமிதம் அதிகரிக்கிறது அனைவரையும் மிஞ்சிய கர்வம் எழுகிறது.

'யார் இந்த மார்க் பிராட்ஷா' என்ற கேள்வி அனைவர்மனத்திலும் எழுகிறது. குறிப்பாக, விக்டோரியா குமுறுகிறாள். தனக்கு முந்திச் செய்தியை வெளியிட்ட, அந்த 'பிராட்ஷா' யார் என்று ஆச்சரியப்படுகிறாள்.

ஸ்விட்ஜர்லாந்தில், ஐக்கிய நாடுகளின் சபையின் ஆதரவில், அணு ஆயுதப் பரிசோதனைக் குறைப்பு மகாநாடு நடக்கிறது. அதில் கலந்து கொள்ள, இடத்தில் விளக்கெல்லாம் அணைக்கப்பட்டு, அவர் தாக்கப்படுகிறார். பலர் மரணமடைகின்றனர்.

இந்தச் செய்திகளும் இவள் அனுப்பும் முன், 'மார்க் பிராட்ஷா'வினால் ரிகார்ட் பத்திரிகையில், அனைவரையும்முந்திக் கொண்டு வெளியிடப்படுகிறது.

'நியூயார்க் ரிகார்ட்' பத்திரிகையின் புகழ், உலகமெங்கும் பரவுகிறது. சக பத்திரிகையாளர்கள் முன், எட்வர்ட் ஆர்ம்ஸ்டட் விஸ்வரூபம் எடுக்கிறார். சர்வ வல்லமை பொருந்தியவர்-என்று மதிக்கப்படுகிறார். 'செய்திகளை உருவாக்குகிற கடவுள் நானே' என்கிற கர்வம் எழுகிறது.

அமெரிக்காவின் 'டைம்' பத்திரிகை 'தி ஆல்மைட்டி' என்று அவருக்கு பட்டப் பெயர் கொடுத்து, அட்டைப் படமாய் அவர் படத்தை வெளியிடுகிறது.

'மார்க் பிராட்ஷா' யார் என்று கண்டு பிடிக்கும் முயற்சியில், இறங்குகிறார்கள், விக்டோரியாவும் நிக்ராம்ஸேயும்.

அவர்களிடையே காதல் மலர்கிறது.

வா என்றால் வர வேண்டும். படு என்றால் படுக்க வேண்டும். அதற்கு மேல் நீ ஒன்றுமில்லை எனக்கு. என்னை யாரென்று நினைக்கிறாய்? சர்வ வல்லமை படைத்தவன். அமெரிக்க ஜனாதிபதியே என்னை விருந்துக்குக் கூப்பிடுமளவுக்குச் சக்தி படைத்தவன். உலகின் அனைத்துப் பத்திரிகையாளர்களும் செய்திக்காக என்னை நம்பியிருக்கிறார்கள். நானே செய்தி. நான் செய்திகளை உருவாக்குகிறேன். உலகின் வாழ்க்கையை நான் நிர்ணயிக்கிறேன். என்னையா உன் கட்டுப்பாட்டிற்குள் வைக்கமுயல்கிறாய்? வேசி நாயே.." என்று திட்டிவிட்டுப் போகிறார்.

'சகலமும் நானே' என்கிற கர்வம், அவரிடம் ஒரு நோயாக, ஒட்டிக் கொள்கிறது. அதிகார போதையும் மமதையும் ஆட்டிப் படைக்கின்றன.

இந்த நிலையில்தான், 'மார்க் பிராட்ஷா' ஒரு பொய் என்று உணர்ந்த விக்டோரியா, ஆர்ம்ஸ்டட்டின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கத் தொடங்குகிறாள்.

நெஸ்பிட்டைச் சந்திக்கிறாள். நெஸ்பிட்டின் மூலம் 'நானே செய்தி, செய்திகளை நான் உருவாக்குகிறேன்' என்ற விஷயம் தெரிந்து அதிர்ச்சியடைகிறாள். ஆர்ம்ஸ்டட் தான் 'மார்க் பிராட்ஷா' என்னும் பெயரில் செய்திகளை வெளியிடுகிறார் என்று புரிந்து கொள்கிறாள். எப்படி நிரூபிப்பது? சான்று

# இர்விங் வாலஸின் சகலமும் நானே!!

தமிழில்: நரேந்திரன்



தேட முயல்கிறாள்.

'தன்னைத் துழாவ விக்டோரியா முயல்கிறாள்' என்ற விஷயம் ஆர்ம்ஸ்ட்டுக்குத் தெரிய வருகிறது. உடனேயே கஸ்பனானோ மூலமாக அவளைக் கொல்ல ஏற்பாடு செய்கிறார். அதிர்ஷ்டவசமாய் அவளது அறையில் அப்போது நெஸ்பிட் இருக்க, அவள்தான் விக்டோரியா என்று நினைத்து, அவளைக் கொன்றுவிடுகிறார்கள்.

விக்டோரியாவுக்கு விஷயம் தெரிகிறது. ஆர்ம்ஸ்டட்தான் பயங்கரவாதிகளை ஏற்பாடு செய்து, செய்திகளை உருவாக்கி, மற்ற பத்திரிகைகளுக்கு முன்னர் செய்தியாக வெளியிடுகிறார் என்று புரிகிறது. நிரூபிக்க முயல்கிறாள், விக்டோரியா.

ஆர்ம்ஸ்டட்டின் அடுத்த திட்டம். இலண்டனுக்குச் செல்லும் அமெரிக்க ஜனாதிபதியை, ஆகாயத்தில் விமானத்துடன் மோதி கொலை செய்வது; உடனேயே பத்திரிகையில் செய்தியாக வெளிட்டு உலகை பிரமிக்க வைப்பது. இந்தத் திட்டத்தைச் செயலாக்க முயல்கிறார் ஆர்ம்ஸ்டட்.

அவர் இல்லாதபோது, அவர் வீட்டுக்கு வருகிறாள் விக்டோரியா. அவர் மனைவி ஹன்னாவுடன் பேசி, ஆர்ம்ஸ்டட்டின் கொடூர மனப்பான்மையைப் புரிந்து கொள்கிறாள். இது குறித்துச் சாட்சியங்கள் வேண்டுமே என்று அவள் கேட்க, அவரது படிப்பு அறைக்கு மறு சாவி போட்டு, ஹன்னா திறந்துவிட இருவரும் தேடுகிறார்கள். அங்கே ஒரு இரகசியச் செய்தி கிடைக்கிறது. அமெரிக்க ஜனாதிபதியைக் கொல்லும் திட்டம் புரிகிறது. இன்னும் ஒரு மணி நேரத்தில் இந்த விபத்து நடக்க இருக்கிறது. 'அமெரிக்க ஜனாதிபதி விபத்தில் மரணமடைந்தார்-மார்க் பிராட்ஷா' என்று செய்திக் குறிப்பும் கிடைக்கிறது.

பரபரப்படைகிறார்கள் விக்டோரியாவும், ஹன்னாவும்.

அமெரிக்க வெள்ளை மாளிகைக்கு விக்டோரியா தொலைபேசியில் கூற, அங்கிருந்து பறந்து கொண்டிருந்த விமானத்திற்குச் செய்தி பறக்கிறது. இதற்கிடையில், அமெரிக்க ஜனாதிபதியின் விமானத்துடன் மோதுவதற்கான பயங்கரவாதியின் விமானம் புறப்பட்டு, எதிர்த்திசையில் வருகிறது. அமெரிக்க விமானப்படையின் விமானம் ஒன்று குறுக்கே பாய்ந்து பயங்கரவாதியின் விமானத்தைச் சுட்டுவீழ்த்த, ஜனாதிபதி உயிர்த் தப்புகிறார்.

போலீஸார் ஆர்ம்ஸ்டட்டைக் கைது செய்ய முயலும்போது, ஆறாவது மாடியிலிருக்கும் தனது அலுவலகத்திலிருந்து, கீழே குதித்துத் தற்கொலை செய்து கொள்கிறார் ஆர்ம்ஸ்டட்.

நாட்டின் நலன் கருதி, இந்த விஷயங்களைப் பெரிதுபடுத்தாமல் அப்படியே விட்டு விடுகிறார்கள்.

அவரது மனைவி ஹன்னா, 'ரிகார்ட்' பத்திரிகையை ஏற்று நடத்துகிறாள்.

விக்டோரியாவும், நிக்ராம்ஸேயும் மணந்து கொள்கிறார்கள்.

(முற்றும்)

சபையின் தலைவர் வருகிறார். அந்த நிகழ்ச்சியைப் பத்திரிகையில் வெளியிட 'ரிகார்ட்' பத்திரிகையின் சார்பில் விக்டோரியாவும் நிக்ராம்ஸேயும் செல்கிறார்கள். சபைத் தலைவர் வரும் பாதையென்ன. அதன் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ன, அவரது பயணத் திட்டமென்ன என்றெல்லாம் விபரங்கள் சேகரித்து அனுப்புமாறு விக்டோரியாவுக்கு உத்தரவு வருகிறது. அனுப்புகிறாள் விக்டோரியா. பிறகு, அவர் வரும் நிகழ்ச்சியைப் பற்றி எழுத, கூட்டம் நடக்கும் இடத்தில் காத்திருக்கிறாள். சபைத் தலைவர் வரவே இல்லை. அப்போது ஒரு தூணோரம், இருவர் பேசிக் கொள்வதை ஒட்டுக் கேட்கிறாள். சபைத் தலைவரை, யாரோ கடத்திப் போய்விட்டார்களாம். விஷயம் வெளியே தெரிய வேண்டாம் என்று போலீஸார் யாருக்கும் தெரிவிக்காமல் விசாரித்துக் கொண்டிருக்கிறார்களாம்...

விஷயம் அறிந்து பரபரப்படைகிறாள் விக்டோரியா. அவசர அவசரமாக அமெரிக்காவிலிருக்கும் தன் பத்திரிகைக்குச் செய்தி அனுப்புகிறாள். ஆனால், இம்முறையும் அவளுக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது. மார்க் பிராட்ஷா ஏற்கனவேயே செய்தியை அனுப்பி, அது பத்திரிகையிலும் வெளிவந்து விடுகிறது.

'யார் இந்த மாயாவி, மார்க் பிராட்ஷா?' என்று குழம்புகிறாள் விக்டோரியா.

அடுத்தடுத்து, மேலும் இரண்டு நிகழ்ச்சிகள்.

கெய்ரோவில் இஸ்ரேலியப் பிரதமர் சுடப்படுகிறார். சில இரகசிய ஆவணங்கள் திருடப்படுகின்றன. அதுபோல, போப் ஆண்டவர் விஜயம் செய்த ஒரு

மார்க் பிராட்ஷா என்று யாருமே இல்லை என்று கண்டுபிடித்து விடுகிறாள் விக்டோரியா.

'அப்படியானால், செய்திகளை வெளியிடுவது யார்? பயங்கரவாதக் கும்பலில் யாரோ ஒருவர், முன்கூட்டியே ஆர்ம்ஸ்டட்டுக்குத் தெரிவித்து, அதனை அவர் பத்திரிகையில் வெளியிடுகிறாரோ? அப்படியானால், ஆர்ம்ஸ்டட்டுக்கும் பயங்கரவாதக் கும்பலுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமோ?

பலவிதமாகச் சிந்திக்கிறாள் விக்டோரியா.

தன் யூகங்களை நிக்ராம்ஸேயிடம் வெளியிடுகிறாள்.

இதுகுறித்துப் புலன் விசாரிக்கத் தீர்மானிக்கிறார்கள், இருவரும்.

கிம் நெஸ்பிட்டுடன் தகாத உறவு கொண்டிருக்கிறார், என்று தெரிந்து கொள்கிறாள் ஆர்ம்ஸ்டட்டின் மனைவி ஹன்னா. அதனால், கணவனுடன் சண்டையிடுகிறாள். தன் இரகசியங்களைத் தெரிந்து கொள்ள முயலும் மனைவியின் மீது, கோபம் எழுகிறது. உடனேயே, அவளுக்கு உணவில் விஷம் கொடுத்துக் கொல்ல முயல்கிறார். தெய்வாதீனமாகத் தப்பிய ஹன்னா, கணவனை வெறுக்கத் தொடங்குகிறாள். பழி வாங்கும் வெறி, எழுகிறது.

தன்னை, வெறும் உடலுறவுக் கருவியாக மட்டும் ஆர்ம்ஸ்டட் பயன்படுத்துகிறார், என்று கிம்நெஸ்பிட் புரிந்து கொள்கிறாள். 'என்னைப் பெண்ணாக உணர்ச்சியுள்ளவளாகப் பாவியுங்கள். என் மீது காதல் செலுத்துங்கள்' என்று கெஞ்சுகிறாள். தன் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேசும் கிம்நெஸ்பிட்டை அடித்து நொறுக்குகிறார் ஆர்ம்ஸ்டட். "...நான்

## தாலாட்டுப் பாடத் தயாராகிறார்



சாதி, மதம், இனம், மொழி, நாடு போன்ற பேதங்களை மறக்கடிக்கக் கூடியது காதல் என்றால் அதற்கு மிகையாகாது. இந்தியாவில் நேரு குடும்பம் இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு. இந்திரா முதல் பிரியங்கா வரை காதல் மணம் புரிந்தவர்கள் தான்.

ரொபேர்ட் வதேரா என்ற கிறிஸ்தவ இளைஞரின் காதல் வலையில் விழுந்த பிரியங்கா, 6 வருட காதலுக்குப் பிறகே அவரைக் கரம் பிடித்தார். 1997ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ம் திகதி இவர்களது திருமணம் எளிமையாக நடந்தது.

திருமணம் நடந்த சில நாட்களில் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியைச் சோனியா ஏற்க, தாய்க்கு உதவியாக பிரியங்காவும் அரசியலில் இறங்கினார்.

தேர்தல்கள் எல்லாம் முடிந்து விட்ட நிலையில் மீண்டும் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டார் பிரியங்கா. இப்போது பிரியங்கா 7 மாத கர்ப்பம். வெளியே யாரிடமும் தெரியாத இவ்விஷயத்தை அண்மையில் நடந்த பார்ட்டி ஒன்றில் வதேரா தெரிவித்தார்.

வருகின்ற ஆகஸ்ட் மாதம் அளவில் குழந்தை பிறக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்கேன் எடுத்துப் பார்த்ததில் பெண் குழந்தை என்றும் தெரியவந்துள்ளது.

பிரியங்காவின் சகோதரர் ராகுலின் திருமணம் ஜூன் 12ம் திகதி நடைபெறுகிறது. கொலம்பிய அழகியின் கரம் பிடிக்கும் ராகுலின் திருமணம் இலண்டனில் நடைபெறுவதாகக் கூறப்பட்டுள்ளது.

பிரியங்காவை வெளிநாட்டுப் பயணம் எதையும் மேற்கொள்ளக் கூடாது என்று மருத்துவர்கள் அறிவுரை கூறியுள்ளதால் ராகுலின் திருமணத்தை இந்தியாவில் நடத்தும்படி கேட்டுள்ளார் பிரியங்கா.

## எரிபொருளுக்குப் பணம் இல்லை

'இங்கிலாந்தின் ஆட்சியில் சூரியன் மறைவதில்லை' என்று ஆங்கிலேயர்கள் பெருமையுடன் கூறிக் கொள்வார்கள். அந்த அளவுக்கு கடல் கடந்து பல்வேறு நாடுகளைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்தவர்கள் அவர்கள்.

இப்போது அவர்கள் ஆதிக்கத்தில் மிகச் சொற்பமான நாடுகளே உள்ளன என்பது வேறு விஷயம்.

அவ்வளவு பழம்பெருமை உள்ள இங்கிலாந்தின் கடற்படை இப்போது போர்க்கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பப் பணம் இல்லாமல் திண்டாடி வருகிறது என்று நம்பமுடியாமல் இருக்கிறது அல்லவா?

எரிபொருள் நிரப்ப முடியாததால் 36க்கும் மேற்பட்ட கப்பல்கள் துறை முகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஏனைய கப்பல்களை அதிக வேகத்திற்கு மேல் ஓட்ட வேண்டாம் என்றும் உத்தர விடப்பட்டுள்ளது.

## ஜெமீமா மீது புதிய வழக்கு



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான் கான் மனைவி ஜெமீமா. இவர் பிரிட்டனைச் சேர்ந்தவர். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த இவர் பல எதிர்ப்புகளுக்கிடையே இம்ரானை மணந்து கொண்டார்.

பெரிய தொழிலதிபர் ஒருவரின் மகளான ஜெமீமா, பெண்களுக்கான ஆயத்த ஆடைகள் ஏற்றுமதிக் கம்பனியை நடத்தி வருகிறார். இவரது கம்பனியில் இருந்து பல நாடுகளுக்குத் துணிகள் ஏற்றுமதியாகின்றது. அத்துடன் வருடம் ஒருமுறை இலண்டனில் ஆடைகள் வாரத்தையும் நடத்தி வருகிறார். இதில் இவரது கம்பனி தயாரிக்கும் துணிகளுக்கு மவுசு அதிகம்.

இப்போது இவரது கம்பனிக்கும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. பாகிஸ்தானியப் பெண்களை வைத்துத் துணிகளைத் தயாரிப்பதா? அதிலும் சிறுமிகளை வைத்து வேலை வாங்குவதாகச் சிலர் போர்க்கொடி தூக்கியுள்ளனர். ஜெமீமா மீது வழக்குத் தொடரவும் முடிவு செய்துள்ளனர்.

பாகிஸ்தானிய பழங்காலப் பொருட்களை இலண்டனுக்கு எடுத்துச் சென்றதாக முன்பு ஜெமீமா மீது வழக்குத் தொடரப்பட்டது. இப்போது இவர் மீது இப்படியான புது வழக்கு.

## படப்பிடிப்பு மூலம் பழிவாங்கல்



'பேசிக் இன்ஸ்டிங்' படத்தின் மூலம் மிகப் பிரபல்யமானவர் ஷெரன் ஸ்டோன். இவர் ஒரு படத்தைத் தயாரித்துள்ளார். படத்தின் நாயகன் 'டைட்டானிக்' புகழ் லியார்னடோ டி காப்பிரியோ.

ஒரு நாள் படப் பிடிப்புக்குக் கடும் கோபத்தில் வந்தார் ஷெரன். படத்தின் நாயகனும் படப்பிடிப்புக்கு இன்னமும் வரவில்லை என்று சொல்ல அவரின் கோபம் பன் மடங்காகியது.

கோபத்தில் படப்பிடிப்பில் இருந்த கலைஞர்களை எல்லாம் கெட்ட வார்த்தைகளால் திட்டித் தீர்த்துவிட்டு மேக்-அப் போடச் சென்று விட்டார்.

குளியல் தொட்டியில் கவர்சிகரமாக நீராடுவது தான் அன்று ஷெரன் நடிக்கும் காட்சி. ஷெரனிடம் திட்டு வாங்கிய கலைஞர்கள் ஆத்திரமடைந்து என்ன செய்தார்கள் தெரியுமா?

ஷெரன் குளிக்க இருந்த தொட்டியில் ஒருவர் மாற்றி ஒருவர் சிறுநீர் கழித்து விட்டார்கள். பின் பாதித் தொட்டிக்கு மேல் சவக்கார நுரையுடன் கூடிய நீரை நிறைத்து விட்டார்கள்.

மேலாடைகளைக் கழற்றியபடி தொட்டிக்குள் இறங்கிய ஷெரனுக்குத் தொட்டியில் இருப்பது சுத்தமான தண்ணீர் இல்லை என்றும் திட்டு வாங்கியவர்கள் செய்த விஷமத்தனமும் புரிந்து விட்டது.

இருந்தாலும் அதைத் துளியும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் இயல்பாகக் குளித்து முடித்து விட்டு வந்து விட்டார்.

## டென்னிஸ் வீரரின் கியூபெக் காதலி



இந்திய டென்னிஸ் இரட்டையர்களில் ஒருவரான லியாண்டர் பயஸ் விளையாட்டில்' மட்டும் சாதிக்கவில்லை. சமீபத்தில் பல ஆயிரம் மைல் தொலைவில் உள்ள ஒரு பெண்ணின் மனதையும் வென்றுள்ளார்.

லியாண்டர் விளையாடும் அண்மைய போட்டிகள் எங்கு நடந்தாலும், 'கமோன் லீ...கமோன் லீ...' என்ற ஒரு பெண் குரல் ஒலிக்கும். இந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் கனடாவின் கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்த விக்கி லாப்.

இவர் ஒன்றும் சாதாரண பெண் அல்ல கராத்தே, குங்ஃபூ எல்லாம் தெரிந்த ஒரு பெண் பொலிஸ். கட்டுமஸ்தான இவர் இங்கிலாந்தில் ஒரு போட்டிக்குப் பாதுகாப்புக்குச் சென்றபோது லியாண்டரைப் பார்த்தார். லியாண்டரும் பார்த்தார். பிறகென்ன? காதல் தானே.

இப்போது இந்தியாவில் நடக்கும் போட்டிகளில் முதல் வரிசையில் உட்கார்ந்து, இவர் போடும் கூச்சலதான் லியாண்டருக்கு உற்சாக மாத்திரை.

# நேர்த்திக்கடன் நிறைவேற்றம்

கடந்த ஏப்ரல் மாதம் பெரிய வெள்ளியன்று இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நிகழ்ச்சி ஃபிலிப்பைன்ஸ் நாட்டில் நடத்தப்பட்டது. தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற இதில் 11 பேர் இயேசு நாதர் சிலுவையில் அறையப்பட்டது போல், சிலுவையில் அறையப்பட்டனர்.

தங்களது உடலை வருத்தி இயேசுவுக்கு நன்றி செலுத்திய இந்த 11 பேரில் ஒருவர் 14 ஆண்டுகளாக இதைச் செய்து வருகிறார். இவரது பெயர் சங்கலாங். 7.5 செண்டிமீட்டர் நீள ஆணிகள் இவரது கால்களிலும், கைகளிலும் அறையப்பட்டன.

கடந்த 1946ம் ஆண்டிலிருந்து இந்த நிகழ்ச்சி ஃபிலிப்பைன்ஸில் நடத்தப்பட்டு வருகிறது.





## கையடக்கக் கொம்பியூட்டர்

விஞ்ஞான வளர்ச்சியால் நாளுக்கு நாள் புதுப் புது கண்டுபிடிப்புக்கள் வந்து கொண்டிருக்கின்றன.

அதிலும் எலெக்ரோனிக் துறையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக புதுமைகள் மலர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

கஸியோ நிறுவனத்தினதும், ஹியூலெட் பேகார்ட் நிறுவனத்தினதும் புதிய கண்டுபிடிப்பான கையடக்கக் கொம்பியூட்டர்கள் தான் இவை. இந்த இரு நிறுவனங்களும் மைக்கரோ சொஃப்ட் மற்றும் கொம்பாக் நிறுவனமும் இணைந்து இந்தக் குட்டிக் கொம்பியூட்டர்களைத் தயாரிக்கின்றன.

## தகவல் பெட்டி

## தண்ணீர்த் திருட்டு

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் கோடைகாலங்களில் தண்ணீர்ப் பஞ்சம் நிலவி வருகிறது.

ஹிமாச்சல் பிரதேசத்தின் ஹமீர்பூர் பகுதியில் பல பாதாளக் கிணறுகள் உள்ளன. கோடை காலத்தில் அங்கு ஏற்படும் தண்ணீர்ப் பஞ்சத்தினால் அங்கு தண்ணீர் திருடப்பட்டு வருகிறது.

இதைத் தடுப்பதற்காக இருப்புக் கதவு கொண்டு கிணற்றைப் பூட்டி வைத்து விடுவார்கள். இப்படியும் எங்காவது நடக்குமா? என்று எண்ணத்தோன்றுகிறது அல்லவா?






## அடிச்சாச்சு லக்கி பிரைஸ்

அமெரிக்காவில் நடந்த பிரமாண்டமான ஜக்பொட் அதிஷ்டக் குலுக்கலில் ஜோ கைன்ஸ் என்பவருக்கு பரிசு விழுந்துள்ளது. பரிசுத்தொகையைச் சொன்னால் மயங்கி விழுந்து விடுவீர்கள் ஆமிரத்து 345 கோடி ரூபாய் யப்பா...!

கண்ணாடியுடன் கோர்ட் அணிந்தபடி மகிழ்ச்சியுடன் தன் குடும்பத்தினர் சகிதம் உள்ள இந்த அதிஷ்டக்காரர், வரிகள் அனைத்தும் போக இவருக்கு சுமார் 700 கோடி ரூபாய் கிடைக்கும்.

## விலையுயர்ந்த மோதிரம்

உலகிலேயே மிகவும் விலையுயர்ந்த மோதிரம் இதுதான். இதன் விலைக்குக் காரணம் 30.7கரட் வைரம் பதிக்கப்பட்டமைதான். அத்துடன் மோதிரம் ஒன்றில் பதிக்கப் பட்டுள்ள பெரிய வைரமும் இதுதான்.

ஈட்டி வடிவம் கொண்ட இந்த வைர மோதிரம் கார்ட்டியர் என்பவரால் உருவாக்கப்பட்டது.

ஜெனீவாவில் உள்ள கிறிஸ்டி ஏலக் கடையில் விற்பனைக்கு வந்துள்ளது. இதன் மதிப்பு 18 இலட்சம் அமெரிக்க டொலர். நம்மூர் மதிப்பில் சுமார் 13 கோடியே 32 இலட்சம் ரூபாய்.





## உலக மகா நுளம்பு வலை

நுளம்புத் தொல்லை ஆசிய ஆபிரிக்கக் கண்டங்களில் அதிகம் உள்ளது. நுளம்புகளால் ஏற்படும் மலேரியா நோயினால் ஒவ்வொரு வருடமும் சுமார் 10 லட்சம் பேர்வரை உயிரிழக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 90 சதவீதம் பேர் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மே 25ம் திகதி மலேரியா நோய் குறித்த மாநாடு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் நடைபெற்றது. இதையொட்டி அபுஜா நகரில் அமைக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய நுளம்பு வலை இது.



அமிஷா பட்டேல்
படம்: என்ன விலை அழகே

## பாலா இயக்கத்தில் அஜித் நடிக்கும் 'நந்தா'

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, பெங்காலி, மராத்தி, ஒரியா ஆகிய 8 மொழிகளிலும் உள்ள முன்னணி நட்சத்திரங்களை வைத்து சுமார் 65 படங்களைத் தயாரித்தவர் பூர்ணசந்திரராவ்.

இவர் தயாரிப்பில் அமிதாப்பச்சன், ரஜினி, சிரஞ்சீவி, மம்முட்டி, விஷ்ணுவர்த்தன் ஆகிய சூப்பர் ஸ்டார் நடிகர்கள் நடித்திருக்கிறார்கள்.

நீண்ட காலமாகத் தயாரிப்பில் இருந்து விலகி இருந்த பூர்ணசந்திரராவ் இப்போது தயாரிக்கும் படத்தை 'சேது' படத்தை இயக்கிய பாலா இயக்குகிறார். 'நந்தா' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இப்படத்தின் கதாநாயகனாக அஜித்குமார் நடிக்கிறார்.

கதாநாயகி மற்றும் ஏனைய நடிக, நடிகையர் தேர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதன் அறிவிப்புக்கள் விரைவில் வெளியாகும்.

## சிக்கலில் நக்மா படம்

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆகிய மொழிகளில் சுத்தமாக ஒரு படம் கூட இல்லாத நிலையில் ஒரே ஒரு இந்திப்படத்தில் மட்டும் நடித்து வந்தார் நக்மா. படத்தின் பெயர் 'பப்பா தி கிரேட்'.

பாக்யராஜ்-நக்மா நடித்த 'வீட்டில விசேஷங்க' படத்தின் இந்திப் பதிப்புதான் இது. படத்தைத் தயாரித்து நாயகனாக நடிப்பவர் கிஷன் குமார்.

அண்மையில் கிரிக்கெட் சூதாட்டத்தில் சிக்கியதால் கிஷன் குமார் மேல் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. எனவே படம் இப்போதைக்கு வெளிவராது போல் தெரிகிறது. இதனால் படத்தின் நாயகி நக்மாவுக்குப் பெருத்த ஏமாற்றம்.

## கதிரின் சொந்தப்படம்

'இதயம்', 'உழவன்', 'காதல் தேசம்', 'காதலர் தினம்' ஆகிய 4 படங்களை இயக்கிய கதிர், முதன் முறையாக சொந்தப்படம் தயாரிக்கிறார். இப்படத்தை அவரே இயக்குகிறார்.

இப்படத்தில் கதாநாயகனாக தெலுங்கில் அண்மையில் அறிமுகமாகியிருக்கும், பிரபல தெலுங்கு நடிகர் கிருஷ்ணாவின் மகன் மகேஷ் நடிக்கிறார்.

கதை விவாதம் எல்லாம் முடிந்து விட்ட நிலையில், இப்படம் தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் விரைவில் தயாராகவுள்ளது.

## நடிகையின் பெற்றோர் திருமணம்

குழந்தை நட்சத்திரமாக நடித்து கதாநாயகியானவர் மந்த்ரா. இவர் சினிமாவில் சம்பாதித்தை எல்லாம் இவரது தாயார் எடுத்துக் கொண்டார். இப்போது மந்த்ரா 'ப்ரியம்' படத்தயாரிப்பாளரின் ஆதரவில் இருந்து வருகிறார்.

மந்த்ராவின் பெற்றோர் விவாகரத்துப் பெற்றவர்கள். அண்மையில் இவரது தாய் ஹைதராபாத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவரைத் திருமணம் செய்துள்ளார்.

இதைப் பார்த்த மந்த்ராவின் தந்தை நான் மட்டும் என்ன இளைச்சவனா என்ற ரீதியில் அவரும் ஓர் இளம் பெண்ணைத் திருமணம் செய்திருக்கிறார்.

முகப்பில்
சிம்ரான்
பிரபு-
கார்த்திக்

## இரட்டை வேடத்தில் ரியா

'தாஜ்மஹால்', 'குட்லக்' ஆகிய இரண்டு படங்களின் தோல்வியால் இனித்தமிழ்ப் படங்களே வேண்டாம் என்று சொல்லி விட்டார் ரியா சென்.

அண்மையில் 'தில் ஹாகி ஹோரல் ஹை' என்ற வீடியோ ஆல்பத்தில் இரட்டை வேடத்தில் நடித்துள்ளார் ரியா.





## காதோடு சொல்லுகிறோம்

கோடிக்கணக்கில் பணம் புரளும் பல கம்பனிகளுக்கு அதிபதியான அழகு சாமியின் படங்கள் எதுவும் சரியாக ஓடாததால் புதிய படங்கள் எதையும் அவர் ஒப்புக் கொள்வதில்லையாம். நடிப்பில் ஆர்வம் இல்லாமல் இருக்கும் அவர் நடிப்புக்கு விரைவில் முழுக்குப் போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையாம்.

புகழ்பெற்ற கதாசிரிய, நடிக, இயக்குநரால் அறிமுகமான 'மோகன' நடிகை, பட வாய்ப்புக்களில்லாததால், தொழில் புரிய வெளிநாட்டிற்குப் படையெடுத்தார். இப்போது என்னவென்றால் அங்கிருந்தபடியே ஃபோன்மூலம் நடிகக வாய்ப்புக் கேட்டு வருகிறாம்.

அந்த நகைச்சுவை நடிகர் திறமைசாலிதான் இருந்தாலும் இவர் மேடைகளில் பேசும்போது, இவரையும் அறியாமல் அடுத்தவர்களைப்பற்றி அநாவசியமாகக் 'கொமண்ட்' அடித்து வருகிறார். இது 'விவேக'மான செயல் அல்ல என்று, யாராவது எடுத்துச் சொல்ல மாட்டார்களா?

சித்துபாத்தின் காதலி பெயரைக் கொண்ட அந்த இரண்டெழுத்து நடிகைக்கு தமிழில் வாய்ப்பில்லாமல் போக, தெலுங்குக்கு பறந்தார். அங்கும் வாய்ப்புக்கள் சரிவர அமையாததால் மறுபடி தமிழில் வாய்ப்புத் தேட ஹோட்டலில் வாசம் செய்கிறார். இருந்தும் பலன் பூஜ்யம் தான்.

படத்திற்குப் படம் வித்தியாசமான வேடங்களைச் செய்யும் நடிகரின் நகைச்சுவைப்படம் மூலம் முதன் முதலாகத் தயாரிப்பாளராகும் 'குமார' இயக்குநர் முன்பு போல உற்சாகமாக இல்லையாம். கேலியும் கிண்டலுமாக கலகலப்பாக இருக்கும் அவரிடம் இப்போது மருந்துக்குக் கூடப் புன்னகை இல்லையாம்.

## வேண்டாம் பிரபுதேவா

'ஏழையின் சிரிப்பில்' படத்தில் நடித்ததற்காக சம்பளத்தில் தனக்கு 5 இலட்சம் ரூபா மீதி வைத்து விட்டார் அப்படத்தின் தயாரிப்பாளரும் இயக்குநருமான கே.சுபாஷ் என்று அப்படத்தை வெளியிட முடியாதவாறு தடை விதித்தார் பிரபுதேவா.

பின் வேறொரு நடிகர் மூலம் பிரபுதேவாவுக்குப் பணத்தைக் கொடுத்து, படத்தை வெளியிட்டார் சுபாஷ். படம் ஓரளவு ஓடி சுபாஷிற்கு இலாபத்தைக் கொடுத்தது.

ஆனால் அதற்குள் கஷ்டத்திலும் படத்தை வெளியிட விடாமல் முடக்கிய பிரபுதேவாவை வைத்து இனிமேல் படம் இயக்கமாட்டேன் என்று கூறியுள்ளார் சுபாஷ்.



## பட்ஜெட் பத்மநாப...

பல வருடங்களுக்கு முன் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த 'வியட்னாம் வீடு' படத்தில் அவருக்குப் பெயர் 'பிரஸ்டீஜ் பத்மநாபன்'. தற்போது இளைய திலகம் பிரபு நடிக்கும் புதிய படத்திற்குக் கிட்டத்தட்ட அதே போன்றதொரு ... கப்பட்டுள்ளது.

படத்தின் பெயர் '... நாபன்'.

'மின்சாரக்கண்ணா' ... ஆகிய படங்களைத் தயாரி... இப்படத்தைத் தயாரிக்...

## சுபாஷ் இயக்கத்தில் ...

பிரசாந்த்-ஷாலினி ... 'பிரியாத வரம் வே...' படத்தைத் தயாரி... நிகிலா என்டர்பி... வனம் அடுத்து ... ஷள்ள படத்தில் ... நாயகனாக ந... இப்படத்... இயக்கவுள்... மூலம் ... சாந்த ... யாக இ...

◎ கமலுடன் 'சதிலீலா...' சத்யராஜுடன் 'பெரிய ...' படத்திலும் ஜோடி சேர்... சரனா, இப்போது 'புகழ்...' சரத்குமாருடன் ஜோடி ... இப்படத்தில் சரத்குமார் ...

◎ தொடர்ந்து வெற்றி... விக்ரமன் அடுத்து இயக்... நடிக்கவுள்ளார், 'பூவே உ...' விஜய் இணையும் படமி...

◎ 'மோகமுள்', 'முகம்', ... சேகரன் இப்போது 'பா...' பாரதியாரின் வாழ்க்கை ... தேவயானி நடிக்கிறார்.

◎ இசைஞானி இளைய... ஏ.ஆர்.ரகுமான் தனியாக ... போல், ரகுமானிடம் கீ-போ... வர் 'மஜ்னு' படத்தின் மூ...

◎ திருமணத்திற்குப் பின் ... மலையாளப்பட மொன்றில் ... 'பரமாதிகாரம்' என்ற ... டிக்கு ஜோடியாக நடிக்...

◎ விஜயகாந்தின் 'வல்...' இப்படத்தில் வில்லனாக ... பீவாகவுக்கு 3 புதிய பட...

◎ பிரபு கதாநாயகனாக ... பாட்டு' படத்தில் அறிமுக... பெயரை வைஜெயந்தி என...

◎ இயக்குநர் கதிரிடம் ... திருவேங்கடம் 'ஹலோ' ... மூவி மேக்கர்ஸ் பட நிறு... மூலம் இயக்குநராக அறி...



திரையுலக மறுபக்கம் 150

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# கலைஞர்களின் வயிற்றில் அடிக்கும் 'கிராமிய' இயக்குநர்

கிராமிய மணங்கமழும் படங்களைத் தானே தயாரித்து, கதை, வசனம் எழுதி, இயக்கி வருபவர் தான் இந்த இயக்குநர். மணக்கும் மான் இனத்தின் பெயரைப் தன் பெயரின் முதற் பாதியாகக் கொண்ட இவர் குறைந்த செலவில் படமெடுத்து இலாபம் பார்த்து விடுவார்.

குறைந்த செலவில் படம் தயாரித்தாலும் வெற்றிப்படமாகி விடுவதால் இவரது படத்தில் பலர் நடிக்க விரும்புகிறனர். ஆனால் இவரது படமொன்றில் நடித்தவர்கள் மீண்டும் நடிக்கப் பயப்படுவார்கள்.

காரணம் இவரிடமிருந்து காசு வாங்குவது என்றால் கல்லில் நார் உரிப்பதற்கு ஒப்பாகும்.

குழந்தைகளைத் தூங்க வைக்கப்பாடப்படும் விரப் பாட்டின் பெயரில் இவர் ஒரு படம் எடுத்தார். படத்தின் நடிக நடிகையர் மற்றும் கலைஞர்களுக்கு இவர் ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கவில்லை.

படத்தில் நடித்த நகைச்சுவை 'வண்ண' நடிகர் இவரை மிரட்டியே தனது சம்பளத்தைப் பெற்றுக் கொண்டார். படத்தின் நாயகனுக்கு அம்மாவாக நடித்த செல்வக் கடவுளின் பெயர் கொண்ட நடிகை கூட, தனக்கு வர வேண்டிய சம்பளத்தை, நடிகர் சங்கத்தின் முறையிட்டு அதன் மூலம் பெற்றார்.

புகழ்பெற்ற நடிக, நடிகையருக்கே இந்தக்கதி என்றால் சாதாரண கலைஞர்களின் கதி எப்படியிருக்கும்.

தனக்கு வரவேண்டிய சம்பளத்தைக் கேட்டு கேட்டு நொந்து போன கலைஞர் ஒருவர், இயக்குநரின் அலுவலகத்திற்கு முன்பாக இன்னொருவரிடம், 'பணம் தர வக்கில்லாதவன் ஏன் படமெடுக்க வரவேண்டும்? பேசாமல் சொந்த ஊருக்குப்போய் ஏதாவது தொழில் பண்ணவேண்டியது தானே" என திட்டித்தீர்த்தார்.

இப்போது இயக்குநர் உருவாக்கி வரும் காசிக்காட்டில் மலரும் பூ பெயர் கொண்ட படத்திலும் கதாநாயகன் உட்பட பலருக்குச் சம்பளம் கொடுக்கவில்லை.

படத்தின் நாயகனான வீரெஞ்ச மாவீரன் பெயரைக் கொண்ட நடிகர் சம்பளத்தைக் கேட்க, தனது வழக்கமான பாணியில் இழுத்தடித்தார் இயக்குநர். இதனால் கடுப்பான நடிகர் சம்பளத்தை முழுவதுமாகத் தந்தால் தான் படத்திற்குப் பின்னணி பேசவேன் என மிரட்டிப் பார்த்தார்.

'நீ பேசாவிட்டால் என்ன, நானே பேசி விடுகிறேன்' என்று அந்த நடிகருக்குத் தானே பின்னணி பேசிவிட்டார் இயக்குநர்.

நடிகரின் குரல் தமிழ் இரசிகர்களுக்குப் பழக்கமாகி விட்டது. இவர் குரலுக்கு நடிகர் பொருந்துவாரா? ஏதோ மொழி மாற்றுப் படம் போல் இருக்கும் எனப் படம் சம்பந்தப்பட்டவர்கள் பேசி வருகிறார்கள்.

அத்துடன் இப்போது ஆட்சியில் இருக்கும் தமிழக அரசின் ஆதரவு பெற்றவர் நடிகர். அதுமட்டுமில்லாமல் நடிகரின் மாமனார் தமிழக அமைச்சர். இவருக்கே இந்த நிலை என்றால்...? இயக்குநரை சும்மா விடுவாரா நடிகர்?

## மறுபடி நாகா

சிறிது காலம் தொய்வாக இருந்த நாகர்ஜுனின் மார்க்கெட் மறுபடி உயர ஆரம்பித்துள்ளது.

இதற்குக் காரணம் 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தின் வெற்றி தான். தமிழில் விஜய் நடித்த 'துள்ளாத மனமும் துள்ளும்' படம் தெலுங்கில் தயாரானது. தெலுங்கில் நாகார்ஜுன் ஹீரோ.

படம் பல திரையரங்குகளில் வெள்ளிவிழாவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. இதன் மூலம் நாகா மறுபடி தனது மார்க்கெட்டைத் தக்க வைத்துள்ளார்.

## சுரேஷ் கோபி-ஊர்வசி நடிக்கும் 'மக்கள் திலகம்'

50 மலையாளப்படங்கள் உட்பட 'அரங்கேற்ற வேளை', 'உன்னுடன்' போன்ற தமிழ்ப் படங்களையும் இயக்கியவர் அரோமா மணி. இவரது சுனிதா மூவிஸ் நிறுவனம் தற்போது 'மக்கள் திலகம்' என்ற மொழிமாற்றுப் படத்தைத் தயாரிக்கிறது.

மலையாளத்தில் 'ஜனாதிபத்தியம்' என்ற பெயரில் ஓடி வெற்றி பெற்ற படம் தான் தமிழில் 'மக்கள் திலகம்' ஆகிறது.

சுரேஷ் கோபி கதாநாயகனாகவும் ஊர்வசி-வாணி விஸ்வநாத் கதாநாயகிகளாகவும் நடித்துள்ளார்கள். இவர்களுடன் பாலச்சந்திரமேனன், ராஜன் பீதேல் உட்பட பலர் நடித்துள்ளனர்.

போலீஸ் அதிகாரி ஒருவர் அரசியலில் இணைந்து முதல்வராவது தான் படத்தின் கதை. இப்படத்தை கொமது இயக்கியுள்ளார்.

## சிம்ரான் இறங்குகிறார்

தமிழில் அதிக சம்பளத்துடன் அதிக படங்களில் நடித்து வந்தார் சிம்ரான். இவருக்குப் போட்டியாக இப்போது ஜோதிகா வந்து விட்டார்.

'குஷி'முதல் 'தெனாலி' வரையான சில படங்களில் முதலில் சிம்ரானே நடிப்பதாக இருந்தது. இப்படங்களில் இவருக்குப் பதில் ஜோதிகா நடிப்பதற்கு சிம்ரான் வாங்கும் பெரிய சம்பளமும் ஒரு காரணம்.

மறுபடி அதிக படங்களில் நடிப்பதற்காகவும் ஜோதிகாவை வீழ்த்துவதற்காகவும் சம்பள விஷயத்தில் கொஞ்சம் இறங்குகிறார் சிம்ரான்.



திவ்யா உன்னி
படம்: கண்ணன் வருவான்

## நடிப்பில் பிஸி

'ஹேராம்' படத்தை அடுத்து 'தெனாலி' படத்தில் நடித்து வரும் கமல், பல படங்களில் தொடர்ந்து நடிக்கவுள்ளார். படங்களில் நடிப்பதில் பிஸியாக இருப்பதால் இந்த வருடம் கமல் படத்தை இயக்கமாட்டார் எனத் தெரிகிறது.

'தெனாலி'யை அடுத்து சுரேஷ் கிருஷ்ணா, மலையாள இயக்குநர் பிரியதர்ஷன் ஆகியோரின் இயக்கத்தில் நடிக்கிறார்.

ஷங்கரின் புதிய படத்திலும் கமல் தான் கதாநாயகன் என நம்பகரமான சினிமாப் புள்ளி ஒருவர் கூறியுள்ளார். இதை பென்டா போர் என்ற நிறுவனம் தயாரிப்பதாகவும் அவரே கூறியுள்ளார்.

## மினி சினி

## தமிழில் தயாராகிறது

பிரபு-லைலா ஜோடியாக நடிக்க வினயன் இயக்கத்தில் உருவாகும் 'லோர் அன்ட் லவ்' என்ற மலையாளப்படத்தை தமிழிலும் வெளியிட உத்தேசித்துள்ளார்கள்.

தமிழில் இதற்கு 'நண்பனே நண்பனே' என்று பெயர் சூட்டியுள்ளார்கள்.

இதில் பிரபுவுடன் மலையாள முன்னணி நடிகர்களில் ஒருவரான திலீப்பும் நடித்து வருகிறார்.

## இலண்டன், பாரிஸில் பிரசாந்த்-அமிஷா சூயட்

மிகப் பிரமாண்டமான முறையில் தயாராகி வரும் படம் 'என்ன விலை அழகே'. பிரசாந்த்-அமிஷா பட்டேல் நடிக்கும் இப்படத்தின் முதற்கட்டப் படப்பிடிப்பு சென்னையில் நடைபெற்றது. அடுத்த கட்டப் படப்பிடிப்பு வெளிநாடுகளில் நடைபெறவுள்ளது.

**'அமெரிக்கா உன்னழகில் அடிமையாகும் அழகே அழகே'**

என்ற பாடலும்,

**'கிரேக்கச் சிலை தானோ கிறுக்குப் பிடித்தேனோ'**

என்ற பாடலும் இலண்டன், பாரிஸ் போன்ற நகரங்களில் படமாக்கப்படுகிறது.

இப்படத்தில் மணிவண்ணன், வடிவேலு, விஜயகுமார், விவேக், எஸ்.வி.சேகர், சந்திரசேகர், ரஞ்சித் ஆகியோருடன் இயக்குநர் ராஜ்கபூரும் நடிக்கிறார்.

வைரமுத்துவின் பாடல்களுக்கு தேவா இசையமைக்கிறார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் ராஜ்கபூர்.



## பிரிவுத் துயர் (அடையாள அட்டைக்கு)

அன்பே!
உன்னை-என்
பதினாறு வயதில்
பதிவுத் திருமணம் செய்து
எட்டு வருடங்களாகக்
கட்டிக் காத்து
வந்துள்ளேன்...!

அதற்காக.....
நீ
எனக்குச் செய்த
உதவிகளும்
ஒத்தாசைகளும்
இந்த ஜென்மத்தில்
மறக்கக் கூடியவைகளல்ல...!

உன்னுடைய
சிபார்சில் தானே-நான்
பரீட்சை எழுதினேன்;
பதவி ஏற்றேன்;
படையினர் வைத்த
தடைகளைத்
தாண்டினேன்!

அதனால்....
உன்னை-எனது
இதயத்தோடு
இணைத்த வண்ணம்-என்
இடது புறத்து-
நெஞ்சோடல்லவா
அணைத்து
வைத்திருந்தேன்?
நீதானே-என்
உயிர் மூச்சு
நீ தானே-என்
ஜீவ நாடி...!

இவ்வாறு என் உடலோடும்
உயிரோடும்
ஒட்டி வாழ்ந்த-நீ
இன்று
என்னைப் பிரிந்து-என்
மணி 'பேஸ்' (பர்ஸ) சுடன்
எங்கு போய் விட்டாய்?

நீ எங்கிருந்தாலும் வாழ்க!
ஆனால்....
ஒரேயொரு வேண்டுகோள்,
என்னருமை
அடையாள
அட்டையே!

நீ
குண்டு வெடிக்கும்
கூட்டங்களுக்குச் சென்று
என்னைக்
காட்டிக் கொடுத்து விடாதே!
எனக்கு
உயிர்ப் பிச்சை கொடு!

பீ.ஸற்.ஹரீஸ்-சாய்ந்தமருது-11.

## காதலால் தொடரட்டும்...!

நண்பனே!
தோல்விதான் வெற்றியின்
முதற்படி
என்ற நீயா இன்று
முகத்தில் தாடியுடன்
விரக்தியின் விளிம்பில்
நின்றுகெண்டு
புலம்புகிறாய்?

நண்பனே!
அன்பின்அழகை
கண்டு காதல்
கொண்டது
அந்தக்காலம்;
உடல் அழகில்
மயங்கி
காதல் கொள்வதுதான்
இந்தக்காலம்!

நண்பனே!
அன்போடு
நீ தேடிக்கண்ட
உன் அன்பான
காதலி எங்கே?-அன்று
"நீ இன்றி நான் இல்லை;
நீதான் என்வாழ்வு"
என்றெல்லாம்
சொன்னவள்தான்-இன்று
இன்னொருத்தனுடன்
கைகோர்த்து உன்
முன்னாலே வெட்கமின்றி
நடந்து
செல்கிறாளே!

நண்பனே!
மாற்றிவிடு உன்
மனத்தை
உன்வாழ்வில்
ஏற்பட்டிருக்கும்
அந்த காதல் தோல்விதான்
உன் வாழ்வில்
வெற்றியின் முதற்படி
என்று எண்ணி
காதலால் முடியவிருந்த
உன் வாழ்வை
மீண்டும் இன்னுமொரு
அன்பானவளின்
காதலால் தொடரவை
நண்பனே!, தொடரவை...!

க.அசோக்-சித்தாண்டி-04.

## அடிக்கடி அழகின்றேன்

நான் தினமும் அழுகிறேன்
என்னை ஏமாற்றி
விட்டாய்
என்பதற்காகவா?
நிச்சயமாக
இல்லை;
என்னைப் போன்ற
இன்னொரு
இதயம்
உன்னிடம்
ஏமாந்து
போக கூடாது
என்பதற்காக
தினமும்
அழுகின்றேன்!

ஆர்.கோணேஸ்வரன்-
நுவரெலியா.

## காதல்

வாழ்கை
என்ற உயிர் சங்கிலி
அறுந்து விடாமல்
காலம்.. காலமாய்
காத்து வருவது
காதல்!
ஒரு ஜீவனுக்கு இன்னொரு
ஜீவன் கொடுக்க
முடிந்த கதகதப்பான
உத்தரவாதம்
காதல்!
கொடுப்பவர்கள் மட்டும்
அதிகம் பெறுகின்ற ஒரே
ஓர் அதிசயம்
காதல்!
காதல் என்பது
அமுத-விஷம்!
புரிந்தோருக்கு அமுதம்!
புரியாதோருக்கு
விஷம்!


எஸ்.எச். றிஸ்வான்-
கிண்ணியா-06.

## சொல்லத்தான் துடிக்கிறேன்

நான்;
சொல்லத்தான்
துடிக்கின்றேன்
என்...
காதலின் புனிதத்தை...!
***
அவளுக்காக
என்...
இதயத்தில்,
சின்னதாய்-ஒரு தாஜ்மஹால்
கட்டியுள்ளேன்
என்பதை...
அவளிடம்
சொல்லத்தான் துடிக்கின்றேன்!
***
ஒவ்வொரு-நாளும்
என்...
நினைவுகளை
அவள்...
வசம்-விட்டுவிட்டு
நான்...
எங்கோ ஒரு மூலையில்,
தவமிருக்கின்றேன்!
அதை-சொல்லத்தான் துடிக்கின்றேன்....
***
அவள் அன்புக்காக...
அவள் முகம் காண...
எத்தனை இரவுகள்
என்...
கண்கள்-கண்ணீர்
சிந்தியது.
என்பதை...
அவளிடம்:- நான்
சொல்லத்தான் துடிக்கிறேன்!

என்.எல்.முஸம்மில்-
புதிய காத்தான்குடி-06.

## தேன் கிண்ணம்



## அவலம்

குண்டு வெடிப்பைப் பார்த்துப் பார்த்து
பழகிப்போன என் கண்கள்-ரோஜாவை
பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டன-சரி
பார்க்கட்டும் என்று மஞ்சள் ரோஜாவைப் பார்த்தேன்!

அதுவும் இரத்தக் கண்ணீர் வடித்து-சிவப்பு
ரோஜாவாக நிறம்மாறி விட்டிருந்தது!
அழிவுச் செய்தியைக் கேட்டுக் கேட்டு
மரத்துப் போன என்காதுகள்-ஆக்கச்
செய்தியைக் கேட்க ஆசைப்பட்டன-சரி
கேட்கட்டும் என்று வானொலியை இயக்கினேன்!
கல்யாணி ராகம் கூட முகாரி ராகமாய்
ஒப்பாரி பாடல் பாடின!

என் இதழ்கள் வார்த்தைகளை கவிதையாய்
மொழி பெயர்க்க ஆசைப்பட்டன-சரி
கவிதையை எழுதலாம் என்று பேனையை எடுத்தேன்!
என்ன ஆச்சர்யம்? கவிதைகூட-நம்
நாட்டின் அவல நிலையையே
கவிதையாய் மொழி பெயர்த்தன!

சில்மியா ஹகீம்-மதுரங்குளிய.

## விளம்பரப்படுத்த முடியுமா?

வேதனைகளை
விளம்பரப் படுத்த
முடியுமா?...
முடியுமென்றால்!....
வெளிப்படுத்துவேன்
தாராளமாக...!
***
கரை புரண்டோடும்
கண்ணீரில்
என் கவலைகள்
கரைந்து போகுமா...?
போகுமென்றால்!....
தாராளமாக
கண்ணீர்விடுவேன்!
***
தூக்கம்
தொலைத்த விழிகள்
துக்கம் தாளாமல்
கண்ணீரை
உமிழ்கின்றன!
***
ஆற்றப்படாத
ஒரு
காயம்
என்
அடிமனதில்
இருந்து கொண்டு
அனுதினமும்
என்னை
ஆட்டிப்படைக்கிறது.
ஆற்றப்படுமானால்
ஆனந்தமடைவேன்,
தாராளமாக!
***
வேதனைகளை
விளம்பரப் படுத்த
முடியுமா?...
முடியுமென்றால்
வெளிப்படுத்துவேன்
தாராளமாக....!
****

கருப்பையா சந்திரலதா-புண்டுலோயா.

## நடை மட்டும் போதுமடி

பட்டாடை உடுத்தும்
பெட்டை நிலவே
இந்த உடை
அலங்காரம் எதற்கு?
என்னை வஞ்சிக்க,
உந்தன் நடை
மட்டும் போதுமடி!

வி.க.இறிஷாத்-
மட்டக்களப்பு.

## பேனா நண்பர்கள்



பெயர்:
ம.ரூபராஜ்
வயது: 18
முகவரி: 178, குமாரபுரம்,
புன்னைச் சோலை,
மட்டக்களப்பு
பொழுது போக்கு:
பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: எஸ். யோகராணி,
வயது: 20
முகவரி: கிளரன்டன்,
கீழ்ப்பிரிவு,
நானுஓயா.
பொழுது போக்கு:
பத்திரிகை, புத்தகம்.

## இந்தவாரம் உங்கள் பலன்

04.06.2000 முதல் 10.06.2000வரை

ஜோதிடர் 'கார்னர்'

**மேடம் :**
எடுத்த கருமம் வெற்றி பெறும் மனதில் உள்ள பயம் நீங்கும். முக்கிய கரும விடயங்கள் திட்டமிட்டு செய்வதுடன் கல்வித்துறை சார்ந்தவர்கள் நன்மைகளைபெறுவார்கள். திருமண விடயங்கள் கைகூடும். அச்சுவினிக் காரர் பல வசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 06, 09.

**இடபம் :**
கவனக்குறைவால் தொழில் நிலை தடுமாற்றம். உறவினர் தலையீடும், பணநெருக்கடியும் ஏற்படும். விவசாயத்தொழில், நீதித்துறை சார்ந்தோர் பெரும் நஷ்டங்கள், சிக்கல்களை எதிர்கொள்வார்கள். ரோகினிக்காரர் எதிலும் கவனம் செலுத்த வேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : இளம்சிவப்பு; எண் : 07.
அதிஷ்ட திகதிகள் : 04, 07.

**மிதுனம் :**
பெண்களால் பிரச்சனைகள் உருவாக்கப்படலாம். எடுத்த கருமவெற்றிகள் பின் தள்ளப்படுதல். வியாபாரத்தால் சிக்கல்நிலை தோன்றுதல். புனர்பூசக்காரர் தொழிலில் கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண் : 08.
அதிஷ்ட திகதிகள் : 04, 08.

**கடகம் :**
தொழில் வசதிமேலோங்கும். இறுக்கநிலை மறையும். தலைக்கு மேலுள்ள பிரச்சனைகள் குறைந்து செல்லும். வெளியிடப்பயணங்கள். தடைப்பட்ட திருமணப்பேச்சுக்கள் கைகூடும். ஆயிலிய பெண்களுக்கு நல்ல நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்மஞ்சள்; எண் : 03.
அதிஷ்ட திகதிகள் : 05, 08.

**சிம்மம் :**
தூரதேசப்பயண திடீர் முயற்சி, பயணத்தல் பலவிதமான வெற்றிகள் பெறுதல். பெண்களால் நற்பலன்கள் ஏற்படுதல். காதல் உறவுகள் நன்னிலைபெறுதல். மகநட்சத்திரருக்கு, நற் நிச்சயபலன் பிரயாணம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 06, 10.

**கன்னி :**
குடும்ப மகிழ்ச்சி, கணவரால் சில நன்மைகள் ஏற்படுதல். உறவினர் வழியால் பொருள்சொத்துக்கள் சேருதல். கல்வி, தொழில் முயற்சிகள் பெருகுதல். உத்தரநட்சத்திர பெண்களுக்கு, வாழ்க்கை முயற்சிகள் தொடருதல்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 04, 06.

**துலாம் :**
மனதில் புத்துணர்ச்சி; தொழில் நிலை தளப்பம். கல்வியால் ஒருசில நன்மைகள் ஏற்படுதல் என்பன காணப்படும். உறவினரால் உதவிகள் கிடைக்கும். கைவிட்டுப்போன பொருட்கள் கிடைக்கவுள்ளது. சுவாதிக்காரருக்கு சகோதரரால் உதவிகள் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 05, 10.

**விருச்சிகம் :**
குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும். மனபதற்றம் குறைவுபெறும். நெடுநாட்கள் எதிர்பார்த்த கருமம் வெற்றி கிடைக்கும். மனைவியால் ஒருசிலர் நன்மை அடைவார்கள். கேட்டைக்காரர் யோகமான பலன்களைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண் : 09.
அதிஷ்ட திகதிகள் : 05, 09.

**தனுசு :**
பெரியோர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். பணச்செலவும் பிள்ளைகளின் யோசனையும் உண்டாகும். புதியமுயற்சிகள் காலம் பின்தள்ளிப்போடுவதும் போக்குவரத்து, வாகனம் வைத்துக் கொள்வார் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம்:இளம்மஞ்சள்;எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 07, 10.

**மகரம் :**
எடுத்த தொழில் முயற்சிகள் தடையுடன் செல்லும்: பணப் பொருள் வரவுகள் வந்து சேரும். அரசத் தொடர்பு, வங்கித் துறை சாதகமாக அமையும். பெண்களுக்கு ஓரளவு நன்மையாக அமையும் வாரமாகும். அவிட்டப் பெண்களுக்கு நன்மையான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : ஒரேஞ்சு; எண் : 04.
அதிஷ்ட திகதிகள் : 04, 07.

**கும்பம் :**
பணச்செலவுடன் தலைக்குமேல் நோய் துன்பநிலை, உறவினர் பிள்ளை களுடன் பலதரப்பட்ட பிரச்சனைகள் வந்துசேரும். உடலில் நோய் துன்ப பலமாற்றம் கவனம்தேவை.சதயக்கார பெண்களுக்கு பெரும் நோய் ஆபத்துக்கள் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : சனி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: பழுப்பு நிறம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 08, 07.

**மீனம் :**
71/2 சனி மாற்றம் மனதில் நிம்மதி பெருகும். கல்வி தொழில் ஊக்க முயற்சிகள் கூடும். தடைப்பட்ட விவாகம் நடைபெறும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். நோய் துன்பம் நிவர்த்தி பெறும். உத்திரட்டாதிகார பெண்களுக்கு நன்மையான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 01.
அதிஷ்ட திகதிகள் : 05, 10.

## நில்-கவனி-முன்னேறு

ஆண்டவன் நம்மை திறமையுடன் தான் படைத்து இருக்கிறான். நம்முடைய திறமையின் மேன்மையே நாம் வாழும் வாழ்க்கை.

சிந்தனையின் விளைவாகத் திறமையும், திறமையின் பரிசாகச் செயலும் தோன்றி வாழ்க்கைக்கு வடிவம் தந்து சமுதாயம் என்ற இணைப்பை ஏற்படுத்துகிறது.

மனிதனாகப் பிறந்த நம்மிடம் படைப்பாற்றல், பகுத்தறிவு, செயல்திறன், சேவை இருப்பது மேன்மையாகும்.

இவற்றை தகுந்த முறையில் பயன்படுத்தினால் தலை நிமிர்ந்து தன்மானத்துடன் வாழ முடியும்.

நம்முடைய திறமையை உரிய முறையில் ஒழுங்காகவும் நேர்மையாகவும் வகைப்படுத்தி வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அதனை அழகாக, அறிவாக, முழுமையாக வெளிப்படுத்தி மேன்மைப் படுத்துவதில் தான் வாழ்க்கையின் வெற்றியே அடங்கி இருக்கிறது.

நம்முடைய திறமையின் காரணமாகக் கிடைக்கும் பெருமையே வாழ்வின் கலையாகும்.

'ஆற்றலுக்கு மேலும் கீழும் சந்தர்ப்ப சக்கரங்கள் சுழன்று கொண்டேதான் இருக்கும். நேரமும் சக்தியும் இருக்கும் போது நாம் அதைப் பயன்படுத்திக் கொண்டு பக்குவமாக வாழ வேண்டும்.

நாம் வசதியுடனும் வளமாகவும் வாழ ஆற்றலையும் அறிவையும் உபயோகப்படுத்த வேண்டும்.

வசதியும் வாய்ப்பும் ஏற்பட்டு விடுவதனாலேயே உயர்ந்து விட முடியாது. அவற்றைத் திறமையாகப் பயன்படுத்துவதில் தான் வெற்றியின் மேன்மையே இருக்கிறது.

'எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் அவனுக்கு வந்தது. அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டு விட்டானே' என்று நடைமுறையில் கூறுவதைக் கேட்கிறோம்.

அதனுடைய அர்த்தம் என்ன?

நல்ல வாய்ப்பு கிடைத்தும் அதனைப் பயன்படுத்தத் தெரியாமல், திறமையை உபயோகிக்காமல் வீணாக விட்டு விடுவதுதான்.

'அதிர்ஷ்டவசமாக இவ்வளவு பெரிய வேலை அவனுக்குக் கிடைத்தும் பயன்



வாழும் கலையைக் கற்றுக் கொண்டவர்கள் மட்டுமே தங்களுடைய பெயரைப் பதிய வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

காலத்துக்கு ஏற்றபடி திறமைகளை உயர்த்திக் கொண்டு செல்லும் பொழுது தான் நாம் முன்னேறிச் செல்ல முடியும்.

நமக்கு இருக்கும் திறமை போதவே போதாது. இன்னும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பு நம்முடன் இருந்தே ஆக வேண்டும். துடிப்பு செயலைத் துரிதப்படுத்தும்.

இதற்கு மாறாக என்னிடம் இருக்கும் திறமை வேறு யாருக்கும் கிடையாது என்று மார்த்தட்டி மமதையுடன் இருந்தால், நாம் ஒரு நாளும் முன்னேற முடியாது.

நமக்கு நாமே அளவு கோல் போடாமல் நமக்கு அப்பாற்பட்டிருக்கும் அறிஞர்களின் திறமைகளை ஆராய்ந்துப் பார்த்து அதனைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இந்த உலகில் நல்ல முறையில் அபிவிருத்தி செய்யக் கூடிய ஒரு சிறு பகுதி கட்டாயம் இருக்கிறது. அந்த சிறு பகுதி உங்களுடைய திறமைதான் என்கிறார் ஹப்ஸ் லீ என்ற அறிஞர்.

இல்லாமல் போய்விட்டது பார்.'

'தகுதியும் திறமையும் இல்லாததனால் அதை அவனால் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லை' என்று ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றி மற்றவர்கள் விமர்சனம் செய்வது நடைமுறை வழக்கம்.

'ஒரு நல்ல வேலையை அதிர்ஷ்டத்தினால் பெற்றுவிடலாம்.

ஆனால் அந்த வேலையை அதிர்ஷ்டத்தினால் காப்பாற்றிக் கொள்ள முடியாது. என்கிறார் என்றிவிட்டன்.

'வீசும் காற்றும், எழும் அலையும் எப்பொழுதும் மிகத் திறமையான மாலுமியின் பக்கம் இருக்கும்' என்கிறார் ஆங்கில வரலாற்று ஆசிரியர் கிப்பன்.

வாழ்க்கையில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் எல்லோரும் தங்களுடைய திறமையினாலேயே உருவானவர்கள் தான், வரும் வாய்ப்பையும் ஏற்படும் சூழ்நிலையையும் தங்களுக்கு ஏற்ற வழியில் ஏற்றமளிக்கும் வகையில் சரியாகவும் சாமர்த்தியமாகவும் பயன்படுத்திக் கொண்டவர்கள் தான்.

இதில் சந்தேகமே கிடையாது வெற்றியின் திறவு கோல் திறமையே!

## வயிற்று வலித் தொல்லையா?



பெண்களுக்கு மாதவிலக்குச் சமயத்தில் வரும் வயிற்று வலி பெரும் தொல்லை தான். அந்தச் சமயத்தில் அடிவயிற்றுத் தசைகள் அளவுக்கதிகமாக சுருங்கி இழுப்பதால் இவ்வாறு வயிற்றுவலி உண்டாகிறது.

இதைத் தடுக்கும் மருந்துகள் எதுவும் திட்டவட்டமாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனாலும் பலர் மருத்துவரிடம் கலந்தாலோசித்து தகுந்த வலி நிவாரணிகளை உபயோகிக்கின்றனர். ஆனாலும் அந்த வலிக்கு வலி நிவாரணிகளை அதிகம் உபயோகிப்பதும் தவறாகும்.

உடலில் இரத்தம் குறைவாக இருந்தாலும் மாதவிலக்கு நாட்களில் அதிக வலி ஏற்படும். மாதவிலக்கு வருவதற்கு ஒரு வாரம் இருக்கும் போதே வயிற்றுப் பகுதித் தசைகளுக்கான எளிய உடற்பயிற்சிகளைச் செய்யலாம்.

மேலும் மாதவிலக்கு வருவதற்கு முந்தைய நாட்களில் உணவில் புதினாக்கீரையை அதிகம் சேர்க்கலாம். புதினா இது போன்ற உடல் உபாதைகளுக்கு நல்லது என்று கூறப்படுகிறத.

சீரக கஷாயம், இஞ்சி, சுக்கு, கலந்த சூடான தேனீர், சூடான எலும்மிச்சை சாறு போன்றவற்றைச் சாப்பிட்டால் வலிக்கு நிவாரணம் கிடைக்கும்.

மேலும் மாதவிலக்கு சமயங்களில் வலி வந்து விடுமே என்று பயப்படாமல் அதை எதிர் கொண்டு, நடைப்பயிற்சியில் ஈடுபட வேண்டும். தினமும் உடற்பயிற்சிக்குச் சிறிது நேரம் ஒதுக்க வேண்டும். இந்த உடற்பயிற்சிகள் வயிற்றுப் பகுதித் தசைகளுக்கு பயிற்சி அளிக்கும் கையில் அமைய வேண்டும்.

ஓட்டப் பந்தய வீராங்கனைகள் நடனமாடும் பெண்கள் ஆகியோருக்கு இதுபோன்ற உபாதைகள் வரும் வாய்ப்புகள் குறைவு என்று அறியப்பட்டுள்ளது.

அதனால் மாதவிலக்கு வந்தாலே உடல் நலம் குன்றி விட்டது போல் சோர்ந்து விடாமல் சுறுசுறுப்பாக வோக்கிங் (நடைப்பயிற்சி) செல்லலாம். வலி அதிகம் இருந்தால் வெந்நீர் ஒத்தடம் கொடுக்கலாம்.

## சாப்பிடுவது எப்படி?



சமைத்தலை விட சாப்பிடுவதில் அதிக முக்கியத்துவம் இருக்கிறது. முறையான சாப்பாடுதான் சரியான ஆரோக்கியம்.

★ மிகச் சரியான சாப்பாடு என்பது 1/2 வயித்து உணவு, 1/4 வயித்து தண்ணீர், 1/4 வயறு காலி என்பதுதான்! இதுதவிர மூக்கு முட்ட புடிப்பது என்பது இதுவரை நாம் கையாண்டு கொண்டிருக்கும் தவறான விஷயம்.

★ சாப்பாடு என்பது நன்கு பசிப்பதாக உணர்ந்த பிறகே சாப்பிட வேண்டும்.

★ சாப்பிடும் உணவு சுத்தமானதும், சுவையானதுமாக இருக்க வேண்டும்.

★ உணவை நன்றாக மென்று. அரைத்து சாப்பிட வேண்டும். அவசரம் அவசமாக முழுங்கலாகாது.

★ சாப்பிடும் போது மன அமைதியாக, ரசனையாக சாப்பிட வேண்டும். ஆவேச பேச்சுகள், பத்திரிகை படித்தல், டி.வி பார்த்தல் போன்ற பிற வேலைகளை சாப்பிடும் போது கையாளக்கூடாத.

★ சாப்பிடும் சமயத்தில் இடை இடையே தண்ணீர் அருந்தாமல் சாப்பிட்டு முடித்த பிறகு தேவையான அளவு தண்ணீர் குடிப்பது சாலச்சிறந்தது. முடியாதவர்கள் இடை இடையே சற்று குடித்துக் கொள்ளலாம். தப்பில்லை.

★ சாப்பாட்டின் போது குளிர்ந்த நீர் அருந்தலாகாது. அரை மணி நேரம் கழித்த பிறகே குளிர்ந்த நீர் அருந்தலாம்.

★ எதைச் சாப்பிடுவதாக இருந்தாலும் கண்டிப்பாக 3 மணி நேர இடைவெளிக்கு பிறகுதான் அடுத்ததாக ஏதாவது சாப்பிட வேண்டும்.

★ காலத்தை மழை காலம்-வெயில் காலம் என பிரித்து மழைக் காலத்துக்கு தக்கபடியும், வெயில் காலத்துக்கு தக்கபடியும் சாப்பிட வேண்டும்.

★ உதாரணமாக மழைக் காலங்களில் இறைச்சி, முட்டை போன்றவற்றை அதிகமாக சேர்த்துக் கொள்ளலாம். வெயில் காலங்களில் தயிர், காய்கறிகள் ஆகியவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம்.

★ மிகப் பழையதாக உள்ள உணவுப் பதார்த்தங்களை சாப்பிடலாகாது.

★ இவை தவிர ஒவ்வாமை உணவுகள் சில உள்ளன. இவற்றை ஒரே சமயத்தில் சாப்பிடுவது என்பது முன்னுக்குப் பின் முரணான விஷயங்கள் அகும்.

உதாரணமாக: மீன்-பால், இறைச்சி-தயிர்.

★ மிகவும் ஆரோக்கியத்தை பேணுபவர்கள் பழங்கள், காய் கறிகளை நிறைய சேர்த்துக் கொள்ள வேண்டும்.

★ மேற்கண்டபடி சாப்பாட்டு முறையை அமைத்துக் கொள்வதை தவிர ஆரோக்கியமான வயிறை பெற அதை நாம் அடிக்கடி சுத்தப்படுத்துவதும் இன்றியமையாதது.

★ நன்கு ஜீரணமாக இஞ்சியும், கிருமிகளைக் கொல்ல பாகற்காய்-சுண்டைக்காயும், பூண்டும், அழுக்குகளை நீக்க வாழைத்தண்டும் வாரத்தில் ஒரு நாள் சேர்த்துக் கொள்வது நல்லது.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HQ

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................
கையொப்பம்:........................

**உண்மை–நேர்மை–வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 10.06.2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## வழங்குவது 40 புவனா
# மோனிக்கா என் மோனிக்கா

ஒரு நாளல்ல; இரு நாட்களல்ல; பல நாட்கள் காத்திருந்தாள். அவளுடைய கண்ணும் கருத்தும் அவளுடைய அறையிலுள்ள தொலைபேசியிலேயே பதிந்திருந்தன.

கடமைக்காக காலையில் புறப்பட்டு பெண்டகன் செல்வாள். அங்கும் தொலைபேசியைப் பார்த்தவண்ணமே இருப்பாள். அலுவலகத்திலும், வீட்டில் தன் அறையிலிருந்த தொலைபேசிகளும் மோனிக்காவை தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டு வந்தன.

நாட்கள் செல்லச் செல்ல விரக்தி மேலீட்டால் பைத்தியம்பிடித்தவள் போலாகிவிட்டாள். தன் அறையில் கிடந்த பொருட்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்து வீசியெறிவாள்.

பல சமயங்களில் அழுது புலம்புவாள். அவளைக் கட்டுப்படுத்த அவளால் முடியவில்லை. அவள் தாயிடமும் எதுவும் பேசுவதில்லை. தனது அறையைப் பூட்டிக் கொண்டு தனிமையிலேயே இருந்து வந்தாள்.

அப்போது அவளிருந்த நிலையைப் பற்றி அவள் பிற்காலத்தில் இவ்வாறு கூறினாள்:

"நான் எப்போதும் தயாராகவே இருந்தேன். தொலைபேசியில் கிளின்ரன் அழைப்பு விடுத்ததும் ஓடோடிச் சென்று அவர் முன் நிற்பதற்கு எப்போதும் ஆயத்த நிலையிலேயே இருந்தேன். அவரிடம் செல்லும்போது எந்த உடைகளைத் தரிக்க வேண்டும் என்று அவருக்குப் பிடித்தமான உடைகளை தனியாக எடுத்து வைத்திருந்தேன். என் சிகையலங்காரத்தையும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் சீர் செய்து கொண்டேன். இத்தனை ஆயத்தங்கள் செய்திருந்த பின்னரும் அவருடைய அழைப்பு தான் வரவில்லை".

'வெள்ளை மாளிகையிலிருந்து என்னை வெளியேற்றிய போது எனக்கு அநீதி விளை விக்கப்படுகிறது என்று நான் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. நல்லபடியாக வெளியேறினேன். நான் ஏமாற்றப்பட்டு விட்டேன். புறக்கணிக்கப்பட்டமையினால் என்னுடைய வாழ்க்கை நொறுங்கி விட்டது! என்றும் கருதலானாள். ஏமாற்றத்தின் விளிம்பிலும் தனக்குரிய கடமையில் எத்தகைய தவறும் ஏற்படாமல் கவனமாக இருந்தாள். கடந்த ஆறு மாதங்களாக அவள் கண்டு வந்த கனவு நனவாகாமல் கனவாகவே வளர்ந்து இறுதியில் சுக்குநூறாகச் சிதறிப் போனது.

நவம்பர் மாத இறுதியில் ஒரு நாள் பெண்டகனில் உள்ள உணவு விடுதியை நோக்கி மோனிக்கா சோர்வாக நடந்துச் சென்றாள்.

அப்போது லிண்டா ட்ரிப்பைக் கண்டாள். லிண்டாவைக் கண்டதும் மோனிக்காவின் உள்ளம் வேகமாகத் துடித்தது. 'இன்றுள்ள விரக்தியான நிலையில் எனக்கு ஆறுதலளிக்கக் கூடிய ஒரே யொரு ஜீவன் லிண்டாதான், என்று கருதினாள். ஓடிச்சென்று லிண்டாவை அணைத்துக் கொண்டாள் மோனிக்கா.

'தேர்தல் முடிவடைந்து கிளின்ரன் வெள்ளை மாளிகை சென்றதும் மோனிக்கா மீண்டும் வெள்ளை மாளிகை செல்வாள். கிளின்ரனுக்கும் அவளுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு மீண்டும் வளரும்; அந்தச் சம்பவங்களெல்லாம் ஒளிவு மறைவின்றி, என்னிடம் தெரிவிக்கப்படும், என்று கருதியவளாக, அத்தகைய சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தவள் லிண்டா ட்ரிப்- இதோ அந்தச் சந்தர்ப்பம் அண்மையில் வந்து விட்டது என்று லிண்டாவின் மனம் துள்ளிக் கூத்தாடியது.

அந்த உணவு விடுதியில் ஒரு மூலையில் இருக்கைகளை தேடிப்பிடித்து இருவரும் அமர்ந்தனர்.

"இதோ பார் லிண்டா! நான் எல்லா உண்மைகளையும் உன்னிடம் ஒளியாமல் கூறப் போகிறேன். இதனை தயவு செய்து வேறு எவரிடமும் கூறிவிடாதே! நான் அவருடன் கடந்தகாலங்களில் மிக நெருக்கமாக உறவாடினேன். ஆனால் அதற்கு இனிமேல் இடமில்லை. அதற்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது", என்று திட்டவட்டமாக மோனிக்கா லிண்டாவிடம் கூறினாள்.

எல்லாமே முடிந்து விட்டது என்று மோனிக்கா சொன்னாலும் லிண்டாவை பொறுத்தவரையில் 'எல்லாமே இப்பொழுது தான் ஆரம்பமாகிறது' என்று நம்பினாள். "எனக்குத் தெரியும்- உன்னைப் போன்ற ஒரு பெண்தான் அவருக்குத் தேவை. நீ நிச்சயமாக நம்பு; நான் எதையும் கற்பனை செய்து கூறவில்லை. எனது பாட்டி மூலமாக என்னை வந்தடைந்த ஓர் அபாரமான சக்தியின் அடிப்படையில் தான் கூறுகிறேன். ஆரம்பத்தில் உன்னைப் பார்த்துப் பேசியபோதே எனக்குத் தெரிந்து விட்டது. உனக்கும் கிளின்ரனுக்குமிடையில் காதல் வளர்ந்து விட்டதென்று. இப்பொழுது கூறு பார்ப்போம். முழு உண்மையையும் என்னிடம் கூறிவிடு!"

கிளின்ரனுடனான தனது தொடர்புபற்றி தனக்கு மிக நெருக்கமான ஒருத்தியிடம்

## லிண்டா விரித்த வலை



மட்டும் தான் மோனிக்கா பட்டும் படாமலும் கூறியிருக்கிறாள். ஏனையோரிடம் தனக்கும் மற்றுமொரு முக்கியமான பிரமுகருக்குமிடையில் நெருக்கமான உறவு இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்திருந்தாள். ஆனால் இப்பொழுது லிண்டாவிடம் கிளின்ரனுடன்தான் தான் மிகவும் நெருக்கமான உறவினை வளர்த்து வந்திருப்பதாக வெளிப்படையாகக் கூறத் தலைப்பட்டாள்.

மோனிக்கா மீது உண்மையான அன்பும், அனுதாபமும் கொண்ட எவரும் இந்த விபரீதமான உறவை ஒரு கனவு போல மறந்து விடுமாறு கூறியிருப்பார்கள். ஆனால் லிண்டா ட்ரிப் முற்றிலும் மாறுபட்டவளாக அந்த வேண்டாத உறவுக்கு தூபமிடத்தலைப்பட்டாள்.

"மோனிக்கா! அது முடிந்துவிட்ட சமாச்சாரம் என்று நீ கூறுகிறாய். ஆனால் நிச்சயமாக உங்கள் இருவருடைய உறவும் முறிந்து விடவில்லை. அவரைப் பார்க்க வேண்டும்; பேச வேண்டும்; அவரோடு மீண்டும் உறவாட வேண்டும் என்றெல்லாம் நீ ஏங்கிக் கொண்டிருப்பது போல அவரும் உன்னை நினைத்து ஏங்கிக் கொண்டுதான் இருக்கிறார். மிக விரைவில் அவர் உன்னுடன் தொடர்பு கொண்டு உன்னை அவரருகில் அழைக்கத்தான் போகிறார். நீ வேண்டுமானால் பொறுத்திருந்துபார்? தேர்தலோடு சம்பந்தப்பட்ட அலுவல்கள் அனைத்தும் இன்னும் முடிந்து விடவில்லை. அவருடைய பணிகளெல்லாம் முடிவடைந்ததும். நிச்சயமாக உன்னை அழைப்பார்!" இவ்வாறு மோனிக்காவிடம் லிண்டா கூறியதும் மோனிக்கா புத்துயிர் பெற்றவள் போலானாள். தனது மனமறிந்து புத்தி புகட்டக்கூடிய ஓர் உண்மையான சிநேகிதி கிடைத்து விட்டதாக எண்ணி மனம் மகிழ்ந்தாள்.

ஆனால் லிண்டா விரித்த சதி வலையில் மிகச் சுலபமாக மோனிக்கா சிக்கி விட்டாதாக கருதவில்லை ஜனாதிபதியை லாவகமாக தனது பொறிக்குள் மாட்டுவதற்கு மோனிக்காவை தூண்டில் புழுவாக பயன் படுத்துவதற்கு லிண்டாவுக்கு நல்ல வாய்ப்புக் கிட்டிவிட்டது.

நியூ ஜெர்ஸியில் மோனிக்காவும் லிண்டாவும் ஒரே பள்ளியில் படித்தவர்கள். இருவருக்கும் ஓரளவு தான் அறிமுகம் இருந்தது. அதன் பின்னர் 1996 மே ஆரம்பத்தில் இருவரும் பெண்டகனில் சந்தித்து உரையாடினர். சில நாட்கள் மோனிக்காவை சந்தித்ததில், அவளுக்கும் வெள்ளை மாளிகையிலுள்ள முக்கிய பிரமுகருக்கும் தொடர்பிருக்கிறது என்பதை அறிந்து கொண்டாள்.


இதனைத் தொடர்ந்து லூஸியாணி கோல்ட்போர்க் என்ற எழுத்தாளரிடம் மோனிக்காவின் பெயரைக் குறிப்பிடாமல், "வெள்ளை மாளிகையின் மிக முக்கியமான ஒரு பிரமுகருடன் பாலியல் தொடர்பு வைத்துள்ள ஓர் அழகான பெண் எனது வலையில் வீழ்ந்துள்ளாள். அவளிடமிருந்து மிக முக்கிய மான-பரபரப்பூட்டும செய்திகளை நான் கறந்தெடுக்கப் போகிறேன்!" என்று கூறினாள்.

1996 நவம்பரில் மோனிக்காவினுடைய சந்திப்பு கிடைத்தவுடன் மீண்டும் கோல்ட்போர்க்கிடம் தொடர்பு கொண்ட லிண்டா, தான் ஏற்கனவே குறிப்பிட்ட வெள்ளை மாளிகை பிரமுகர் வேறுயாருமல்ல, ஜனாதிபதி கிளின்ரன்தான் என்ற உண்மையை வெளிப்படுத்தினாள்.

அப்பாவியான தனது மகள் மோனிக்காவின் பலவீனத்தை லிண்டா ட்ரிப் பயன்படுத்தி அவளை தப்பான பாதையில் இட்டுச் சென்று மாட்டிவிடப் போகிறாள் என்று கவலையுற்றாள்.

"மோனிக்கா-கிளின்ரன் உறவை உண்மையான காதல் உறவுதான் என்று எனது மகளை லிண்டா நம்பவைக்கிறாள். மோனிக்காவின் உண்மையான சிநேகிதிகள் அவளை கிளின்ரனுடனான போலித்தனமான உறவை மறந்து விடுமாறு அவளுக்கு புத்திமதி சொல்லிக் கொண்டிருக்கிற வேளையில் லிண்டா அப்புத்திமதிகளை முறியடித்து, தனது சுயநல நோக்கத்திற்காக எனது மகளை ஒரு கருவியாக்கப் பார்க்கிறாள்!" இவ்வாறு மோனிக்காவின் தாயார் புலம்பிக் கொண்டிருந்தார்.

கிளின்ரனுடைய தொடர்பை முற்றாக கத்தரித்துவிட வேண்டும் என்று மோனிக்கா



லிண்டா ட்ரிப்

கருதிய நேரத்தில், லிண்டா இடையில் புகுந்து "அவர் உன்னை அழைப்பார்; அவர் உன்னுடன் மீண்டும் தொடர்பு கொள்ளப் போகிறார்," என்று ஒரு மந்திரவாதி கூறுவது போல கூறிக் கொண்டே இருந்தாள்.

இதே காலகட்டத்தில் மோனிக்காவின் மிக முக்கியமான சிநேகிதியான கெதரின் ஒல்டே டேவிஸ் என்பவளின் திருமணம் ஹவாயில் நடைபெறுவதாக இருந்தது. இதற்குப் போவதற்காக மோனிக்கா திட்டமிட்டாள். ஹவாய் செல்லும் வழியில் லொஸ் ஏஞ்சல்ஸ் சென்று தன்னுடைய தந்தையார் லிவின்ஸ்கியையும் சிறிய தாயாரையும் பார்த்து விட்டு அங்கிருந்து போர்ட்லண்ட் செல்லவும் தீர்மானித்தாள்.

மணப்பெண் கெதரின் போர்ட்லண்டில் தான் வசித்து. வந்தாள். அங்கிருந்து மணமகளுடன் ஹவாய் செல்வதே மோனிக்காவின் நோக்கம்.

டிசம்பர் 2ம் திகதி மோனிக்கா லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு விமானத்தில் புறப்பட ஆயத்தமானாள். அன்றைய தினம் அமெரிக்காவின் முதல் பெண்மணியான ஹிலாரி வாஷிங்டனில் இல்லை என்பதை மோனிக்கா எப்படியோ அறிந்து கொண்டாள்.

(வருவாள்)


### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
### எட்டியாந்தோட்டை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | மு.செல்வமணி<br>இல.54, பருசல்ல ரோட், எட்டியாந்தோட்டை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பாப்பா முரசு சிறுகதை

# புத்திசாலி விவசாயி

முன்னொரு காலத்தில் சங்கமபுரி என்ற நாட்டை வம்சவர்தன் என்பவன் ஆண்டு வந்தான். இவனுக்கு மாறுவேடம் பூண்டு மக்களைச் சந்திப்பதில் கொள்ளைப் பிரியம்.

ஒரு நாள் வயல்வெளி பக்கம் நடந்து சென்றான். அங்கு ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்ட அரசன், "உழைப்பாளியே! இத்தனை வெயில் கொடுமையிலும் சளைக்காமல் உழைக்கிறாயே; இதில் சம்பாதிக்கும் பணத்தை எப்படிச் செலவு செய்கிறாய்?" என்றான்.



"எனக்கு வரும் வருமானத்தில் ஒரு பங்கை அரசருக்கு வரியாகக் கொடுக்கிறேன். இன்னொரு பங்கை நான் பட்ட கடனுக்கு அடைக்கிறேன். இன்னொரு பங்கை கடனாகக் கொடுக்கிறேன். மற்றொன்றை வீசி எறிகிறேன். கடைசி பங்கை எனக்காக செலவழிக்கிறேன்," என்றான்.

அரசனுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன இது புதிராகவே பேசுகிறாய். எனக்குப் புரியவில்லையே," என்றார்.

"ஐயா! என்னை வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கு செலவு செய்கிறேன். இது நான் பட்டகடன். அடுத்து என்னை நாளைக்கு வைத்து காப்பாற்றப் போகிற மகளுக்காக செலவழிக்கிறேன். இதுதான் கடன் கொடுக்கிறேன் என்று நான் சொன்னது. அடுத்து வீசி எறிகிறேன் என்றது. வயலில் பயிர்களை விதைப்பதற்காக வாங்க வேண்டிய பொருட்களுக்காக செலவழிப்பதைச் சொன்னேன். மற்ற இரண்டும் உங்களுக்குப் புரிந்திருக்குமே ஐயா!," என்றான்.

விவசாயியின் அறிவான பதிலைக் கண்டு மகிழ்ந்து போன அரசன், தன் வேடத்தைக் கலைத்தான். "இந்த பரிசை பெற்றுக்கொள். என்னிடம் சொன்ன விளக்கத்தை வேறு யாரிடமும் நீ சொல்லக் கூடாது!" என்று சொல்லி அனுப்பினான்.

மறுநாள் அரசவைக்கு வந்த மன்னன், அறிஞர் பெருமக்களைப் பார்த்து, இந்த பதிலைச் சொல்லி விளக்கம் தருபவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு தருவதாகக் கூறினார்.

ஒருவருக்குமே இதற்கான பதில் தெரியவில்லை. தந்திரசாலியான அமைச்சர், அரசன் மாறுவேடத்தில் நகர்வலம் வந்த இடத்தைக் கண்டு ஒருவழியாக யூகித்து விவசாயியை கண்டுபிடித்தான். அவனுக்கு நிறைய பொற்காசுகள் பரிசாகக் கொடுத்து அரசனிடம் சொன்ன விளக்கத்தை தன்னிடம் கூறும்படிச் சொன்னான்.


பொற்காசுகளை கண்ட விவசாயி ஒரு நிமிடம் யோசித்தான். மறுநிமிடம் எப்படியும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற நினைப்பில் பதிலைச் சொல்லி விட்டான். மந்திரி நேராக மன்னனிடம் சென்று பதிலைச் சொன்னான்.

ஆத்திரமடைந்த மன்னன், "அந்த மதி கெட்ட விவசாயியை இப்போதே கொண்டு வாருங்கள்!," என்று ஆணையிட்டார்.

தன் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட விவசாயியைப் பார்த்து, "உனக்கு என்ன தைரியம் இருந்தால், என்னைத் தவிர யாரிடமும் சொல்லக்கூடாது என்று சொன்ன புதிர்களை சொல்லியிருப்பாய்? என் கட்டளையை மீறிய உனக்கு என்ன தண்டனை தெரியுமா?" என்றான் கோபமாக.


விவசாயி சிறிதும் கலங்காமல், "அரசே! இப்போதும் நான் தங்களிடம்தான் சொன்னேன். இதோ பாருங்கள் அரசே! அமைச்சர் கொடுத்த பொற்காசுகள். இதில் இரண்டு பக்கமும் தங்களது திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதைக் கொடுத்து ரகசியத்தை கேட்ட உங்களது பிரதிநிதியிடம் தான் ரகசியத்தைச் சொன்னேன். அதாவது தங்களது திருவுருவத்திடம் தான் சொன்னேன். நான் எப்போதும் தங்கள் வாக்கை மீறவில்லை." என்றான்.

விவசாயியின் அறிவுக்கூர்மையை எண்ணி பிரமித்துப் போன மன்னன், அவனை பாராட்டி மேலும் பரிசுகள் வழங்கினான். தன் அறிவினால் தனக்கு கிடைத்த பரிசு பொருட்களைக் கொண்டு நிலங்களை வாங்கி பணக்காரனானான் விவசாயி. பொன், வெள்ளியை பார்க்கிலும் ஞானமே சிறந்தது என்பது புரிகிறதா குழந்தைகளே.




அனல் பறக்கும் வெய்யில் காரணமாக இந்தச் சிறுவனுக்கு சரியான தாகம். குளிர்சாதனப் பெட்டியில் இருக்கும் ஜில்லென்ற தண்ணீரை எடுத்துப் பருக வழி காட்டுங்கள்.





## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **10.06.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **345**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 343

**பரிசுக்குரியவர்:**
ஐ.சுஜித்தா,
கோ/வி/ம/ வித்தியாலயம், கல்முனை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எம்.ஜப்ரான் ஜாபிர், அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, திஹாரிய. | ஆனந்தப்பிரியா குகானந்தம், ஸ்ரீ சண்முகா இ.ம. கல்லூரி, திருகோணமலை. |
| மும்தாஜ் யூசுப், நீரெல்லை, அக்குறணை. | சு.ஜெறோம், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| பாத்திமா நிஷ்மா நஜீம், சென் எக்னஸ் கொன்வென்ட், பலாங்கொடை. | சி.லக்ஷனா, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு |
| பொன்னம்பலம் கமல்ராஜ், விநாயகர் மகா வித்தியாலயம், கோளாவில். | வரதராஜன் ரதீசன், வெஸ்லி உயர்தர பாடசாலை, காரைதீவு 02. |
| சுஸ்ரீ நாக வாணி ராஜ் தலவாக்கலை த/ம/வி/, தலவாக்கலை. | சுகாநந்தி சிவபெருமாள், மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா. |

## அபாயமான வாயு



★ கார்பன் மொனோக்சைட் என்றால் என்ன? ஏன் அது அபாயமானது? நிலக்கரி, மரம் எண்ணெய் அல்லது பெட்ரோல் போன்ற பொருட்களை எரிக்கும் போது போதுமான ஒட்சிசன் இல்லாதபோது வெளியாகும் வாயு அல்லது புகைதான் கார்பன் மொனோக்சைட் நிறமில்லாத, சுவையில்லாத, மணமில்லாத வாயு இது.

இது விஷத் தன்மை கொண்டது. இதற்கு மணமும் நிறமும் இல்லாததால் இதனைக் கண்டு பிடிப்பதற்கு முன் நிறைய வாயு வெளியேறியிருக்கும். இதனைச் சுவாசிக்கும் போது இரத்தத்தில் கலந்து விடும்.

உடலின் பல உறுப்புக்களுக்கு மிகவும் தேவையான ஒட்சிசனை எடுத்துச் செல்லும் சிவப்பு அணுக்களை வேலை செய்ய விடாமல் இந்த வாயு தடுத்து விடும்.

மூடப்பட்ட அறைக்குள் இந்தப் புகையைத் தொடர்ந்து சுவாசித்தால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மரணம் ஏற்படும்.

பெரிய நகரங்களில் வாகனங்களில் இருந்து ஏராளமான அளவு கார்பன் மொனோக்சைட் வெளியிடப்படுகிறது.

## ஒரு வரித்தகவல்கள்

★ இலங்கையின் பிரதான எரிபொருள் விறகு.
★ 'பார்சிலோனா' நகரம் உள்ள நாடு ஸ்பெயின் ஆகும்.
★ நாம் ஒரு நிமிடத்திற்கு 25 முறை கண் சிமிட்டுகிறோம்.
★ முதல் இந்திய செயற்கைக்கோள் விண்ணுக்கு ஏவப்பட்ட ஆண்டு 1975.
★ நேட்டோ அமைப்பின் தலைமையகம் பிரசல்ஸ்ஸில் உள்ளது.
★ நுளம்பு ஒழிப்பு தினம் ஆகஸ்ட் 20ம் திகதி கொண்டாடப்படுகிறது.

மு.சக்திலேந்திரன்-கொழும்பு 12.

## செய்து பாருங்கள் — வாழ்த்து அட்டை



**தேவையான பொருட்கள் :**


வழவழப்பான அட்டை, பிளாஸ்டிக் கிண்ணம், தண்ணீர், எனாமல் பெயிண்ட்.

**செய்முறை:**

★ பிளாஸ்டிக் கிண்ணத்தில் தண்ணீரை நிரப்பவும். அதில் சில துளிகள் பெயிண்டை கொட்டவும். (கலக்கக் கூடாது).

★ உடனேயே வழவழப்பான அட்டையை அதில் விட்டு எடுக்கவும். அட்டையில் பெயிண்ட் ஒட்டிக் கொண்டு புதுவித டிசைன் போல் இருக்கும்.

★ அந்த டிசைன் மீது உங்களுக்குப் பிடித்தமான படங்களை வரைந்து விட்டால் உங்களுக்குப் பிடித்தமான அழகான வாழ்த்து அட்டை ரெடி.



# திக் திக் தொடர்

"**நீ**ங்க கொஞ்சம் நேர்ல வரமுடியுமா ஸார்...? சின்னதா ஒரு டெமான்ஸ்ட்ரேஷன் பண்ணிக்காட்ட வேண்டியிருக்கு! இது சம்பந்தமா ஃபாரன்ஸிக் சீஃப் உங்களைப் பார்த்துப் பேச விரும்பறார்....?"

"இதோ.... வந்துட்டேன்...."

விவேக் செல்ஃபோனை அணைத்து விட்டு எழுந்தான்.

"நரேஷ்.....! நீங்க இன்னும் சில மணி நேரங்களுக்கு ஜாக்கிரதையா இருக்கணும். நாம எதிரிகளை நெருங்கிட்டோம்னு நினைக்கிறேன். ப்ளீஸ் டேக் கேர்....." விவேக் படபடவென்று பேசிவிட்டு அறையினின்றும் வெளிப்பட்டான்.

எதிரே கமாண்டோ ஆபீஸார் பதட்டமாய் வியர்வை முகத்தோடு எதிர்ப்பட்டார்.

## 28

# சிகப்பு வணக்கம்

விவேக் ஃபாரன்ஸிக் டிபார்ட்மெண்ட்டுக்குப் புறப்பட்டுப் போக, நரேஷின் அறையைவிட்டு வெளியே வந்த விநாடி, அந்த கமாண்டோ ஆபீஸர் பதட்டமாய் வர, விவேக் நின்றான். புருவம் உயர்ந்தது.

"எஸ்..."

"ஸார்... இந்த சர்க்யூட் ஹவுஸிலிருந்து இருநூறு மீட்டர் தள்ளி த்ரீ ஸ்டார் ஹோட்டல் ஒண்ணைக் கட்டிக்கிட்டு வர்றாங்க. கடந்த இரண்டு மாதகாலமாக



கட்டடப் பணி நிறுத்தப்பட்டு, அந்தக் கட்டடம் சாரங்களோடு அப்படியே நிக்குது. இப்போ அந்தக் கட்டடத்தில் இரண்டு பேர் பதுங்கியிருக்கிறதாகவும், அவங்க குட்டி மிஷின்களின் உதவியோடு இந்த சர்க்யூட் ஹவுஸைத் தகர்க்கப் போவதாகவும் ஓர் அநாமதேய ஃபோன் வந்தது..."

"எப்போ...?"

"இப்பதான் ஸார்... ஃபோனை அட்டெண்ட் பண்ணிட்டு உடனே உங்ககிட்ட வர்றேன்..."

"போலீஸ் ஹெட் க்வார்ட்டர்ஸூக்குத் தகவல் கொடுத்துட்டீங்களா...?"

"இல்லை ஸார்..."

"மொதல்ல தகவல் கொடுங்க... அவங்க சிறப்பு கமாண்டோ பிரிவு போலீஸ் ஸ்க்வாட்டை அனுப்பி ஆக்ஷன் எடுக்கட்டும்... நீங்களோ, இங்கே செக்யூரிடிக்காக வந்திருக்கும் சி.ஆர்.எஃப் போலீஸோ இந்த இடத்திலிருந்து ஒரு இஞ்சுகூட மூவ் ஆகவேண்டாம்.

டெலிஃபோனில் வந்த தகவல் பொய்யாக்கூட இருக்கலாம். நீங்கள் ஹெட் க்வார்ட்டர்ஸுக்கு விஷயத்தைத் தெரியப்படுத்தி விடுங்கள். வேண்டிய ஸ்டெப்ஸை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். நான் இப்போது ஒரு முக்கியமான காரியமாய் கிளம்பிக் கொண்டிருக்கிறேன். அடுத்த அரைமணி நேரத்திற்குள் உங்களை நான் தொடர்பு கொள்கிறேன்..."

"எஸ்... ஸார்...!" கமாண்டோ ஆபீஸர் சல்யூட்டோடு விலகி நிற்க, விவேக் வராந்தாவில் வேக நடை போட்டு போர்டிக்கோவில் நின்றிருந்த தன் காருக்கு வந்தான். இக்னீஷியன் கனைக்கப்பட்டு, ஆக்ஸிலேட்டர் அழுத்தப்பட்டு கார் சாலைக்கு வந்தது. ஃபாரன்ஸிக் துறைக் கட்டடம் இருந்த திசையை நோக்கி சீறியது.

அடுத்த வருடம் ஓய்வு பெறப் போகும் ஃபாரன்ஸிக் சீஃப் குப்தா, விவேக் தன் அறைக்குள் நுழைந்ததும் எழுந்து நின்று புன்னகையோடு கை குலுக்கி வரவேற்று, எதிரில் இருந்த நாற்காலியைக் காட்டிவிட்டு, தானும் உட்கார்ந்தார்.

"மிஸ்டர் விவேக்...! இந்த கிரிக்கெட்டியர்ஸ் கொலை வழக்குகளில் இப்போது நமக்கு ஒரு முக்கியமான க்ளூ கிடைத்து இருக்கிறது. 'ஆச்சரியம்... ஆனால் உண்மை' என்று சொல்வார்களே... அது மாதியான க்ளூ இது...!"

"டெலிஃபோனில் செய்தி கேட்டது முதல் எனக்குள்ளும் ஓர் ஆர்வம் முளை விட்டு விட்டது... சொல்லுங்கள் மிஸ்டர் குப்தா... அது என்ன க்ளூ...?"

"கிரிக்கெட் கப்டன் நரேஷைச் சுட்டுக் கொல்ல முயன்ற நபர் சாதாரண தோட்டா பிஸ்டலை உபயோகப்படுத்தவில்லை..."

"பின்னே...?"

"இது ஒரு 2லேஸர் பிஸ்டல்..."

விவேக்கின் நெற்றியில் வியப்பு வரிகள் ஜனித்து உடனே மறைந்தன.

"லேஸர் பிஸ்டலா...?"

"எஸ்... உடைந்த கண்ணாடி ஜன்னல்களின் சில்லுகளை ரசாயனப் பரிசோதனைக்கு உட்படுத்திப் பார்த்தபோது அந்த உண்மை தெரிந்தது..."

விவேக் தன் தாடையை அழுத்தமாய்த் தேய்த்துக் கொண்டே குப்தாவை ஏறிட்டான்...

### கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

"மிஸ்டர் குப்தா! நரேஷ் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இடம் சர்க்யூட் ஹவுஸ். டைட் செக்யூரிட்டி கொடுத்திருந்தோம்... இந்த செக்யூரிட்டியை ஊடுருவிக் கொண்டு யார் உள்ளே வந்திருக்க முடியும்...? அதுவும் லேஸர் பிஸ்டலோடு..."

"சாதாரண நபர்களால் உள்ளே வந்திருக்க முடியாது மிஸ்டர் விவேக். இன்றைக்கு லேஸர் பிஸ்டல்கள் ஒரு பேனா மாதிரியான வடிவமைப்பில் வெளிவந்து விட்டது. முன் பக்கம்திறந்தால் பேனா. பின்பக்கம் திறந்தால் பிஸ்டல். இது மாதிரியான லேஸர் பிஸ்டல்களை ஒரு பேனா குத்திக்கொண்டு யார் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் நுழைந்து விடலாம்..."

விவேக் குறுக்கிட்டான்: "எனக்கு ஒரு சந்தேகம் மிஸ்டர் குப்தா...?"

"சொல்லுங்கள்"

"கிரிகெட் கப்டன் நரேஷ் என்னோடு டெலிஃபோனில் பேசிக்கொண்டிருந்தபோது, துப்பாக்கி வெடிக்கிற சத்தம் கேட்டதே...? லேஸர் பிஸ்டலில் சத்தம் வராதே...?"

"எதிரிகளை பயமுறுத்துவதற்காக சில லேஸர் பிஸ்டல்களில் தோட்டா வெடிக்கிற மாதிரியான சத்தத்தை எழுப்பக்கூடிய அட்டாச்மெண்ட் டிவைஸூம் உண்டு. அந்த டிவைஸின் பட்டனை அழுத்தினால் போதும்... தோட்டா வெடிக்கிற மாதிரியான சத்தம் கேட்கும். அதே விநாடி லேஸரையும் இயக்கலாம்.

இது மாதிரியான பிஸ்டல்கள் அமெரிக்காவின் ஆயுதக் கள்ளச் சந்தையில் விற்பனையாகி வருகிறது. இண்டர்போல் போலீஸ், சமீபத்தில் எல்லா நாட்டு போலீஸ் ஹெட் க்வார்ட்டர்ஸுக்கும் நவீன லேஸர் பிஸ்டல்களைப் பற்றிய ஒரு வீடியோ காஸெட்டை அனுப்பியிருந்தது. அந்த காஸெட்டை நீங்களும் பார்க்க வேண்டும். அது உங்களுடைய இன்வெஸ்டிகேஷனுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவி செய்யக் கூடும்!"

சொன்ன குப்தா மேஜைமேல் இருந்த ரிமோட் கண்ட்ரோலை எடுத்து, ப்ளே பட்டனை அழுத்த, அறையின் மூலையில் டெக்கோடு இணைக்கப்பட்டிருந்த டி.வி. திரை, உயிர் பெற்று, முதலில் வெளிச்சப் புள்ளிகளைக் காட்டிவிட்டு, 'இன்வென்ஷன் ஆஃப் லேஸர் பிஸ்டல்ஸ்' என்று சிவப்பு வர்ணத்தில் எழுத்துக்களை ஜனிக்க வைத்தது.

தொடர்ந்து ஒரு ஹஸ்கியானகுரல் ஆங்கில வர்ணனையைத் துவக்கியது.

"இந்த அதி நவீன லேஸர் துப்பாக்கிகளைக் குறித்து, போலீஸ்துறை மிகுந்த எச்சரிக்கையுணர்வோடு இருக்க வேண்டும். இந்த அபாயகரமான லேஸர் பிஸ்டல்கள், இப்போது சமூக விரோதிகளின் கைகளை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன. பேனா வடிவத்திலும், சிகரெட் லைட்டர் வடிவத்திலும் வெடிகுண்டு நிபுணர்களால் தயாரிக்கப்படும் இந்த லேஸர் பிஸ்டல்கள் சமூக விரோதிகள் கையாள சுலபமாகிவிடுகிறது..."

வர்ணனை தொடர்ந்து கொண்டிருக்க, டி.வி. திரையில் லேஸர் பிஸ்டல்கள் விதவிதமான பேனா வடிவங்களிலும், சிகரெட் லைட்டர், பென் டார்ச் வடிவங்களிலும் காட்சியளித்து ஸ்லோமோஷனில் மறைந்து கொண்டிருந்தன.

டி.வி. திரையைப் பார்த்துக் கொண்டிருந்த விவேக், சட்டென்று ரிமோட் கண்ட்ரோலை எடுத்து, பட்டனைத் தட்டி ரீவைண்ட் செய்து, மறுபடியும் ப்ளே பட்டனைத் தட்டி, லேஸர் பிஸ்டல் வடிவங்களை திரையில் ஓட வைத்து பேனா வடிவில் இருந்த அந்த லேஸர் பிஸ்டலை ஃப்ரீஸ் செய்தான்.

அது திரையில் அச்சடித்த மாதிரி அப்படியே நின்றது.

குப்தா கேட்டார்: "இதை எதற்காக இப்போது ஃப்ரீஸ் செய்தீர்கள் விவேக்...?"

"என் மனதுக்குள் இப்போது லேசாய் ஒரு பொறி தட்டியுள்ளது. அந்தப் பொறி ஒரு நெருப்பாய் மாறுவதற்கு முன் முதலில் இந்த மாத்திரைப் பட்டையைக் கொஞ்சம் பாருங்கள்..."

விவேக் நீட்டிய அந்த கசங்கப்பட்ட அலுமினியத் தாளை குப்தா வாங்கிப் பிரித்தார். லேன்ஸ் கண்ணாடியை கண்களுக்குக் கொடுத்து, மாத்திரைப் பட்டையில் இருந்த எழுத்துக்களைப் படித்துப் பார்த்துவிட்டு நிமிர்ந்தார்.

"இது உங்களுக்கு ஏது... மிஸ்டர் விவேக்?"

"ஒரு முக்கியமான இடத்தில்கிடைத்தது. அந்த மாத்திரைப் பட்டையில் என்ன மாத்திரை இருந்தது என்று சொல்ல முடியுமா?"

"ஷ்யூர்...! இது ஒரு வகையான பெய்ன் கில்லர். இதுவும் வெளிநாட்டுச் சங்கதிதான். போலீஸில் சிக்கிக் கொள்ளும் சமூக விரோதிகள், போலீஸ் விசாரணையின் போது அவர்கள் கொடுக்கும் சித்திரவதைகளைத் தாங்கிக் கொள்வதற்காகச் சாப்பிடும் மாத்திரைகள் இது. இந்த மாத்திரைகளுக்கு பெயர், 'ப்ரீ பெய்ன் கில்லர்.'

ஒரு மாத்திரையின் விலை ஐயாயிரத்திலிருந்து ஏழாயிரம் ரூபாய் வரை இருக்கும்...! இது உங்களுக்கு எங்கே கிடைத்தது மிஸ்டர் விவேக்...?"

விவேக் எழுந்தான்: "நீங்களும் நானும் இப்போது அந்த இடத்துக்குத்தான் போகப் போகிறோம் வாருங்கள்..."

குப்தாவும் குழப்பத்தோடு நாற்காலியைத் தள்ளிக்கொண்டு எழுந்தார்.

★★★

**ச**ர்க்யூட் ஹவுஸ்.

கிரிக்கெட் கப்டன் நரேஷுக்கு முன்பாய், விவேக்கும் ஃபாரன்ஸிக் சீஃப் குப்தாவும் உட்கார்ந்திருந்தார்கள். விவேக் சொல்லிக் கொண்டிருந்தான். கையில் டைப் எழுத்துக்களோடு ஒரு தாள்.

"மிஸ்டர் நரேஷ் ...! உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் பாதுகாக்க தமிழக போலீஸ் எடுத்துக் கொண்ட முயற்சிகளை ஒரு ஸ்டேட்மெண்டாக எழுதியுள்ள கடிதம் இது. இதைப் படித்துப் பார்த்துவிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்திகரம்தான். என்பதைத் தெரிவிக்க இந்தக் கடிதத்தில் நீங்களும் கையெழுத்திட வேண்டும்..."

நரேஷ் அந்த லெட்டரை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு புன்னகைத்தான்.

(தொடர்ந்து வரும்)

# புகழ்பெற்ற வழக்குகள்

புகழ்பெற்ற வழக்குகள் என்ற வரிசையில் பல நாடுகளிலும் நடைபெற்ற வழக்குகள் சிலவற்றை இப்பத்திரிகையில் தருகிறோம்.

கிழக்குப் பாகிஸ்தான் என்றிருந்த பிரதேசத்தை பாகிஸ்தான் என்ற கட்டமைப்பிலிருந்து தனி நாடாகப் பிரகடனப் படுத்தியவர் முஜிபூர் ரஹ்மான். பங்களாதேஷ் என்று அந்நாட்டுக்குப் பெயர் சூட்டி, அந்நாட்டின் பிரதமராகவுமானார். ஆனால் அவர் பிரதமராக அதிக காலம் நீடிக்க முடியவில்லை. அவருடைய ஆட்சியில் ஊழல் மலிந்து விட்டது என்று கூறிக் கொண்டு சில இராணுவ அதிகாரிகளே முஜிபூர் ரஹ்மானையும் அவருடைய குடும்பத்தினரையும் சுட்டுக் கொன்றனர்.

இப்படி கொலையில் தப்பிப்பிழைத்த ஒரேயொருவரான அவருடைய மகள் ஹஸீனா, பங்களாதேஷின் பிரதமரானதும், தனது தந்தையைக் கொலை செய்தவர்களைப் பழிதீர்க்க மேற்கொண்ட நடவடிக்கையே இது.

**பா**கிஸ்தானிலிருந்து கிழக்கு பாகிஸ்தான் பிரிய வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார் முஜிபூர் ரஹ்மான். இந்தப் புதிய நாட்டின் பெயர் பங்களாதேஷ் என்றும் அறிவித்து,



'பங்களாதேஷ் விடுதலைப்படை இயக்கம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். இது பாகிஸ்தான் அதிபரான யாஹ்யா கானுக்குக் கடும் எரிச்சலை அளித்தது. முஜிபூரைக் கொல்ல அவர் திட்டம் தீட்

## 20 வருடங்கள்

## வெள்ளை அடிக்கப்படாத வீடு

டியதாகக்கூட வதந்தி பரவியது. ஆனால், முஜிபூர் இறந்தது, கிழக்கு பாகிஸ்தான் பங்களாதேஷ் என்ற தனிநாடாகி, அதன் தலைவராகவும் அவர் ஆன சில வருடங்களுக்குப் பிறகு தான்.

பங்களாதேஷின் பிரதமரான முஜிபூர் மீது, விரைவிலேயே 'அவர் சர்வாதிகாரியாகி விட்டார்' என்றும், 'ஊழல் பெருச்சாளியாக விளங்குகிறார்' என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

பிற அரசியல் கட்சிகளுக்கு அவர் தடை விதித்ததும், நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தையே மாற்றித் தன்னை பலம் பொருந்திய ஜனாதிபதியாக அவர் ஆக்கிக் கொண்டதும் இராணுவத்தின் கடும் வெறுப்பை சம்பாதித்தது.

இராணுவ அதி காரிகள் சிலர் முஜிபூரின் வீட்டுக்குள் நுழைந்து அவரைச் சுட்டு வீழ்த்தினர். உடல் முழுவதும் குண்டுகளால் துளைக்கப்பட்டிருக்க, முஜிபூரின் உயிர் பிரிந்தது.

அவரோடு, அவரது பதினைந்து உறவினர்களையும் தீர்த்துக் கட்டிவிட்டுத் தான் இராணுவ அதிகாரிகள் திரும்பினர். அப்போது ஜெர்மனியில் தங்கியிருந்த ஒரே காரணத்தினால் உயிர் பிழைத்தார் முஜிபூரின் மகள் ஹசீபா.

முஜிபூர் படுகொலையைத் தொடர்ந்து இராணுவ அரசு பதவியேற்றது, மேற்கூறிய கொலை, தேசிய நலன் என்ற பிரிவிலேயே அடங்கும் என்று கூறி அதற்கேற்ப ஒரு சட்டத்தை இயற்றியது.

அதாவது கொலை செய்த இராணு அதிகாரிகளுக்கு சட்டப்பாதுகாப்பு கிடைத்துவிட்டது.

ஆனால், முஜிபூர் ஆட்சியை வெறுக்கத் தொடங்கிய மக்கள் கூட அவரைப் படுகொலை செய்ததை ஏற்றுக் கொள்ளவில்லை.

உள்ளூர் எதிர்ப்பிலிருந்து அந்த இராணுவ அதிகாரிகளைக் காப்பாற்றும் வகையில் அவர்களை லிபியாவுக்கு அனுப்பிவிட்டது அரசு. அது மட்டுமல்ல, நாளடைவில் பல்வேறு நாடுகளின் பங்களாதேஷ் தூதர்களாகவும் அவர்கள் ஆக்கப்பட்டனர்.

தனது மொத்தக்குடும்பத்தினரும் படுகொலை செய்யப்பட்டது முஜிபூரின் மகள் ஹசீனாவின் மனதில் பெரும் காயத்தை ஏற்படுத்தியது.

தனது பழிவாங்கும் உணர்வு மங்கிவிடக்கூடாது என்பதற்காகவே குண்டுகளையும், இரத்தக்கறைகளையும் தாங்கி நின்ற தன் வீட்டுச்சுவர்களுக்கு இருபது வருடங்களுக்கு மேல் வெள்ளையடிக்காமல் இருந்தார் ஹசீனா.

காலம் சுழன்றது. நாட்டின் பிரதமரானார் ஹசீனா, பதவியேற்ற கையோடு வெளிநாடுகளில் தங்கியிருந்த மேலே குறிப்பிடப்பட்ட தூதரக அதிகாரிகளை தாய்நாடு திரும்ப உத்தரவிட்டார்.

நடக்கப்போவது என்ன என்பதை உணர்ந்த பலரும் தலைமறைவாகி விட, ஒருவர் மட்டும் வந்து சேர்ந்தார்.

'முஜிபூரைக் கொன்றதற்காக என் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. அதற்குத்தான் அரசியலமைப்புச் சட்டம் இடம் கொடுக்கவில்லையே' என்று அவர் நினைத்திருக்கக்கூடும்.

ஆனால் சட்டவிரோதமான ஆயுதங்களை வைத்திருந்தார் என்ற (பொய்?) காரணத்தைக் குறிப்பிட்டு அவர் மீது வழக்குத் தொடுத்து கடுங்காவல் சிறைத் தண்டனை வாங்கிக் கொடுத்தது ஹசீனா அரசு.

அது மட்டுமல்லாமல், முஜிபூரைக் கொன்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாதபடி மாற்றப்பட்ட சட்டம் செல்லுபடியாகாது என்று கூறி அதை நீக்கியது அரசு.

உடனே முஜிபூர் படுகொலைக்கான திட்டம் தீட்டியவர்கள் என்று கருதப்படும் ரஷீத்கான் மற்றும் சையது ரஹ்மான் ஆகிய இருவரும் 'இந்த சட்ட நீக்கம் தவறானது; அரசியலமைப்புக்கு எதிரானது' என்று கூறி வழக்குத் தொடுத்தனர்.

இந்த வழக்கை நீதி மன்றம் தள்ளுபடி செய்து விட, அவர்கள் இருவரையும் கொலைக்குற்றம் சாட்டி கூண்டில் ஏற்றியது ஹசீனா அரசு, கொலை வழக்கில் அவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. தலைமறைவான பிறருக்கும் வலை வீசப்பட்டிருக்கிறது.

(வழக்குகள் தொடரும்)

ராம் ஷேகர்

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி....

## எஸ்.டி.சிவநாயகம் 05

**இரா. பத்மநாதன்**

திரு.எம்.எஸ். பாலு அவர்கள் ஒமக்குச்சி போன்ற ஒல்லியான தேக முடையவர். ஆனால் அவருடைய எண்ணங்கள் உறுதியானவை. எவருக்கும் அஞ்சாத மனப்பான்மையுடையவர். எத்தகைய சந்தர்ப்பத்திலும் தன்னுடைய கருத்தை வலியுறுத்தியே வருவார். இத்தனைக்கும் அவருடைய செயற்பாட்டில் நகைச்சுவையே மேலோங்கி நிற்கும்.

கதிர்காம உற்சவம் ஆரம்பமாவதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்னர் வட பிராந்தியத்திலிருந்து கால் நடையாக கதிர்காமத்துக்கு யாத்திரை செல்வோர் எப்போதும் சாரி சாரியாக மட்டக்களப்பு பிரதான வீதியினூடாகப் போய்க் கொண்டேயிருப்பார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சில போலிச் சாமியார்களும் இக்குழுக்களில் இணைந்து கொள்வார்கள்.

### தண்ணீர்ப் பந்தல்

கதிரமலை செல்லும் யாத்திரீகர்களுக்காக தண்ணீர்ப்பந்தல் வைக்கப் போவதாக கூறிக்கொண்டு ஒருசிலரும் கால் நடையாக கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் உள்ள வீடுகளில் உள்ளவர்களிடம் "தண்ணீர்ப் பந்தல் வைக்க பொருளுதவி செய்யுங்கள்!" என்று கோருவார்கள். இத்தகைய கோரிக்கையுடன் ஒருவர் வந்தாறு மூலையில் இருந்த திரு.பாலு அவர்களுடைய இல்லத்தை வந்தடைந்தார். அவரை வரவேற்று நன்கு உபசரித்து மதிய உணவு உட்கொண்டு போகுமாறு பாலு அவர்கள் கேட்டுக்கொண்டார். வந்திருந்தவரும் பாலு அவர்களின் தாராள மனப்பான்மையை மெச்சியவராக அமர்ந்திருந்தார்.

அன்று பள்ளிக்கூட விடுமுறை நாள் என்பதால் ஈழத்துரத்தினம், காசி ஆனந்தன் வில்வராஜா போன்ற மாணவர்களும் அங்கே இருந்தனர். மதிய உணவு ஆயத்தமாகி விட்டது என்று திருமதி.பாலு அவர்கள் அறிவித்ததும் விருந்தாளியை உணவருந்த வருமாறு பாலு அவர்கள் கேட்டுக் கொண்டார். அவரை அழைத்துக் கொண்டு முதலில் தன்னுடைய தனி அறைக்கு பாலு அவர்கள் சென்றார். பாலு அவர்கள் மதுபானம் அருந்தும் பழக்கமுடையவர். அந்த அறையில் ஒரு சாராயப் போத்தலும் இரண்டு கிளாஸ்களும் ஒரு மேசையின் மீது வைக்கப்பட்டிருந்தன. அருகேயிருந்த இருக்கையில் விருந்தாளியை அமர்த்தி விட்டு பாலு அவர்களும் அமர்ந்து கொண்டார்.

சாராய போத்தலை எடுத்து இரு கிளாஸ்களிலும் ஊற்றினார். அளவாக சோடாவும் ஊற்றினார். இதனைப் பார்த்த விருந்தாளி மருண்டு போனாலும் அவருடைய நாவில் நீர் சுரந்ததை பாலு அவர்கள் அவதானித்தார்.

"சாமி, எடுங்கள்!" என்று பக்குவமாக அவரிடம் கூற அவரோ, "ஐய்யோ நான் இதெல்லாம் தொடுவதில்லை," என்று சொன்னார். "நீங்கள் வழமையாகவே இது பாவிப்பதில்லையா? அல்லது கோயிலுக்கு போகும்போது மட்டும் பாவிப்பதில்லையா?" என்று மற்றொரு கேள்வியை பாலு அவர்கள் விருந்தாளியான சாமியாரிடம் கேட்டார்.

அவர் கூனிக்குறுகியவராக, "பாவிப்பதுதான்..... ஆனால் இப்போது வேண்டாம்," என்று கூறினார்.

தனது எதிரிலுள்ள சாமியாரின் உள்ளக் கிடக்கையை நன்கறிந்து கொண்ட பாலு அவர்கள் "பரவாயில்லை நமக்குள் ஒளிவு மறைவு தேவையில்லை. நீங்கள் தாராளமாகப் பாவியுங்கள்." என்று சாராய கிளாசை அவர் முன் நகர்த்தினார்.

மேற்கொண்டும் சங்கோஜப்படாமல் சாமியார் கிளாசை எடுத்து ஒரே மூச்சில் உள்ளே இழுத்து விட்டார். பாலு அவர்கள் சிகரட்டையும் எடுத்து அவரிடம் கொடுத்து தீயையும் மூட்டிவிட்டார்.

ஒன்றன் பின் ஒன்றாக மூன்று கிளாஸ் சாராயத்தை உள்ளே தள்ளிவிட்ட நிலையில் சாமியார் உளற ஆரம்பித்து விட்டார். இப்போது தனது சீடர்களையும் பாலு அவர்கள் அறைக்குள் வரும்படி கேட்டுக் கொண்டார். அவர்கள் எல்லோரும் குழுமி நிற்க சாமியாரிடம் ஒன்றன்பின்னொன்றாக கேள்விச் சரங்களைத் தொடுத்தார்.

"சாமியாரே! கதிரமலையில் தண்ணீர்ப் பந்தல் எத்தனை வருடங்களாக வைத்து நடத்தி வருகிறீர்கள்?" என்பது தான் முதற் கேள்வி.

சாமியாருடைய பதில், "கதிரமலையாவது தண்ணீர்ப்பந்தலாவது....? நாங்கள் கதிராமத்துக்கே போவதில்லை. இடையில் திரும்பிவிடுவோம்," என்றார்.

### போலிச்சாமியார்கள்

பாலு அவர்கள்.... "அப்போ நீங்க சேகரிக்கும் பணத்தை என்ன செய்கின்றீர்கள்?" என்பது அடுத்த வினா.

"அதையெல்லாம் இடையில் தபால் கந்தோரில் மணியோடர் எடுத்து வீட்டுக்கு அனுப்பி விடுவோம்."

"இம்மாதிரியே ஒவ்வொரு வருடமும் நீங்கள் எவ்வளவு பணம் சேர்ப்பீங்க?"

"யுத்த காலத்துல (2ம் உலக மகா யுத்தம்) ஆயிரம் அல்லது ஆயிரத்தி ஐந்நூறு வரை பணம் சேரும். இப்போதெல்லாம் கிடைப்பது குறைவு தான். இருந்தாலும் சுமர் எண்ணூறு ரூபாய் வரையிலாவது தேறும்."

இந்த உரையாடல் நடக்கும் போது உடனிருந்த பாலு அவர்களின் சீடர்கள் சிரிப்பை அடக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தனர்.

### மீன்கறியுடன்...

இதற்கு மேல் அந்தச் சாமியாரை விசாரிப்பதற்கு விரும்பாத பாலு அவர்கள் அவரை அழைத்துச் சென்று உணவு படைத்தார். ஆரம்பத்தில் உணவு அருந்தி விட்டுச் செல்லுமாறு சாமியாரை பாலு அவர்கள் கேட்டபோது, தான் சைவ உணவே சாப்பிடும் பழக்கமுடையவர் என்றும் கூறியிருந்தார். ஆனால் அன்று மதியம் திருமதி. பாலு அவர்களால் ஆக்கப்பட்ட மீன் கறியுடன் உணவருந்தினார்.

தள்ளாடும் பருவத்தில் இருந்த அந்த சாமியாரை தெருவில் செல்ல அனுமதிக்க விரும்பாத பாலு அவர்கள், அவரைச் சற்று நேரம் படுத்துறங்கி விட்டுச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். அவரும் நன்றாகப் படுத்துறங்கினார்.

### "ஊருக்கே திரும்புங்கள்!"

மாலையில் சாமியார். தூக்கம் கலைந்து எழுந்திருந்ததும் மீண்டும் சாமியாருடன் உடையாட ஆரம்பித்தார் திரு.பாலு. "சாமியாரே! இப்போது நீங்க சேர்த்த பணம் எவ்வளவு இருக்கிறது?" என்று கேட்டார். சாமியார் பதிலேதும் கூறாமல் திருதிருவென்று விழித்தார். பாலு அவர்கள் சற்றுக் கடுமையாக மீண்டும் கேட்டார். தான் தன்னுடைய உண்மையான நிலையை குடிபோதையில் வெளிப்படையாகக் கூறி விட்ட உணர்வு அப்போது தான் சாமியாருக்குத் தோன்றியது.

"வில்வராஜ்! எங்கே அந்த திருக்கை வாலை எடுத்துக் கொண்டு வா", என்று கட்டளையிட்டார்.

(திருக்கைவால் திருக்கை மீனின் உண்மையான வால் பகுதியாகும். இதனைத் தனியாக வெட்டி எடுத்து நன்றாக வெயிலில் காயவைத்துப் பத்திரப் படுத்தி வைப்பார்கள். இதன் மேற்புறம் முள் போன்று சொரசொரப்பாக இருக்கும். இதனால் எவரையும் அடித்தால், அதனால் ஏற்படும் காயம் இலகுவில் ஆறாது. அடிபட்ட இடத்தில் சதை அழுகிவிடும் என்று கூறுவார்கள்.)

சாமியார் நடுங்கிப் போனார். தன்னுடைய தோளில் தொங்க விடும் பையையெடுத்து அதற்குள்ளிருந்த ரூபா நோட்டுக்களையும் சில்லறைகளையும் எடுத்து வைத்தார். "எண்ணிப் பார்க்கவில்லை. இவ்வளவு தான் இப்போது கையில் இருக்கிறது."

"இதற்கு முதல் சேர்த்த பணத்தை ஊருக்கு அனுப்பி விட்டீர்களா?"

"ஓமோம் மூதூரில் வைத்து, அறுநூற்றி ஐம்பது ரூபா அனுப்பினேன்."

இவ்வாறு சாமியர் வேறுபல உண்மைகளையும் மளமளவென்று கூறினார். தன்னுடைய உறவினர்கள் மேலும் நால்வர் இதே போன்று 'தண்ணீர் பந்தல்' கதையைக் கூறி பணம் சேகரிப்பதில் ஈடுபட்டு வருவதாகவும் கூறினார்.

பாலு அவர்கள் "சாமியாரே! இந்த மாதிரி கடவுள் பெயரைச் சொல்லி மக்களை ஏமாற்றும் இந்தத் தொழிலை இன்றோடு விட்டு விடும். இனிமேல் உம்மைப் போன்றவர்கள் இதே சாட்டில் இந்தப் பக்கம் வந்தால் நிச்சயமாக திருக்கை வால் பூசை தான் கிடைக்கும். நீர் தொடர்ந்து தெற்கு நோக்கிப் போகாமல் இப்பொழுதே வாழைச்சேனைக்கு பஸ்சில் செல்ல வேண்டும். அங்கிருந்து உமது ஊருக்குப் புறப்பட்டுப் போய்விடும்!" என்று எச்சரித்து சாமியாரினுடைய பணத்தையும் அவரிடமே கொடுத்து தமது சீடர்களுடன் பஸ் நிலையத்துக்கு அனுப்பி வைத்தார்.

திரு.பாலு அவர்கள் சொல்லிலும் செயலிலும் பகுத்தறிவுவாதியாகத் திகழ்ந்தார் என்பதற்கு இக்கதை ஓர் எடுத்துக் காட்டாகும்.

"எழுத்துச். சிற்பி சிவநாயகம் பற்றி கதை கூறப் முனைந்தவர் திசை மாறி எங்கே செல்கிறாரே!" என்று வாசகர்கள் சிலர் முணுமுணுப்பது நமக்கும் கேட்கிறது.



நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல மட்டக்களப்புத் தமிழகத்தில் கடந்த அரை நூற்றாண்டுக்குள் நிகழ்ந்த மறந்தும், மறைந்தும் போன சம்பவங்களையும் அவற்றுடன் தொடர்புடைய பலரையும் நினைவு கூர்ந்து அவர்களுடைய பங்களிப்பினை இன்றுள்ள இளம் சமுதாயத்தினருக்கு எடுத்துக் காட்டும் நோக்குடனேயே இதனைத் தொடர்கிறேன் என்பதனை நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. சிவநாயகம் அவர்கள் தலைமையில் இயங்கிய பகுத்தறிவு இயக்கத்தின் கொள்கைகள் திரு.பாலு போன்றவர்களின் செயற்பாடுகளினால் மட்டக்களப்பு பிரதேசங்களில் பரவலாயிற்று.

### கூட்டுறவுத்துறை அதிகாரி

திரு.சிவநாயகம் அவர்கள் முதன் முதலில் கூட்டுறவு இயக்க அதிகாரியாகத் தனது வாழ்க்கையை ஆரம்பித்தார். முன்னாள் ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்க அவர்களுக்கும் திரு.சிவநாயகம் அவர்களுக்கும் ஒரே நாளில் தான் கூட்டுறவு இயக்க அதிகாரி பதவி வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. அவர் முதன் முதலில் அக்கரைப் பற்றில்தான் பணி புரிந்ததாக, அக்கரைப்பற்றிலுள்ள பிரபல பத்திரிகைத் தொடர்பாளர் திரு.வி.பி. சிவப்பிரகாசம் அவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு கூறினார்.

மட்டக்களப்பில் பின்னர் பணி புரியும் காலத்தில் மட்டக்களப்பு விவேகாநந்த மண்டபத்தில் கூட்டுறவு தினவிழா நடைபெற்றது. கூட்டுறவின் மேன்மையை விளக்கும் சில பாடல்களை சிவநாயகம் அவர்களே எழுதினார். திரு.எம்.எஸ். பாலு இப்பாடல்களுக்கு இசை அமைத்து எனக்குப் பயிற்றுவித்து மேடையில் பாட வைத்தார். பாலு அவர்களே வயலின் வாசித்தார். சம்மாந்துறையைச் சேர்ந்த திரு.வேல் முருகு ஆசிரியர் அவர்கள் மிருதங்கம் வாசித்தார். இவர் தானாகவே மிருதங்கம் வாசிக்கப் பழகினார். ஆர்வ மிகுதியால் பின்னர், அப்போது மட்டக்களப்பில் பிரபல தவில் வித்துவானாகவிருந்த வேல் அவர்களிடம் முறையாகப் பயின்றார். திரு.வேல்முருகு அவர்களின் மகன் திரு.ஸ்ரீதரன் மட்டக்களப்பு விபுலாநந்த இசைக் கல்லூரியில் தற்போது மிருதங்கப் போதனாசிரியராக விளங்குகிறார்.

இந்த இடத்தில் மட்டக்களப்பில் தானாகவே உருவான மற்றுமோர் இசைக் கலைஞர் திரு. சிவஞானம் அவர்களையும் நினைவு கூரவேண்டும். இவரும் ஒரு வயலின் வித்துவான். அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கல்லூரியில் இசை ஆசிரியராகப் பணி புரிந்தார்.

கூட்டுறவு தின விழாவில் பாடிய எனக்கு 'பாலகானதிலகம்' என்ற ஒரு பட்டமும் வழக்கப்பட்டது. ஏதோ காரணத்தால் நான் இசைத் துறையில் போதிய கவனம் செலுத்தவில்லை. ஆனால் திரு.பாலசுப்பிரமணியம் கூடுதலான ஈடுபாட்டோடு இசைத் துறையில் நாட்டம் செலுத்தினார். இதனால் இலங்கையில் மட்டுமல்லாமல், அப்சராஸ் இசைக்குழுவில் இணைந்து பல மேற்கத்தைய நாடுகளிலும் மேடைகளில் பாடிப் புகழீட்டினார். இவர்கலந்து கொண்ட இறுதி நிகழ்ச்சி 1998ம் ஆண்டு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற சித்திரைப் புத்தாண்டு இசை நிகழ்ச்சியாகும். இது நடைபெற்று இருவாரங்களுக்குள் மட்டக்களப்பில் தனது இல்லத்தில் காலமானார்.

பாலு அவர்களிடம் இசை பயின்றவர்களில் மற்றுமொரு மாணவி, திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது மட்டக்களப்பில் வசித்துவருபவருமான திருமதி.தவமணிதேவி மாணிக்கராசா அவர்களாவார். தென் இந்தியாவின் சிறந்த கர்நாடக இசைக் கலைஞராகத் திகழ்ந்து மறைந்த என்.சி.வசந்தகோகிலத்தின் சாரீரத்தைக் கொண்டவர்.

(இன்னும் வரும்)

---

# அரங்கம் அந்தரங்கம்

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 59**

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

"இவரது பகைவர்கள் யாராவது ஏவி விட்டிருக்கலாம் அல்லவா?" என்றார் வசந்தலால்.

"உங்களுக்கு யார் கவிஞர் பகைவர்...?" என்று கேட்டார், ராமையா. "எவன் எப்போது பகைவனாவான் என்று யாருக்குத் தெரியும்!" என்றேன் நான்.

"கொஞ்சம் யோசித்துப் பாருங்களேன்...!" என்றார் அவர்.

"யோசிக்க ஆரம்பித்தால் ஒவ்வொருவருமே பகைவனாகத் தெரிவான்!" என்றேன், நான்.

திருடனுக்கு ஒரு நினைவு; பறிகொடுத்தவனுக்கு பல நினைவு அல்லவா!

"சரி அதை விட்டுத் தள்ளுங்கள். உங்களை யாரும் சந்தேகப்பட போவதில்லை. வேண்டுமானால் சாட்சியாகக் கூப்பிடுவார்கள், கொஞ்சம் அலைச்சல், அவ்வளவு தான்!" என்றார் வசந்தலால்.

டின்னருக்குக் கொஞ்சம் சீக்கிரமாகவே கிளம்பலாம் என்று எல்லோருமே அவசரப்படுத்தினார்கள்.

புறப்பட்டோம்.

அந்த நண்பரின் பங்களா, பம்பாயிலிருந்து பதினெட்டு மைல் தூரமாம். புனா செல்லும் சாலையில் இருக்கிறதாம்.

பம்பாயில் பெரும்பகுதி பங்களாக்களை இடித்துப் பல அடுக்கு மாடிகள் கட்டிவிட்டதால், பங்களாவுக்கு ஆசைப்படுவோர் அவ்வளவு தள்ளிப்போக வேண்டியிருக்கிறது.

'ஆனால் அந்த பங்களா அற்புதமான பங்களா; சுற்றிலும் மரங்கள். வீட்டுக்குள்ளேயே நீச்சல் குளம்! அருமையான சமையற்காரர்கள். ஒரு மலையாளி சமையற்காரன். ஒரு முஸ்லீம் சமையற்காரன்!' என்று அடுக்கினார் ராமையா.

எனக்கு அப்போது அதுமாதிரி விருந்துகளிலெல்லாம் உற்சாகம் அதிகம்.

பங்களாவுக்குக் கார் போய்ச் சேர்வதற்குள் எனக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

பலநூறு மைல்கள் பயணம் செய்தது போலொரு அலுப்பு.

உள்ளே நுழையும் வரை அந்த விருந்துக்கு யார் யார் வருகிறார்கள் என்று யாரும் செல்லவில்லை.

உள்ளே நுழைந்ததும் பார்த்தேன், எனக்கு ஒரே திகைப்பு.

அங்கே நாராயணசாமி உட்கார்ந்திருந்தார்.

பணக்காரன் என்ற ஜாதிக்கு, எங்கே இந்த பணக்காரன் இருந்தாலும் அடையாளம் தெரியும் போலிருக்கிறது!

சில உயர்தரப் போலீஸ் அதிகாரிகளும் வந்திருந்தார்கள்.

அந்தப் பங்களாவும் நாராயணசாமியின் பங்களாவை போல, மர்ம மாளிகை போலத் தோன்றிற்று.

அதன் அதிபர் அகமது உசேன் எல்லோரையும் வரவேற்றுக் கொண்டிருந்தார்.

நாராயணசாமி என்னை அவருக்கு அறிமுகப்படுத்திய போது, அவர் நல்ல தமிழிலேயே என்னிடம் பேசினார்.

"உங்கள் பாடல்களுக்கு நானொரு ரசிகன். நிறைய இசைத்தட்டுகள் வைத்திருக்கிறேன்!" என்றார்.

"உசேனுக்கு எட்டு பாஷைகள் தெரியும்!" என்றார் நாராயணசாமி.

பிறகு, வந்தவர்களை உசேன் கவனிக்க ஆரம்பித்தார்.

சில பெண்மணிகள் உள்ளே நுழைந்த போது அவர்களை வரவேற்பதற்காக, "பீவி, பீவி!" என்று தன் மனைவியை அழைத்தார்.

"அவருக்கு ஏழு மனைவியர்!" என்று என்னிடம் காதில் சொன்னார் நாராயணசாமி.

மாடியிலிருந்து பீவி இறங்கி வந்தாள்.


அவள் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் பாணியில் சேலைத் தலைப்பால் 'முட்டாக்கு'ப் போட்டிருந்தாள்.

அவளை நான் பார்த்தேன்; மீண்டும் மீண்டும் பார்த்தேன்; முகம் வியர்த்தது. "யார், சந்திரபுஷ்கரணியா?"

கூடவே இன்னொரு பீவியும் வந்தாள்; அவள்தான் கற்பகம்!

கற்பகம் எனக்கு வணக்கம் செய்து,

உசேன் துணைவியை அறிமுகப்படுத்தி வைத்தார், "ஜரீனா பீவி!" என்று.



"சலாம் அலேக்கம்!" என்றாள் அவள்.

எனக்குத் தலை சுற்றிற்று.

"யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சே" என்று பாடத் தோன்றிற்று.

என்னைத் தெரிந்ததாகவே அவள் காட்டிக் கொள்ளவில்லை.

ஒருவேளை இவள் வேறாகவும், முக ஜாடை ஒன்றாகவும் இருக்கலாம் என்று நான் அமைதி அடைந்தேன்.

உட்கார்ந்திருந்த இடத்திலேயே முதற் கட்டமாக, ஜூஸ் பரிமாறப்பட்டது.

தாமரைச் சிமிழ் போன்ற அந்தக் கண்ணாடிக் குவளையைக் கையில் வைத்துக் கொண்டு, ஒவ்வொருவரும், 'லட்சம் கோடி' என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

நமக்குத்தான் அந்த பாக்கியம் கிடையாது, காதாலாவது கேட்போம் என்று நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

துல்லியமான மல்வேட்டி கட்டி, சில்க் ஜிப்பா போட்டிருந்த அகமது உசேன் சிரித்த முகத்தோடு அங்குமிங்கும் சென்றபடி எல்லோரோடும் பேசிக்கொண்டிருந்தார்.

**கவியரசு கண்ணதாசன்**

மளமளவென்று கற்பகம் என்னிடம் ஓடிவந்து, "நீங்கள் குமாரசாமியையும் லலிதாவையும் பார்க்க வில்லையே! வாருங்கள் பார்க்கலாம்!" என்றாள்.

அது எனக்கு அடுத்த அதிர்ச்சி.

எனக்குத் தெரியாமலே பம்பாய்க்கு வந்து காரியங்களையும் வெற்றிகரமாக முடித்திருக்கிறார் நாராயணசாமி.

எனக்கு வெட்கம் ஒருபுறம், ஆத்திரம் ஒரு புறம்.

(அந்தரங்கம் வரும்)

# யார் குற்றவாளி?

"உன்னையொரு நாள் மறந்து
எந்தன் உயிர் வாழ்ந்ததில்லை.
உச்சரிக்கும் வார்த்தையெல்லாம்
உன்னையன்றி வேறு இல்லை!"

இப்படி ஆரம்பித்துத்தான் ராகுலுக்குக் கடிதம் அனுப்பியிருந்தாள் கீதா. இது ராகுலுக்கு அவள் எழுதும் முதல் கடிதம் என்று கூடச் சொல்லமுடியாது. ஏற்கனவே இப்படியாகச் சில கடிதங்களை அவனுக்கு கீதா வரைந்திருக்கிறாள். ஆனால் அவனிடமிருந்துதான் எந்தவிதமான பதிலையும் அவள் பெறுவதேயில்லை. இத்தனைக்கும் இருவருடைய வீட்டையும் ஒருவேலிதான் பிரித்து வைத்திருக்கின்றது. இப்படி அயல் அண்டையில் வாழ்ந்தாலும், இருவருடைய குடும்பங்களும் பகையில்லாமல் இருந்தாலும், ராகுல் அவளுடன் கதைத்துக்கொள்வதேயில்லை. அவன் அப்படிக்கதைக்காவிட்டாலும் கீதா அவன் மீது உயிரையே வைத்திருக்கிறாள்.

சின்ன வயதிலிருந்தே அவள் மனதில் ஆழப்பதிந்து போன ராகுல்தான்; இப்படிக் கீதா மனதில் அவன் பதிவதற்கு இருவரின் பெற்றோரும்தான் காரணமென்று சொல்ல வேண்டும். சிறு வயதில் அவர்கள் 'கண்ணாமூச்சி' விளையாடும் பொழுது, "என்னுடைய கீதா உன் ராகுலுக்குத்தான்!" இவ்வாறு அடிக்கடி இருதாய்மாரும் மாறிமாறிக் கதைத்துக் கொள்வார்கள்.

அவள் வளர்ந்து கொண்டு வரும் போதே, "கீதா ராகுலுக்குத்தான்!" என்ற வசனமும் சேர்ந்து வளர்ந்து வந்து, இப்பொழுது இந்த இருபத்தியொரு வயதிலும் கீதாவால் அவனை மறக்க முடியாமல் தவிப்படைய வைக்கிறது. அவளைத் தவிப்படைய வைக்கும் ராகுலைப் பற்றி ஊருக்குள் அவ்வளவாக நல்லபிப்பிராயம் கிடையாது. அவன் வேலுப்பிள்ளையருக்கு ஒரே மகன். மிகவும் செல்லமாக வளரவேண்டியவன்; ஆனால் அங்கு அப்படியெல்லாம் கிடையாது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டுமென்பது எவ்வளவு பெரிய உண்மையாகிறது. வேலுப்பிள்ளையாருக்கு நிரந்தரமான தொழிலென்று ஏதுமில்லை. தினம் தினம் ஒவ்வொரு கூலிவேலைக்குச் செல்பவர் அவர். அப்படி வேலைக்குப் போனாலும் கிடைக்கும் பணத்தில் முக்கால் பங்கை குடித்து முடித்து தள்ளாட்டத்துடன் வீட்டுக்கு வந்து ரகளை பண்ணுவார். தந்தையாரின் இந்த ஆர்ப்பாட்டங்களையும், அட்டகாசங்களையும் ஒவ்வொரு நாளும் பார்த்து பார்த்து ஆத்திரப்பட்டு அந்த ஆத்திரத்தை அடக்க முடியாமல் மனதிற்குள்ளே போட்டுப் புதைத்து வெறுத்து வளர்ந்தவன் ராகுல்.

சாதாரணம் வரை படித்த ராகுல் நாளடைவில் தோதான சில நண்பர்களுடன் சேர்ந்து குடிக்க ஆரம்பித்தான்.

அவனுக்கு இந்தக் காதல், அன்பு, பாசம் இதிலெல்லாம் நம்பிக்கையே கிடையாது. அடிக்கடி கீதா உருகி எழுதும் கடிதங்களைப் பார்த்துவிட்டு எந்தவித உணர்ச்சிகளுமில்லாமல் அவன் கிழித்துப்போட்டு விடுவான்.

அன்று மாலை; ஊரில் செத்தவீடு ஒன்றிற்காக ராகுலின் தாயார் வெளியே சென்றிருந்தார். தந்தையாரும் வீட்டில் இல்லை. அப்பொழுது அடைக்கப்படாமல் கிடந்த பொதுவேலியைக்கடந்து கொண்டு கீதாவின் தாய் வந்தாள். "அம்மா வீட்டில் இல்லை!" என்றான் ராகுல். "தெரிந்துதான் வந்திருக்கிறேன்!" என்று கீதாவின் தாய் சொன்னாள். "தெரிந்தா, என்ன விஷயம்?" என்பது போல் அவளை நோக்கினான் அவன். "தம்பி, கீதா உங்களையே நினைத்துக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும்; நேற்றுக்கூட அவளுக்கொரு சம்பந்தம் வந்தது. பேங்கில் வேலைசெய்யும் செந்தூரன்; அவர் கீதா விரும்பினால் தான் கல்யாணஞ் செய்யத்தயார் என்று கேட்டனுப்பியிருக்கிறார், ஆனால் அவளோ ராகுலைத்தவிர நான் யாரையும் செய்யமாட்டன் என்று பிடிவாதமாக இருக்கிறாள். இப்படி இருந்தால் நிலைமை என்ன?, நீங்கள்தான் இதற்கொரு முடிவெடுக்க வேணும்.



அவளுக்கு அனுசரணையான ஒரு பதிலைச் சொல்லவேணும்; அவள் தாங்கமாட்டாள்!" கலங்கிப்போன விழிகளுடன் இப்படிக் கூறிவிட்டு, கீதாவின் தாய் நகர்ந்து போனாள். அப்பொழுதுதான் முதன்முறையாக சற்றுநேரம் நிதானித்து கீதாவைப் பற்றிச் சிந்தித்தான் ராகுல்.

ஒரு நல்ல மாப்பிள்ளை; தரமான மாப்பிள்ளை; அவரையே எனக்காக வெறுத்திருக்கிறாளென்றால்! இப்படி ஆரம்பித்து அவள் தன்மேல் எந்தளவு ஈடுபாடு, அக்கறையுடன் நடந்து கொண்டிருக்கிறாள் என்று யோசித்து ஒரு முடிவோடு நிறுத்தினான் ராகுல்.

விளைவு கீதாவுக்கே சாதகமாக அமைந்தது. அவனும் கீதாவும் காதலர்களாகிப் போனார்கள். இருவரும் ஒருவரையொருவர் பிரிந்து வாழ முடியாதபடிக்கு காதல் உறவின் வலு இறுகியிருந்தது. அதிலும் குறிப்பாக ராகுல் நிறையவே மாறிப் போனான்.

அவனிடம் இருந்து பலரும் விரும்பாத சில பழக்கங்களையெல்லாம் மறந்து, தானும் ஒழுங்காக வாழவேண்டும் என்ற சிந்தனை அவனுள் வந்து தங்கியது. தொழில் ஒன்று தேவை என்று நினைத்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தான் ராகுல்.

**களுவாஞ்சிக்குடி-யோகன்**

கீதாவின் தமையனொருவன் கொழும்பிலுள்ள கடவுச்சீட்டுக் காரியாலயத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்தான். அவனுக்கு ஊருக்குள் சம்பந்தம் ஒன்று வந்தது. பெரிய இடம்; மரியாதையான நல்ல குடும்பம்.

இடத்தைக் கேட்டதும் கீதாவின் அப்பா சம்மதித்துவிட்டார். ஆனால் ஒரு நிபந்தனையுடன் தான் சம்மதித்தார். "எங்கள் மகனை உங்களுக்குத் தருவதென்றால் உங்கள் ஆசிரியர் மகனை எங்களது கீதாவிற்குத்தர வேணும்!" இந்த நிபந்தனையைதான் அவர் விதித்தார்.

அந்தக் குடும்பத்தினர் இந்த நிபந்தனைக்குச் சம்மதம் சொன்னார்கள். கீதா அனலில் புழுவாய் துடித்தாள். அவளது வீட்டில் பிரச்சனை வெடித்தது. ஒரு மாலை அறையினுள் புகுந்து கதவை அடைத்துக் கொண்ட கீதாவின் தந்தை தூக்கிலே தொங்கி விட்டார். ஆனால் மயிரிழையில் அவர் காப்பாற்றப்பட்டார்.

ராகுலின் நிலையோ மிகவும் பரிதாபமாகப்போயிற்று. அவன் என்ன செய்வதென்றறியாமல் வேதனையில் வெந்தான். உள்ளத்தால் குமுறிக்குமுறி அழுதான். தீர்க்கமான முடிவுக்காய்த் தடுமாறினான்.

அந்தநேரம் ஒரு இரவுப்பொழுது; மறுபடியும் கீதாவின் தாய் அவனைக் காணத் தனிமையில் வந்தாள்.

"தம்பி! முதலில் நீங்கள் என்னை மன்னிக்கவேணும், கீதாவுக்கு ஒரு முடிவு சொல்லுங்கோ, என்று கேட்டுவந்ததும் நான்தான், இப்போ கீதாவை மறந்து விடுங்கோ என்று கேட்கப்போவதும் நான்தான். என் நிலை அப்படியாய் போயிற்று. இந்தச் சம்பந்தம் தவறிப் போனால் அவர் உயிருடன் இருக்க மாட்டார். அவர் இல்லாவிட்டால் பிறகேன் எனக்கு வாழ்க்கை, கீதா கூட அதற்குப்பிறகு சந்தோஷமாக வாழமாட்டாள். அதனால் பெரிய மனது பண்ணி என்னை மன்னித்து கீதாவை மறக்க முயற்சிக்க வேணும், இப்படியொரு சம்பவமே நடக்கவில்லையென்று ஒதுங்கிக்கொள்ள வேணும்!" கண்களில் நீருடன் கைகளைக் கூப்பியவாறு அவள் சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

"உங்களுக்கு மனசாட்சியே கிடையாதா? ஏன் இப்படிச் சந்தர்ப்பவாதமாக நடந்து கொள்கிறீர்கள்?, நானும் உணர்வுகள் உள்ள மனிதன், எனக்கும் ஆசை, அன்பு இரக்கம் எல்லாம் உண்டு. நீங்களே கீதாவை விரும்பச் சொல்லிக்கேட்டீர்கள்! இப்போது வந்து மறக்கச்சொல்லி கேட்டால், நானென்ன உணர்ச்சிகள் இல்லாத ஜடமா? என்ன?" ராகுலுக்கு இப்படியெல்லாம் கேட்டு கத்த வேண்டும் போல் இருந்தது. ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. அந்தத்தாய் நின்றிருந்த கோலத்தையும், அந்தக் கண்ணீரையும் கண்ட பொழுது அவனால் அதுமுடியாமல் போயிற்று.

உள்ளத்துள் பொங்கிய ஆத்திரமெல்லாம் அழுகையாகி, அது குமுறலுடன் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

அந்தக்குமுறலும் அழுகையும் சகலவித சம்பவங்களையும் கரைத்து விடும் என்பதில் ஐயமேயில்லை. ●

# தினம் ஒரு நகை



கண்ணாடி முன் நின்று பார்த்தாள் கமலா.

கழுத்தில் கொள்ளை அழகாக இருந்தது நெக்லஸ்!.

கணவன் எதிரே வந்து நின்று "நெக்லஸ் எனக்கு எப்படி இருக்குங்க?" என்று கேட்டாள் அவள்.

"வெண் சங்குக் கழுத்திலே சிவப்புக் கல் நெக்லஸ் ரொம்ப சூப்பர்!" என்றான் ராஜவேலு.

மகிழ்ந்து போக முடியவில்லை கமலாவால். அடுத்து அவன் என்ன சொல்லப் போகிறான் என்பது அவளுக்குத் தெரியும்.

"கழட்டிக் கொடுத்துடு கமலா. ஊர்லே திருட்டுப் பயம் கூட. நான் பத்திரமா வைக்கிறேன்!"

இந்த நெக்லஸுக்கு என்று மட்டுமில்லை. ரெட்டை வடச் சங்கிலி போட்டுக் கொண்ட போதும்-

இந்த கைக்கு ஆறு, அந்த கைக்கு ஆறு என்று பொன் வளையல்கள் விதவிதமான டிசைனில் போட்டுக் கொண்ட போதும்-

திரும்பிய பக்கமெல்லாம் 'டால'டிக்கும் வைரக் கம்மல், வைர மூக்குத்தி போட்டுக் கொண்ட போதும்-

'ஜல்ஜல்' என்று இனிய நாதம் ஒலிக்கும் கொலுசுகளை கால்களில் அணிந்து கொண்ட போதும்-

இளம் பிஞ்சு வெண்டைக்காய் விரல்களில் 'ப்ளெய்ன்', நெளி, கல் வைத்த மோதிரங்கள் போட்டுக் கொண்ட போதும்-

**சரண்யா**

"கழட்டிக் கொடுத்துடு கமலா. ஊர்லே திருட்டுப் பயம் கூட. நான் பத்திரமா வைச்சுக்கிறேன்!" என்று சொல்லத் தவறமாட்டான் ராஜவேலு.

அவனருகில் வந்து உட்கார்ந்தாள் கமலா. ஏக்கம் வடிந்த அவள் முகத்தைத் தன் கையில் தாங்கி, "வருத்தப் படாதே கமலா. உனக்கு இவ்வளவு நகைகள் நான் செய்து போட முடியா விட்டாலும், முடிஞ்ச வரை செய்து போடுவேன். இதெல்லாம் நகைக் கடைக்கு நான் செய்து கொடுக்கிற நகைகள்! கொஞ்சம் நேரம் நான் உன்னைப் போட்டுக்கச் சொல்றது, இதையெல்லாம் போட்டுக்கிட்டா நீ எப்படி இருக்கேன்னு பார்க்க மட்டுமல்ல கமலா, உனக்கு பிற்காலத்திலே நான் செய்து போடறதுக்காகவும்தான்!" என்றான் ராஜவேலு. ○

# ஆண்களும் பாவம்

இரவு மணி பத்திருக்கும். என் வீட்டுச் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு திடுக்கிட்டேன். அந்தத் தட்டு சாதாரணமாக எனக்குப் படவில்லை. அதில் அவசரம் தெரிந்தது. அப்போதுதான் நான் 'நங்கூரம்' என்னும் நாவலின் கடைசி அத்தியாயத்தை எப்படி முடிப்பது என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். கதாநாயகனுக்குச் சாவா? வாழ்வா? அல்லது சிறையா? என்பதில் எனக்குள்ளே போராட்டம். மீண்டும் கதவு பலமாகப் படபடத்தது. எனது மகன் மிதுவின் கண்கள் மிரண்டு என்னை விழித்தன.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கதவைத் திறந்தேன். "ரமணன்!" நான் அலறி விட்டேன். கலைந்த கேசம். கசங்கிய சேர்ட், குழி விழுந்த கன்னம். காடாக மண்டிக்கிடந்த தாடி... சொல்லப்போனால் ஒரு பிச்சைக்காரனின் தோற்றம். அதிர்ச்சியில் அசையாது நின்ற என்னை, அவன் "உள்ளே வரலாமா?" என்று கேட்டுச் சுயநினைவுக்குத் திருப்பினான். இந்த இரவு நேரத்தில் அவனை இங்கு தங்க வைக்கலாமா? போலீஸ், படை அது இது என்றும் எழுந்த எண்ணம் மறுகணமே அடங்கிப் போக, அவனை உள்ளே அழைத்து உட்கார வைத்தேன். பத்து வருடங்களுக்குமுன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஒன்றாகப் படித்த ரமணனை நான் இந்த இரவில் இந்தக் கோலத்தில் சந்திப்பேன் என்று சற்றுமே எதிர்பார்க்கவில்லை.

ரமணன் ஒரு பொறியியலாளன். அதி சிறந்த ஆற்றல்கள் வாய்ந்தவன். வாத்தியங்கள் வாசிப்பதில் வல்லவன். கலைஞன். எல்லாவற்றுக்கும்மேலாக அவன் ஒரு பாடகன். அவன் பாடினால் ஆடாத உள்ளங்கள் இல்லை... என் நினைவுகளை ரமணன் கலைத்தான்.

"நான் உன்னோடு அவசரமாகப் பேச வேண்டும்!".

நான் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தேன். "ஏதும் சாப்பிடுறீங்களா?" நான் கேட்டேன். "இல்லை, நான் உன்னோடு பேச வேண்டும். ராகினியுடன் இல்லை. ஒரு எழுத்தாளியுடன்!". ரமணன் உணர்ச்சி வசப்பட்டு உரத்துக் கூறினான். "நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். அதற்குமுன் என்னிடம் உள்ளதை உன்னிடம் கொட்டி விடவேண்டும். இதை நீ எழுதவேண்டும்!". சொல்லிவிட்டு என்னை ஏறெடுத்தான். நான் மிதுவைத் திரும்பிப் பார்த்தேன். அவன் குறிப்பறிந்து அறையினுள்ளே நுழைந்தான்.

ரமணன் தொண்டையைச் செருமி நிமிர்ந்து உட்கார்ந்து ஆரம்பித்தான்.

"நான் சிறு வயதிலேயே அப்பாவை இழந்தவன். என்னை படிப்பித்து ஆளாக்கியதும் அம்மாதான். படிப்பிலும் சங்கீதத்திலும் எனக்கிருந்த ஆர்வம் சொல்லில் அடங்கா. எனது பரம ரசிகை றஞ்சினி. அவள்தான் என்முறைப்பெண்". நீண்டதோர் பெருமூச்சு விட்டு ரமணன்தொடர்ந்தான். "ஆமாம், றஞ்சனிதான் என் வருங்கால மனைவி என்று பெற்றவளும் உற்றவரும் முத்திரை குத்தி விட்டார்கள். என் வீட்டுக்கு எதிர் வீடுதான் அவள்வீடு. இருவரும் ஒன்றாய் உயிராய்ப் பழகினோம். அவளின் அம்மாவும் அப்பாவும் என்னைச் சின்னமாப்பிளை என்று செல்லமாய் அழைப்பர். இரவுதவிர்ந்த நிமிஷங்களை றஞ்சினி என் வீட்டில்தான் கழிப்பாள். சமையல் தொடங்கிச் சலவை செய்வதுவரை அவளே தான். 'இப்படி ஒருமருமகளா?' என்று என் அம்மாவியந்து மகிழ்ந்து போவாள். அப்போது தான் நான் பல்கலைக்கழகப் பொறியியல் மாணவனாகத் தெரிவானேன். றஞ்சினியைப் பிரிய எனக்கு மனமில்லைத்தான். என்ன செய்வது? 'நீ ஓர் எஞ்ஜினியராக அவளைக் கலியாணம் செய்வது பெருமை இல்லையா?' அம்மா கேட்டாள். என்னுள் உற்சாகம் பொங்கியது. பேராதனைக்கு வந்து விட்டேன். விடுமுறை கிடைக்கும் போதெல்லாம் அம்மாவையும் றஞ்சினியையும் பார்க்க யாழ்ப்பாணம் சென்று விடுவேன். ஆண்டுகள் சுழன்றன என்னுடைய இறுதித் தேர்வு நெருங்கிய போது தான் என் வாழ்க்கையில் சூறாவளி வீசத் தொடங்கியது. றஞ்சினியின் பிறந்த நாளை நான் மறப்பேனா? யாழ்ப்பாணம் சென்றபோது. காக்கிச்சட்டைகள் என்னைச் 'சந்தேகம்' என்ற பெயரில் கைது செய்தது. அம்மாவும் றஞ்சனியும் கண்ணீரில் நனைந்தார்கள். அவர்களுடைய கெஞ்சலும் கதறலும் பயனற்றுபோய் விட்டது. நான் பரீட்சை எழுதுவதற்குமட்டும் அனுமதிக்கப்பட்டேன். இது உனக்குத்தெரிந்த உண்மை. அதன் பிறகு ஓராண்டு சிறைவாசம் றஞ்சினியை நினைத்து நிமிஷங்களை நகர்த்தினேன். அவளை என் நெஞ்சினில் சுமந்தேன். என் கண்ணீரால் குளிப்பாட்டினேன்!"


ரமணன் உணர்ச்சிவசப்பட்டு விம்மினான். வார்த்தைகள் வரமுடியாமல் தவித்தது. நான் நெகிழ்ந்து போனேன் "பிறகு...?" நான் அவனைத் துரிதப்படுத்தினேன்.

"பிறகென்ன? அந்தக் கொடூரமான சிறைவாழ்க்கைமுடிவடைந்தது. பரீட்சையிலும் சித்திபெற்றேன். 'நான் இப்போது பொறியியலாளனாக றஞ்சினியின் கரம் பற்றப் போகிறேன்' என்ற மகிழ்ச்சியில் சிறகடித்து யாழ்ப்பாணம் பறந்தேன். வீடு வந்த எனக்கு அதிர்ச்சி. எங்கும் அமைதி சூன்யம். அம்மா ஒரு மூலையில் முடங்கிக் கிடந்தாள்!" ரமணன் ஓவென்று அழுதான். அவன் வாயில் வார்த்தைகள் வராமல் துடித்தன. என்னாலும் தாங்க முடியவில்லை. "என்னாச்சு சொல்லு? ரமணன்?" நான் கத்தினேன்.

கலியாணமேளச் சத்தம் காற்று வாக்கில் என் காதில் வந்து மோதியது. 'றஞ்சனிக்குக் கலியாணம் நடக்கிறது.' அம்மா எங்கோ பார்த்த படி சொன்னாள். அவள் குரல் உடைந்து சிதறியது. என்னால் எப்படித் தாங்கிக் கொள்ளமுடியும்? எனக்கு அங்கிருக்கப் பிடிக்கவில்லை. மறுநாளே கண்டிக்குப் புறப்பட்டுவிட்டேன். என்னை வழியனுப்புகையில்- "றஞ்சினியை மறந்துவிடு என்று நான் கேட்க மாட்டேன். அது உன்னால் முடியாது. ஆனால் முயற்சிசெய்!" அம்மாவின் குரலில் உறுதி தொனித்தது. என் தாயின் புரிந்துணர்வு என்னால் மறக்க முடியாதது. நான் கண்டிக்குவந்து வேலையில் சேர்ந்ததும் ஒரு சாதாரணகுடும்பத்தில் ஓர் அறையை வாடகைக்கெடுத்தேன். வேலை தவிர்ந்த நேரங்களில் என் வேதனை வடியும்வரை கிற்றார்வாசிப்பேன். ஒருநாள்... என் அறையுள் ஒரு கடிதம்...

"உங்களை மனைவியாய் அடைபவள் பாக்கியசாலி. அந்த மனைவி ஏன் நானாய் இருக்கக்கூடாது?..." மனோஜா.

ஆம் அவள் நான் இருக்கும் வீட்டுச் சொந்தக்காரியின் மகள். அவள் ஒரு பல்கலைக்கழக மாணவி. பொழுது போக்கு என்று என்னைத்தேடி என் அறைக்கு வரலானாள். நட்புடன் பழகினாள். திடீரென்று



ஒரு நாள் என்னைக் கலியாணஞ் செய்ய விரும்புவதாய்க் கூறினாள். என் அம்மாவுக்குச் சொன்னேன். "உன்மனப் புண்மாற நல்ல மருந்து" என்றாள் அம்மா. நானும் சம்மதித்தேன். மனோஜாவின் சாதாரணவீட்டை என் சொந்த செலவில் அழகிய வீடாக்கினேன். என் வாகனத்தில்தான் அவள் பல்கலைக்கழகம் செல்வாள். வருடம் ஒன்று கழிந்து விட்டது. கலியாணப்பேச்சுக்காக அம்மா வந்தாள். மனோஜாவின் அம்மா சென்ன தகவல் என் தாயின் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது.

**ரூபராணி**

"மனோஜாவுக்கு டென்றல் மாணவன் ஒருவன் காதலன். அவனையே கலியாணமும் செய்வாள். ரமணன் எனக்கு மகன் மாதிரி எங்களுக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறார்."

நான் அதிர்ச்சியில் உறைந்துபோனேன். முடிவு என்னவாயிருக்கும் என்று நான் கேட்க நினைத்தபோது ரமணன் அமைதியாகச் சொன்னான். "வழமைபோல் மனோஜாவை நான் அழைத்துவரப் பல்கலைக்கழகம் சென்றேன். அங்கு அவள் அவனின் கையைப் பற்றியபடி என் எதிரே தோன்றி மறைந்தாள். அவ்வளவு தான்." ரமணனின் பார்வை என்னைக் கூர்மையாய்க் குத்திக்குதறியது. "பெண்கள் மட்டும் பாவமல்ல ஆண்களும்பாவம்தான்!" என்று அவன் சத்தம் போட்டுச் சொன்னான். "என்குறி இவளா? அவளா? உனக்குத் தெரிய வரும்!" சொல்லிய வேகத்தில் அவன் வெளியேறினான்.

என் நாவலின் முடிவு எனக்குப் புரிந்து விட்டது.

# இலக்கிய நயம்

# மன நிறைவுதான் காரணம்!

இடது கரத்தை கண்ணம்மாவின்தோளைச் சுற்றிப் போட்டு தன்னோடு நெருக்கி அணைத்திருந்தான் விதேயன்.

இருவரும் மாலை ஒளியில் பல தங்கப் பாளங்ளை நகர்த்தியபடி இருக்கும் கடற் பரப்பைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தனர்.

அடிவானைச் சிவப்பிலிருந்து கண்களை அகற்றாமல் விதேயன் சொன்னான்: "கண்ணம்மா, உன்னைப் போலத்தான், அங்கே பார். சூரியன் வெட்கப்பட்டுக் கொண்டு முகத்தைத் தாழ்த்திக் கொள்கிற போது உலகம் இருளாகிறது..."

"உன் கவிதைப் புலம்பலை ஆரம்பித்து விட்டாயா?"

"இல்லை. உன் பார்வை வெளிச்சத்தில்தான் பகல் தெரிகிறது. குனிந்து கொண்டால் இருளாக உன் கூந்தல்..."

"பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கு நான் குனிந்தபடி இருக்க வேண்டுமாக்கும்..."

"இல்லையே.. உடனேயே நீ முகத்தை நிமிர்த்துகிறாய். விண்ணில் நிலா தோன்றுகிறது."

"க்கும்..." பிடிக்காதவள் போலப் பழிப்புக் காட்டியபடியே அவன் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

"அம்மா... ரெண்டு நாளாகச் சாப்பிடவில்லை...." அருகில் ஈனஸ்வரக் குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டுத்திரும்பினார்கள். கந்தலோடு ஒரு சிறுவன் கைநீட்டியபடி நின்றான்.

கண்ணம்மா பையைத் திறந்தாள். விதேயன் தடுத்தான்.

"திருடர்கள். சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கப்பம் கேட்கிறார்கள். நாம் ஏதோ களவாகக் காதல் செய்து கொண்டிருப்பது போலவும், இந்த நேரம் கேட்டால் இருப்பதைத் தந்துவிடுவோம் என்றும் பொய் சொல்கிறார்கள்..."

கண்ணம்மா அந்தச் சிறுவனின் முகத்தைப் பார்த்துக் கொண்டு



சொன்னாள்: "இருக்கட்டுமே, கொடுப்பதால் என்ன குறைந்துவிடப் போகிறோம்?"

"கொடுத்துக் காட்டினோமென்றால், இவன் போய் இன்னும் ஒரு இருபது பேரை இதே மாதிரி இங்கே அனுப்புவான். இந்த இடத்தில் வருகிறவர்களின் பலவீனம் அறிந்து ஏமாற்றுகிற பயல்கள் இவர்கள்!" விதேயன் அதுவரை இருந்த குளுமையை இழந்து கோப வயப்பட்டிருந்தான்.

"அப்படியெல்லாம் இல்லை, எதற்கு இதைப் பெரிது படுத்துகிறீர்கள்?" என்றபடியே காசை எடுத்து சிறுவன் கையில் கொடுத்துவிட்டு, விதேயனை இன்னும் நெருங்கி, அவன் கரத்தை எடுத்துத் தன் மடியில் வைத்து வருடியபடி அவனைச் சமனப்படுத்த முயன்றாள்.

"என்ன மூட் அவுட்டா?" என்றாள்.

"இல்லை, யாராவது ஏமாற்றுகிறார்கள் என்று அறிந்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இவர்களுக்கெல்லாம் பிச்சை போட்டு நீ மோட்சத்துக்குப் போய்விடலாம் என்று நம்புகிறாயா?"

"நம்மிடமிருந்தால் பிறருக்குக் கொடுத்து உதவுவது மோட்சத்துக்குப் போவதற்குத்தானா?"

"பிறகென்ன? ஏதோ பிற்காலப் பலனை உத்தேசித்துத்தானே பரோபகாரம் செய்யத் துடிக்கிறோம்."

சற்றுநேரம் அமைதியாக இருந்த கண்ணம்மா தீவிர சிந்தனைக்குப் பிறகு பேசுபவள் போலக் கூறினாள்: "மனிதர்கள் என்ன மிருகங்கள் அடிபட்டு ஆபத்திலிருந்தாலும் உதவிக்கு ஓட மனம் துடிக்கிறது. பிறரைச் சந்தோஷப்படுத்த நம்மால் ஏதும் செய்ய முடியுமாக இருந்தால் நம்மையும் அது மகிழ்ச்சிப்படுத்துகிறது. பிறருக்கு உபயோகமாக இருத்தல் என்பது அவ்வப்போதே நமக்குக் கிடைக்கிற சந்தோஷத்துக்காகவும் திருப்திக்காகவுமே தவிர இறப்பின் பின் சொர்க்கத்துக்குப் போகலாம் என்றோ, மறுபிறவியில் இதன் பயனை அனுபவிக்கலாம் என்றோ நினைத்துச் செய்வதாக எனக்குத் தோன்றவில்லை."

"உதவி செய்வதில் உனக்குக் கிடைக்கும் திருப்தியே நீ செய்யும் செயலுக்கு கூலியாக மறுபிறப்பிலோ இறப்பின் பிறகோ உனக்கு நல்லது நடக்கும் என்ற எதிர்பார்ப்பில் உண்டாகும் அந்த மன நிறைவுதான்."

கண்ணம்மா அவன் கரத்தை எடுத்துக் கன்னத்தில் வைத்துக் கொண்டு சொன்னாள்: "மறுபிறவியில் நன்மை கிடைக்கும் என்று எதிர்பார்த்து இப்பிறவியில் ஒன்றைச் செய்வது எதையும் லாபத்தை எதிர்பார்த்துச் செய்யும் வியாபாரம் ஆகாதா? அன்பே! பின்விளைவை எதிர்பார்த்துச் செய்யும் செயல்களில் மகிழ்ச்சி இல்லை. மனநிறைவு இல்லை. அது வணிக நோக்குதான். உதவி செய்வதில் கிடைக்கும் நிறைவு பிற்காலத்தை நினைவு கூர்ந்தல்ல.

நாலுபேருக்கு உதவியாக இருக்கிறோம் என்ற சந்தோசமும் உள்ளத்துக்கு உண்டு. அது, நம் வாழ்க்கையை சரியான முறையில் வாழ்கிறோம் என்ற திருப்தியால் ஏற்படுவது. பெரிய மகிழ்ச்சி மனதுக்கு வேறென்ன இருக்கிறது? பிற்கால நல்வாழ்விற்கான ஏற்பாடாக செய்து கொள்ளப்படுவது காப்புறுதித் திட்டங்கள் தான்; மனிதருக்கு மனிதர் பரஸ்பரம் செய்து கொள்ள விளையும் பரோபகாரங்கள் அல்ல...."

**தருவது முழடில்யன்**

**இம்மைச் செய்தது மறுமைக்கும்**
**- ஆம் எனும்**
**அறவிலை வணிகன் ஆய்அலன் பிறரும்**
**சான்றோர் சென்ற நெறியென**
**ஆங்குப்பட் டன்று அவன் கைவண்மையே.**

*(புறம்:134)*

# சிந்தியா பதில்கள்

**★ ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் பெண் இருக்கிறாள் என்று சொல்லி பெண்களை பின்னுக்கே வைக்கிறார்களே, ஏன் ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கு 'முன்னும்' ஒரு பெண் உள்ளாள் என்று சொல்லலாமே...?**

ஜி.விக்னேஸ்வரன், குளியாப்பிட்டிய.

முன்னுக்கு நந்தி மாதிரி இல்லாமல் பின்னுக்கு என்ஜினாக நின்று இயக்குகிறாள் என்பதால் இருக்கலாம். ஆனால் பெண்ணை முன்னுக்கு விட்டால்தான் வாழ்க்கையில் ஜெயிக்கலாம் என்பதைச் சொல்கிறார் ராஜன் என்ற நையாண்டிக் கவிஞர். கவிதைத் தலைப்பு 'சதுரங்க வாழ்க்கை.'

நேராக மட்டுமே போகும்
யானையை மூலையில் போடு.
இங்கொன்று அங்கிரண்டாகத்
தாவிடும் இரண்டுங் கெட்டான்
குதிரையை அடுத்தாற்போல் வை.
குறுக்கிலே ஒன்றாய் போகும்
ஒட்டகம் அரசின் பக்கம்.
காலாட்கள் சாவார் கொஞ்சம்
அணியிலே முன்னால் நின்று.
அரசர்க்கு உள்ளதை விடவும்
அரசிக்கு சக்தி அதிகம்.
எனவே-
சாமான்யர் செத்தால் கூட
அஃதொன்றும் நஷ்டம் இல்லை-
ஆட்டத்தில் ஜெயிக்கணும்னா
ராணியை முன்னே தள்ளு.

★✦

**★ பத்திரிகையாளன் பொய் சொல்லலாமா?**

ரி.நிருபன், இறால் குழி, மூதூர்.

பத்திரிகை என்பது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை விஷயம் தெரிந்தவர்களாக ஆக்குவதற்கான கருவிதான். பத்திரிகையாளனின் பொய்கள் நம் சமூகத்தையே சிதைவுக்குள்ளாக்கும்.

★✦

**★ சிந்தியா, நடிகர் கமலஹாசனுக்கு நான் ஒரு பெயர் வைக்கட்டுமா? 'கமலகிஸ்ஸன்'.... எப்படி இந்தப் பெயர்?**

டி.ஏ.ஜீவன், கொழும்பு 13.

உங்கள் பெயர் சூட்டலை நியாயப்படுத்துவதற்கு, குமுதத்தில் வந்த இந்த ஜோக்கையும் இணைத்துக் கொள்ளுங்கள்:

"என்ன அந்தப் பொண்ணுங்கள்லாம் உதட்டுல பிளாஸ்டரோட வெளியே வர்றாங்க?"

"கமல் தன்னோட அடுத்த படத்துக்கு ஹீரோயின் செலக்ட் பண்றாராம்!"

★✦

**★ 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்று கூறுவது ஏன்?**

வாணி மார்க்கண்டு, கிரான்.

'கல்' ஆனவன்தான் கணவனும் என்பதாலாக்கும்.

★✦

**★ சிந்தியா, மனம் 'அலைபாயுதல்' நல்லதா?**

எஸ்.சரத்பாபு, அருப்பொல.

அலைபோல கரைக்கு அடங்கிப் பாய்ந்து கொண்டிருந்தால் பரவாயில்லை. குரங்காக அல்லவா தாவிக்கொண்டிருக்கிறது.

★✦

**★ நம் அவசரம் புரியாமல் கதைத்து அறுப்பவர்கள் பற்றி?**

எம்.நஸ்லியா, யடவத்த.

காலை நேரம் பத்துப் பதினைந்துபேர் கியூவில் நிற்க, பொதுக் கழிப்பறையினுள்ளே சாவகாசமாக உட்கார்ந்து பாட்டுப் பாடிக் கொண்டிருப்பவர் போல.

பாலகுமாரன் கதை என்று ஞாபகம். தலைப்பு ஞாபகமில்லை. காதலியோடு கடற்கரைக்கு வந்தவர் ஐஸ்கிரீம் வாங்கிவரத் தனியே சென்றபோது, பள்ளிக்கூடத்தில் ஒன்றாகப் படித்த நண்பர் ஒருவர் தற்செயலாகச் சந்தித்துவிடுவார். நீண்ட காலத்திற்குப் பிறகு சந்திக்கும் ஆச்சரியத்தை வெளிப்படுத்தி அந்த நண்பர், பழைய சம்பவங்களையெல்லாம் நினைவுபடுத்துவார். இவர் மரியாதைக்காக முதலில் சிரித்தபடி தலையாட்டுவார். "எவ்வளவு காலமாச்சு நிறையப் பேசவேண்டும்.... வா ஒரு ரீ குடிக்கலாம்!" என்று நண்பர் இவர் கையைப் பிடித்து இழுப்பார். "இல்லை எனக்கு அவசரமாகப் போகவேண்டும். இன்னொரு நாள் பார்க்கலாம்" என்பார் இவர். நண்பர் மீண்டும் பழைய பகிடிச் சம்பவம் ஒன்றை நினைவுபடுத்தி "நாம் பேசுவதற்கு எவ்வளவு இனிய விஷயங்களிருக்கின்றன!" என்று இழுப்பார். இவர் "இல்லை பிறகு" என்று தயக்கத்தோடு அவர் மனம் நோகாமல் வெட்டிக்கொள்ளப் பார்ப்பார். நண்பரோ பாடசாலைச் சம்பவங்களை அசைபோட ஒருவர் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் உரிமையோடு கையைப் பற்றி இழுப்பார். இவர் கோபத்தின் எல்லைக்குப் போய், "விடுடா கையை!" என்று உதறிக் கொண்டு காதலி இருக்குமிடம் நோக்கி நடப்பார்.

நாம் வாழ்வில் சந்திக்கும் சில கணங்களைப் பதிவுசெய்து விடும் சிறுகதைகள் வாழ்நாள் முழுவதும் கூடவருகின்றன.

★✦

**★ சிந்தியா, ஹன்ஸி குரோன்ஜே?**

எஸ்.பாமரன், கண்டி.

தொடர்ந்து கிளறப்படும் உண்மைகள் வெளியானால் ஹன்ஸி ஒரு சிறிய கோடு தான் என்றாகி விடுவார்.

★✦

**★ கிரிக்கெட்டில் தற்போது நடுவர்களும் இலஞ்சம் பெறுகிறார்கள் என சந்தேகப்படுகின்றனரே?**

எம்.எம்.இமாம்ஹஸன், ஹெம்மாதகம.

படுவது இயல்பானதுதான்.

★✦

**★ "தெரியும்னு சொல்ற ஆம்பளைங்களை விட தெரியாதுன்னு சொல்ற ஆம்பளைங்களைத்தான் பொம்பளைங்களுக்கு ரொம்பப் பிடிக்கும்!" என்று சொல்கிறார்களே, உண்மையா?**

ப்ரசன்னா, வெள்ளவத்தை.

சிந்தியாவுக்கு அதெல்லாம் தெரியாது. சிம்ரனைத்தான் கேளுங்கள்.

★✦

**★ ஆசை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?**

எம். ராமமூர்த்தி, திருகோணமலை.

சக்திக்கேற்ற வேலை கிடைத்தால் போதும் என்று ஆசைப்படக்கூடாது. வேலைக் கேற்ற சக்தி கிடைத்தாக வேண்டும் என்று ஆசைப்பட வேண்டும்.

★✦

**★ அறியாமை நகைப்புக்குரியதா?**

எம்.பவானி, வவுனியா.

இல்லை, விஷயம் வேறுபடலாம். ஆனால் எல்லோரிடமும் அறியாமை உண்டு. அறியாமையில் தோன்றும் அப்பாவித்தனத்தில் நகைச்சுவை வருவதுண்டு. கவுண்டமணியிடம் செந்தில் கேட்கும் கேள்விகள் போல,

நகரத்திலேயே வளர்ந்த சிறுவன் தாய் தந்தையரோடு கிராமத்திற்குச் சென்றானாம். வாசலில் விளையாடிக் கொண்டிருந்தவன், அவசரமாக ஓடி வந்து, "டாடி! வாசல்ல ஒரு வண்டி பார்த்தேன். பெருசா சக்கரங்கள் இருக்குது. ரெண்டு மாடுகள் இழுத்துக் கொண்டு போகுது....."

"அதுக்குப் பேர் மாட்டு வண்டிடா!"

"அது சரி டாடி! பெட்ரோல் கொட்டிய படியே இருக்குதே? வண்டி நின்று விடாதா?"



'தெனாலி'யில் கமல்

**★ இந்தியா ஏன் தயங்குகிறது?**

எஸ்.திருவேங்கடம், இரத்தினபுரி.

"ஏன் தோற்றுத் திரும்பினீர்கள்?" என்று இந்திய அமைதிப் படையின் தளபதி ஜெனரல் கல்கட்டிடம் கேட்டபோது அப்போது அவர் சொன்ன பதில் "எங்களுக்கு யார் எதிரி யார் நண்பன் என்று தெளிவாகச் சொல்லப் படவில்லை." குழப்பம் தொடர்கிறது.

★✦

## ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

### அணியில் இடம்பெற்றார் ட்ராவிட்



**ஆ**சியக்கோப்பைக் கிரிக்கெட் போட்டியின் போது இந்திய அணியில் ராகுல் ட்ராவிட்டைச் சேர்க்க வேண்டாம் என இங்கிலாந்து கவுண்டி அதிகாரிகள், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையிடம் கேட்டுக் கொண்டனர். இருப்பினும் இந்திய அணியில் ராவிட் இடம்பெற்றிருந்தார்.

இங்கிலாந்து கவுண்டி அணிகளில் சாம்பியன் ஷிப் பேட்டியில் கென்ட் அணிக்காக ட்ராவிட் விளையாடி வருகிறார். அதனால் தான் அப்போட்டி முடியும் வரை இந்திய அணியில் ட்ராவிட்டை சேர்க்க வேண்டாம் என்று கேட்டிருந்தனர். ராவிட் இந்திய அணியில் இடம்பெறாவிட்டால் அந்த வாய்ப்பு காம்பளிக்குக் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்திய அணியின் கப்டன் கங்குலி, சுழற்பந்து வீச்சாளர் கும்பிளே ஆகியோரும் இங்கிலாந்தின் கவுண்டி அணிக்கான லங்கஷெயர், லெஸ்டர்ஷெயர் அணிகளில் விளையாடுகின்றனர்.

ஆசியக்கோப்பைப் போட்டிக்காக இந்திய அணியில் இடம் பெற்றனர்.

### கபில், அஸார், ஜடேஜா, மொங்கியா போட்டியில் பங்கேற்கக்கூடாது

**இ**ந்திய அணியின் பயிற்சியாளர் கபில்தேவ் மற்றும் அஸாருதீன், ஜடேஜா, மொங்கியா ஆகியோர் எந்தவொரு போட்டிகளிலும் பங்கேற்கக் கூடாது என்று தடைவிதிக்கக்கோரி ஒரிசா நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் சுமானி காந்தா மொஹந்தி என்பவர் இதற்கான மனுவைத் தாக்கல் செய்தார்.

'இந்திய அணியினரின் ஊழல்களை விசாரித்து வரும் இந்திய மத்திய புலனாய்வுத்துறையினர் தமது இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்கும் வரை மேற்குறிப்பிட்ட வீரர்கள் போட்டிகளில் பங்கேற்பதில் நியாயமில்லை என்று அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

### பாண்டே பிணையில் விடுதலை

**வ**ரதட்சணை கேட்டு மனைவியைத் துன்புறுத்தியதாக கைது செய்யப்பட்ட இந்திய கிரிக்கெட் வீரர் ஞானேந்திர பாண்டே பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

உத்தரப் பிரதேச மாநில கிரிக்கெட் கப்டனான ஞானேந்திர பாண்டே இந்திய அணியிலும் சில போட்டிகளில் விளையாடினார்.

அண்மையில் இவர் தனது மனைவி பிரதீபாவைத் துன்புறுத்தியதாகக் கைது செய்யப்பட்டார். இதில் பாண்டேயின் சகோதரர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டது.

"என் மனைவியைநான் அடிக்கவில்லை. என் மீது பொறாமை காரணமாகவே என் மீது வீண் பழி சுமத்தப்பட்டுள்ளது!" என்று தெரிவித்துள்ளார் பாண்டே.

இதற்கிடையே, விளையாட்டுத்துறையில் பாண்டேயின் சாதனையைப் பாராட்டி அவருக்கு வழங்குவதாக இருந்த உத்தரப்பிரதேச மத்திய அரசின் விருதை நிறுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாண்டே மீதான வழக்கில் நீதிமன்றம் இறுதித் தீர்ப்பு வழங்கும் வரையில் விருது அளிப்பதை ஒத்திப் போட உத்தரப் பிரதேச அரசு முடிவு செய்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## மாதுளம் பழத்துள் மாணிக்கம்!

**போ**ஜமகாராஜன் அன்றிரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்தார். எப்போது சூரியோதயம் நிகழும் என்று எதிர் பார்த்தவண்ணமிருந்தார்.

பொழுது புலர்ந்தும் புலராத வேளையில் காலைக் கடன்கள் அனைத்தையும் முடித்துக் கொண்டு ஆலயம் சென்று பிரார்த்தித்தார்.

சிம்மாசனத்திலுள்ள முப்பத்திரெண்டு பதுமைகளில் முதலாவது பதுமை கூறிய கதையே மிக நீளமாக இருந்தது. ஏனைய முப்பத்தியொரு பதுமைகளும் கூறும் கதைகள் எவ்வாறிருக்கப் போகிறதோ தெரியாது என்று சற்று விசனப்பட்டார். ஆலயத்தில் பூஜைகள் முடிந்ததும் மந்திரி, பிரதானிகள் புடை சூழ சிம்மாசனம் வைக்கப்பட்டிருந்த மாமண்டபத்தை அடைந்தார்.

சிம்மாசனத்தின் முன் நின்று தன் இஷ்ட தெய்வத்தை பிரார்த்தித்து விட்டு, சிம்மாசனத்தை வணங்கி இரு கைகளிலும் வர்ண மலர்களை அள்ளி சிம்மாசனத்தின் மீது சொரிந்தார். பின்னர் தனது வலது காலை எடுத்து முதலாவது படியில் வைத்தார்.

முதல் நாளன்று கதை சொன்ன

# மன்னாதி மன்னன்

08

விநோதரஞ்சிதப் பதுமை வாய் மூடி மௌனியாக இருந்தது. அப்போது போஜ மகாராஜாவுக்கு துணிவு ஏற்பட்டது. இரண்டாவது படிககட்டில் தனது இரு கால்களையும் பதித்தார்.

இரண்டாவது படிக்கட்டிலிருந்த மதனாபிஷேகவல்லிப் பதுமை கலகல வென்று சிரித்தது. "போஜ மா மன்னரே! விக்கிரமாதித்த மாமன்னனின் வீர தீர பராக்கிரம செயல்கள் பற்றி நான் கூறப் போகும் கதையைக் கேட்டு விட்டு, அத்தகைய ஆற்றல் உம்மிடம் இருக்கிறதா? என்பதை சீர்தூக்கிப் பாரும்?" என்று சொல்லிவிட்டு கதையைக் கூற ஆரம்பித்தது.

விக்கிரமாதித்தன் தங்கச் சிம்மாசனத்தில் அமர்ந்து ஆறு மாதங்கள் ஆட்சி செலுத்துவார். ஆறு மாதங்கள் முடிவடைந்ததும் காட்டுக்குச் சென்று விடுவார். அவருடைய அமைச்சரும் சகோதரருமான பட்டி எஞ்சிய ஆறு மாதங்களும், அந்தச் சிம்மாசனத்தில் ஏறாமலே அரச பரிபாலனம் செய்வார்.

முதல் ஆறு மாதங்களும் விக்கிரமாதித்தன் ஆட்சி செய்யும் காலத்தில் ஞானசீலன் என்ற ஒரு முனிவர் விக்கிரமாதித்தனிடம் வருவார். அவர் கொண்டு வரும் ஒரு மாதுளம் பழத்தை மன்னரிடம் கொடுத்து, பொக்கிஷத்தில் அதனை பத்திரமாக வைத்திருக்கும்படி கூறிவிட்டு, வேறு எதுவும் பேசாமல் போய் விடுவார். இவ்வாறு சில நாட்கள் தொடர்ந்து நடைபெற்றன.

அத்துறவி கொண்டு வரும் மாதுளம் பழங்களை அரண்மனையிலுள்ள பொக்கிஷத்தில் பத்திரமாக வைத்திருக்குமாறு பொக்கிஷத்தின் பொறுப்பதிகாரியிடம் மன்னர் கொடுத்து விடுவார்.

அன்றொருநாள் முனிவர் வரும் சமயத்தில் பொக்கிஷாதிபதி அரசவையில் இருக்கவில்லை. ஆகவே, விக்கிரமாதித்தன் மாதுளம் பழத்தை தன்னருகேயிருந்த ஓர் இருக்கையில் வைத்துவிட்டு தன் அலுவல்களைக் கவனித்தார்.

அரண்மனைத் தோட்டத்தில் வசித்து வரும் கருங்குரங்கு ஒன்று அப்போது அரசவைக்குள் புகுந்து விட்டது.

அரசரின் இருக்கைக்கு அருகில் மாதுளம் பழமொன்று இருப்பதைக் கண்ட அக்குரங்கு ஓடிச் சென்று அப்பழத்தை எடுத்தது. தன் வாயில் வைத்துக் கடித்தது. உடனே அப்பழத்தினுள் இருந்து மாணிக்கப் பரல்கள் தரையில் விழுந்து சிதறின. இவை தன் பசிக்கு உதவாதவை என்பதனால் குரங்கும் அதனை வீசி எறிந்து விட்டு ஓடி மறைந்தது.

அரசரும் அவையிலுள்ள அனைவரும் இக் காட்சியைப் பார்த்து வியப்புற்றிருந்தனர். மன்னர் காவலர்களை அழைத்து பழங் கொண்டு வரும் துறவி எங்கிருந்தாலும் தக்க மரியாதைகளுடன் அழைத்துக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார்.

இதற்கிடையில் பட்டணத்திலுள்ள மாணிக்க வியாபாரி ஒருவரை அழைத்து வரும்படி மன்னர் அமைச்சருக்குப் பணித்தார்.

உஜ்ஜைனி நகரிலுள்ள சிறந்த மாணிக்க வியாபாரி அரசவைக்கு அழைத்து வரப்பட்டார். மாதுளம் பழத்திலிருந்து வெளிப்பட்ட மாணிக்கக் கற்களை அந்த வியாபாரி பரிசீலனை செய்தார். நீண்ட நேரம் பரிசோதனை செய்த பின்னர். "மாமன்னவரே! இந்த மாணிக்கக் கற்களுக்கு பெறுமதி காண்பது மிகவும் கடினம். இவை விலைமதிப்பற்றவை. இங்கிருந்து கடல் மார்க்கமாக கிழக்கே பல தீவுகளைக் கடந்து சென்றால், மாணிக்கத் தீவு என்றொரு தீவு இருக்கிறது. அந்தத் தீவில் உள்ள பூதங்களிடம் தான் இத்தகைய மாணிக்கக் கற்களைக் காணமுடியும்?" என்று கூறினார்.

முனிவரை அழைத்து வரச் சென்ற காவலர்கள் சற்று நேரத்துக்குள் துறவியைச் கண்டு அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். அரசர் தன்னிருக்கையை விட்டெழுந்து துறவிக்கு உரிய மரியாதை செலுத்தி ஆசனமளித்து இருக்கச் சொன்னார்.

"ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதுளம் பழத்தைக் கொண்டு வந்து என்னிடம் தந்துவிட்டு, எதுவுமே பேசாமல் போய் விடுகிறீர்களே? இன்று தான் நீங்கள் கொடுத்த மாதுளம்பழம் தற்செயலாக உடைந்ததில் அதற்குள் மாணிக்கப் பரல்கள் காணப்பட்டன. தாங்கள் ஏற்கனவே கொண்டு வந்து கொடுத்த பழங்களும் பொக்கிஷத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றிலும் இவ்வாறானால் இவற்றை எல்லாம்



எதற்காக என்னிடம் கொண்டு வந்து தருகிறீர்கள்? காரணத்தை அறியலாமா?" என்று விக்கிரமாதித்தன் ஞானசீல முனிவரிடம் கேட்டர்.

முனிவர், "மன்னவா, ஒவ்வொரு பழத்திலும் நவரத்தினங்களில் ஒவ்வொரு வகையும் நிரப்பப்பட்டுள்ளன. இவற்றுக்கு விலை மதிப்பே கிடையாது. இவற்றை உமக்கு நான் கொடுப்பதில் ஓர் இரகசியம் இருக்கிறது. அதனை அரசவையில் என்னால் வெளிப்படுத்த முடியாது. உஜ்ஜைனி மாநகரை அடுத்துள்ள கானகத்தில் ஒரு காளி கோயில் இருக்கிறது. அங்கு நான் ஒரு வேள்வி நடத்துகிறேன். அந்த வேள்வி அடுத்து வரும் பௌர்ணமி தினத்துக்கு நான்காம் நாள் நிறைவுறும். அன்றைய தினம் நீயும் தனியாக அங்கு வந்தால், முழு இரகசியத்தையும் உம்மிடம் சொல்லுவேன்!" என்று முனிவர் கூறினார்.

இதனைக் கேட்ட விக்கிரமாதித்தன், மிக்க மகிழ்ச்சியுடன், "கட்டாயம் வருவேன்!" என்று உறுதி கூறினான்.

பௌர்ணமி கழிந்து நான்காம் நாள் மாலையில் மன்னர் தனது குதிரையில் ஏறி முனிவர் கூறிய அடையாளத்தைக் கொண்டு காளி கோயிலைப் போய் அடைந்தார்.

விக்கிரமாதித்தனின் இஷ்ட தெய்வமும் காளிதேவியே என்பதனால் ஆலயத்தை அடைந்ததும் குதிரையை விட்டு இறங்கி, ஆலயத்தின் முன்னின்று அன்னையைத் துதித்தார். மன்னரைக் கண்ட முனிவர் ஞானசீலன் மிக்க மகிழ்ச்சியடைந்தவராக, மன்னரை வரவேற்று உபசரித்தார். "மன்னவரே! தாங்கள் என்னுடைய வேள்வியில் பங்குபற்ற வந்தமைக்காக பெருமகிழ்ச்சியடைகிறேன். நான் சொல்லும் விடயத்தை நன்றாகக் கேளும். பிறகு அதன்படி செய்ய வேண்டும். சம்மதமா?" என்று பீடிகையுடன் முனிவர் ஞானசீலர் மன்னிடம் கேட்டார்.

மன்னர் "எத்தகைய காரியமாக இருந்தாலும் தயங்காமல் என்னிடம் கூறுங்கள். எந்தத் தடையையும் மீறி, எதையும் செய்ய நான் தயங்கமாட்டேன்?" என்று உறுதியளித்தார்.

"இங்கிருந்து மேற்காக இரண்டு காததூரம் சென்றால், ஒரு மயானம் இருக்கிறது. அந்த மயானத்தின் மத்தியில் உள்ள முருங்கை மரத்தில் ஒரு வேதாளம் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. சாதாரணமாக அந்த வேதாளத்தை எவரும் அணுக முடியாது. ஆனால் நீரோ மகா வீரன். உம் ஒருவனால் தான் அந்த வேதாளத்தை பிடித்துக் கொண்டு வர முடியும். உடனடியாகச் சென்று அந்த முருங்கை மரத்திலிருந்து வேதாளத்தைப் பிடித்துக் கொண்டு வாரும். அங்கு போகும் போது குதிரை மீதேறிச் செல்ல முடியாது. கால் நடையாகவே செல்ல வேண்டும். காளிகாம்பாளின் துணை உனக்குண்டு. வெற்றிகரமாக இக்காரியத்தை செய்து முடித்துவிட்டு வேதாளத்துடன் வருவாயாக!" என்று விக்கிரமாதித்தனை முனிவர் வழி அனுப்பினார்.

விக்கிரமாதித்தன் உருவிய வாளுடன் மிகக் வகமாக கானகத்துள் புகுந்து நடந்து சென்றான்.

முனிவர் கூறியபடி சுடலையின் நடுவில் நின்ற முருங்கை மரத்தில் வேதாளம் ஒன்று தலைக்கீழாக தொங்கியது. விக்கிரமாதித்தன் கால தாமதமின்றி மரத்தின் மீதேறி பக்குவமாக மரத்தோடு வேதாளத்தைப் பிணைத்திருந்த கயிறுகளை அறுத்தெறிந்துவிட்டு அதனைத் தன் தோள் மீது சுமந்தவண்ணம் தரையிறங்கினான். அப்போது....

*(மன்னன் வருவான்...)*

இராஜகுமாரன்

# கிரிக்கெட் சூதாட்டத்தில்

## கவுண்டமணி–செந்தில்


**நாடெங்கும் பரவலாகத் தகிக்கும் வெய்யில். எங்கு பார்த்தாலும் கிரிக்கெட் சூதாட்டம் குறித்து அனல் பறக்கும் பேச்சுக்கள். கிரிக்கெட் சூதாட்டத்தில் கவுண்டமணி செந்தில் சம்பந்தப்பட்டால் எப்படியிருக்கும்? 'கிச்சு கிச்சான்' கற்பனையில் இதோ:**

**மா**லை நேரம் வெளியே சென்று விட்டு வீடு திரும்புகிறார் கவுண்டமணி. வீட்டைப் பார்த்ததும் கவுண்டாவுக்கு ஏகப்பட்ட அதிர்ச்சி. காரணம் வீடு முன்பாக ஏகப்பட்ட செருப்புக்கள் உள்ளே நுழைய முடியாதளவுக்குக் கூட்டம். நடுநாயகமாய் டீ.வி. பெட்டி. பக்கத்திலேயே 'ரிமோட்' சகிதம் செந்தில். இன்னொரு கையில் செல்ஃபோன் போன்ற ஒரு கருவி.

**செந்தில்:** ஆல் சைலன்ஸ்! இன்னும் கொஞ்ச நேரத்தில ஷார்ஜாவில் இந்தியா–பாகிஸ்தான் மேட்ச் ஆரம்பிக்கப் போகுது. டாஸ் ஜெயிக்கிறது யாருங்கிறதில் ஆரம்பிச்சி, யார், யார் எத்தனை ரன் எடுப்பாங்க, எத்தனை விக்கெட் எடுப்பாங்கறதுவரை 'பெட்டிங்' கட்டலாம். சொன்னபடி நடந்திட்டால்... பணம் டபுளா உங்களுக்கு. இல்லாட்டி மொத்தப் பணமும் கம்பெனிக்குத்தான்.

*(கைவசமிருந்த செல்ஃபோனின் பட்டன்களைத் தட்டியபடி)* "ஹலோ ரவிசாஸ்திரியா! நான்தான் பேசறேன்! இன்னும் 5 நிமிஷத்தில மேட்ச் ஆரம்பிச்சிடுமா! வெரிகுட். கிளைமேட்டெல்லாம் நல்லா இருக்குதில்லை. அசார் பாய் எப்படியிருக்காரு? ஓகே.. ஓகே... நான். மறுபடியும் கான்டாக்ட் பண்றேன்... மேட்ச் முடிஞ்சப்புறம் ஜடேஜா தம்பியை என்கிட்ட பேச சொல்லுங்க...

*(வந்த கூட்டம் ஆச்சரியத்தில் வாய்பிளந்து நிற்க, சூதாட்டத்தின் முதற்கட்டம் ஆரம்பமாகிறது)*



**செந்தில்:** சரி.. சரி.. டையமாகுது. டாஸில் யார் ஜெயிக்கப்போறா? பணம் கட்டறவங்க உடனே கட்டுங்க... மினிமம் 100 ரூபாய்...

*(பலரும் இந்தியா ஜெயிக்குமென கட்ட, செந்தில் ரிமோட்டைத் தட்டிவிடுகிறார். சாஸ்திரி போட்ட டாஸில் இந்தியா தோற்றுப்போக, செந்திலுக்கு வாயெல்லாம் பல்)*

**கவுண்டமணி:** ஐயய்யோ... எங்கேயிருந்தோ வாடகைக்கு எல்லாத்தையும் எடுத்திட்டு வந்து, இந்த 'டகுல் பார்ட்டி' ஏதோ 'கில்மா' வேலை பண்றான்னு மட்டும் தெரியுது. ஆனா அது என்னன்னு வெளங்கமாட்டேங்குதப்பா...

*(இதற்கிடையில் சச்சின் எத்தனை ரன் அடிப்பார்? வாசிமுக்கு எத்தனை விக்கெட்? என்கிற ரேஞ்சில் சூதாட்டம் சூடுபிடிக்க சொல்லிவைத்தாற்போல் செந்தில் காட்டில் அடைமழை)*

**செந்தில்:** இப்பதான் பெட்டிங்கோட உச்சக் கட்டம். இந்தியா ஜெயிக்க 4 ரன் தேவை. ஆனால் 2 பந்துதான் மிச்சமிருக்குது. இப்ப சொல்லுங்க.. இந்தியா ஜெயிக்குமா? ஜெயிக்காதா?

*(பலரும் ஜெயிக்காது என பந்தயம் கட்டுகிறார்கள். எதிர்பாராத விதமாகக் கடைசி பந்தில் அகர்கர் அடித்த ஃபோரில் இந்தியாவிற்கு வெற்றி கிடைக்க, செந்திலுக்கு உற்சாகம் தாள முடியவில்லை. பணத்தைப் பறிகொடுத்த கூட்டம் சோகத்தோடு கலைய ஆரம்பிக்க, இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த கவுண்டரின் மூளையில் ஒரு திடீர் மின்னல்)*

**கவுண்ட:** ஆல் ஸ்டாப்! அப்படியே உட்காருங்க. உங்க நல்லதுக்குத்தான் சொல்றேன்... மீறிப்போனா அப்புறம் நடக்கிறதே வேற..

**செந்தில்:** மிஸ்டர் இது ரொம்ப டூமச்.. டீஸன்டான என் கஸ்டமர்கள் கிட்ட இப்படி வம்பு பண்றது நல்லா இல்ல. இதனால பிஸினெஸ் உறவு பாதிக்கும்...

**கவுண்ட:** கிட்ட நெருங்க முடியல. குடலைப் புரட்டுது. இவனுங்கெல்லாம் டீஸன்ட் கஸ்டமர்ஸ். அவனுங்கக்கிட்ட உனக்கு இன்டர்நேஷனல் லெவல்ல பிஸினெஸ். மகனே... இப்ப பாரு, வேடிக்கையை... நீயும் உன் பிஸினெஸூம் என்ன பாடுபடப்போறீங்கன்னு...

*(சுபாலென டீ.வி. பெட்டிக்கு பின்னால் பாயும் கவுண்ஸ் அங்கே மறைத்து வைக்கப் பட்டிருந்த டெக்கை கையில் தூக்கியபடி)* அட அடுப்பு வாயனுங்களா! நீங்க இப்பப் பார்த்தது லைவ் மெட்சில்ல. 98-ம் வருஷம் நடந்த மேட்சு. அத்தோட எடிட் பண்ணின கேசட்டை இந்த தீஞ்சத் தலையன் டெக்கில போட்டு உங்க தலையில மிளகா அரைச்சிருக்கான். மேட்சை ஏற்கனவே பாத்துட்டதால அதற்கேத்த மாதிரி பெட்டிங்கை செட்டப் பண்ணி இருக்கான்.

**கூட்டத்திலிருந்த ஒருவர்:** அப்போ டீ.வி பெட்டியில லைவ்வுன்னு தெரிஞ்சிது!

**கவுண்ட!** அப்ப மட்டுமா தெரிஞ்சிது! இப்பவும் தான்... இப்பப் பார்... இங்கே பார்...

*(டீ.வி.யை நெருங்கி கவுண்ஸ் இடதுபுற ஓரத்தை நகத்தால் சுரண்ட அங்கே ஒட்டப் பட்டிருந்த Live என்கிற வாசகத்தைக் கொண்ட ஸ்டிக்கர் பெயர்ந்து வருகிறது)*


**கூட்டம்:** அடப்பாவி! இப்படி ஏமாத்திப் புட்டானே!

**கவுண்ட:** ஆமாங்கடா... எல்லாம் முடிஞ்ச பிறகு இப்படி கோரஸ் பாடுங்க... இங்க பார்... இது செல்ஃபோனாக்கும். இதில இவரு ஷார்ஜாவுக்குப் பேசினாராக் கும்... பிளாட்பார்மில் 10 ரூபாய்க்கு வாங்கின பிளாஸ்டிக் டப்பாடா இது...

*(ஆவேசமான கூட்டம் செந்திலை நையப் புடைத்ததோடு, தங்கள் பணத்தையும் பறித்துக்கொண்டு கிளம்புகிறது. ரத்தக்காயங்களுடன் தனது 'டிரேட் மார்க் திருதிரு முழியோடு' செந்தில் அப்பாவியாக நிற்க...)*

**கவுண்ட:** மகனே... செய்யிறதையும் செஞ்சிட்டு ஒண்ணுந் தெரியாத மாதிரி நிற்கிற... அது எப்பிடிடா.. இந்தத் தீஞ்சத் தலையிலிருந்து இப்படி விதவிதமா கிரிமினல் ஐடியா கிளம்புது? உன்னை மாதிரி ஆளுங்கள ஊருக்குள்ள விட்டு வைக்கிறதே பாவம்டா.. உன்னை.. மகனே... ஓடாதே! டேய் ஓடாதே..

*(வேட்டியை மடித்துக் கட்டியபடி கவுண்ஸ் பாய, டவுசரை இறுக்கிப்பிடித்தபடி ஓட்டமெடுக்கிறார் செந்தில்)*



இரத்தினங்கள்
Accredited by National Gem & Jewellery Authority
அருள் ஜுவலர்ஸ் ARUL JEWELLERS

# மிகப் பெரியது



← இலண்டன் மாநகரில், தேம்ஸ் நதிக்கரையில் ஜுபிலி பூங்கா உள்ளது! இதில் சுழலும் இராட்சதச் சக்கரம் ஒன்றினை நிர்மாணித்துள்ளனர். பிரிட்டிஷ் விமான சேவை நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இச்சக்கரத்தில் மொத்தம் 32 கூட்டங்கள் உள்ளன. இவற்றில் ஒவ்வொன்றிலும் 25 பயணிகள் இருக்கலாம்.

இந்தச் சக்கரத்தின் உயரம் 136.1 மீட்டர் (446 அடி). இதன் விட்டமும் ஏறத்தாழ 446 அடிதான். இச்சக்கரம் சுழலும் போது உயரப்போகும் கூட்டங்களிலிருந்து பார்ப்பவர்கள் சுமார் 30 மைல் தூரம்வரை பாக்க முடியும். இலண்டனிலுள்ள 4வது உயரமான அமைப்பு இதுவாகும்.

இராட்சதச் சக்கரம் கீழேயிருந்து மேலே செல்லும் போது ஒருவகை மன உற்சாகம் ஏற்படும். புதியவர்களுக்கு சிலவேளை மயக்கமும் வந்து விடும். குறிப்பிட்ட ஒரு சில நிமிடங்கள் இச்சக்கரம் சுழலும்.

இலண்டன் மாநகரிலுள்ள பாராளுமன்றக் கட்டடத்திலுள்ள பிக்பென் கடிகாரத்தையும் படத்தின் இடது புறம் பார்க்கலாம்.



SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

# வித்தியாசம்

↓ இப்போதெல்லாம் தமிழ்த்திரைப்பட இரசிகர்கள் படங்களில் புதுமை, புரட்சி, புத்துணர்ச்சி ஆகியவற்றையே எதிர்பார்க்கிறார்கள். இப்போது வெற்றி பெற்றுள்ள பல படங்களின் மூலம் இது நிரூபணமாகியுள்ளது.

அஜித் நடிக்க 'சிட்டிசன்' என்ற படம் ஒன்று தயாராகிறது. படத்திற்கு இப்போதே ஓர் எதிர்பார்ப்பை ஏற்படுத்த படத்தின் இயக்குநர் சரவணசுப்பையா அமெரிக்க நாணயமான டொலர் நோட்டு வடிவத்தில் அழைப்பிதழை வடிவமைத்துள்ளார்.




# கவர்ச்சிக் கார்கள்




→ இரண்டாயிரமாம் ஆண்டின் உலக மோட்டார் கண் காட்சி அண்மையில் தென்கொரிய தலைநகர் சியோலில் நடைபெற்றது. 8 நாட்கள் நடந்த இந்தக் கண்காட்சியில் உலகளாவிய ரீதியில் 18 வாகன உற்பத்தி நிறுவனங்கள் பங்கு பற்றி விதவித வாகனங்களை பார்வைக்கு வைத்தன.

சொகுசுக்கார்கள், விளையாட்டுக்கார்கள் (பொம்மைக் கார்கள் அல்ல) அதி நவீன மோட்டார் சைக்கிள்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் கண்காட்சியில் இடம் பெற்றன.

படத்தில் இருக்கும் 2 கவர்ச்சி கார்களும் இத்தாலிய நாட்டின் கார் நிறுவனம் ஒன்றால் தயாரிக்கப்பட்டவை. (அனுப்பு: நியாஸ்-சியோல்)

# சாப்பிட்டுச் சாதனை




← படத்தில் காணப்படும் ஜப்பானியப் பையன் ஒரு சாப்பாட்டு ராமன் என்றால் யாராவது நம்புவார்களா? உண்மையில் இவன் ஒரு சாப்பாட்டு ராமன் தான் என்பதை அண்மையில் நிரூபித்துவிட்டான்.

நியூயோர்க் நகரில் 1916ம் ஆண்டு முதல் சொசேஜ் என்ற இறைச்சியை உள்ளடக்கிய பாண், தின்னும் போட்டி வருடா வருடம் நடைபெறுகிறது. இவ்வருடம் நடைபெற்ற இப்போட்டியில், மிகமெல்லிய உடல்வாகு கொண்ட நோஞ்சானான ஜப்பானைச் சேர்ந்த ஹிரோஃபுமி நக்கஜிமா என்ற பையன் முன்வந்தபோது, பார்வையாளர்கள் எள்ளி நகையாடினார்கள். ஆனால் போட்டி தொடங்குவதற்கான மணி அடித்ததும் கணவேகத்தில் சொசேஜ்களை மளமளவென்று வாயினுள் நுழைக்க ஆரம்பித்து விட்டான். 12 நிமிடங்களில் 19 உருப்படிகளைத் தின்று முடித்து வெற்றி பெற்றுவிட்டான். இரண்டாவதாக வந்த மனிதரால் 17 உருப்படிகளுக்கு மேல் விழுங்க முடியவில்லை.

# கொண்டாட்டம்



↓ ஜப்பானில் 1998ல் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றன. ஒலிம்பிக் விளையாட்டுக்களின் ஆரம்பத்தில் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு, பலதரப்பட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெறுவதுண்டு. ஜப்பானில் இடம் பெற்ற பள்ளி மாணவிகள் கலந்து கொண்ட ஒரு குழு நடனத்தையே படத்தில் பார்க்கிறீர்கள்.

ஒலிம்பிக் விளையாட்டு, உலக மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரு மகத்தான சாதனையாக கருதப்படுகிறது. இக்கருத்தினை வெளிப்படுத்துவதற்கு ஏற்ப பூகோள வடிவத்தை மத்தியில் வைத்து, நூற்றுக் கணக்கில் மாணவிகள் ஆடிப் பாடி மகிழ்வதையே காணக் கூடியதாக இருக்கிறது.




**செல்வி ரொஷானி | 26.05.2000**

கொலன்னாவையில் வசிக்கும் திரு. கேபிரியல் (குமார்) திருமதி. சுகந்தி ரமீனா தம்பதிகளின் செல்வப் புதல்வி ரொஷானி தனது முதலாவது பிறந்தநாளை (26.05.2000) அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, இத்தாலியில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, கொலன்னாவையில் வசிக்கும் அப்பம்மா, மாமா, மாமி, இத்தாலியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, சித்திமார்கள், மற்றும் தாத்தாமார்கள், பாட்டிமார்கள், பூட்டிமார்கள், பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், சித்தப்பாமார்கள், சித்திமார்கள், மச்சான்மார்கள், மச்சாள்மார்கள், மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் புனித அந்தோனியார் அருள்பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறார்கள். தகவல்: (இத்தாலி தாத்தா குமின்டன்)